மேற்படிபாரதம்-சல்லியபர்வம்-பதினெட்டாம்
நாளையாறு, சென்னை-20.
பொர்சருக்கம்-௭அ-வது-கவி.

நிறத்தநிலகிரியாக்கவெயிரு ... ... *
நிலத்தில்லிழ்ருருலத்தினே ... . *
னுர்த்தமிவுமூயிர்த்துமாயனெ .. * *
டுருக்கூவாசகவுமுசொல்வான் ... ... *
குறிட்டவுன்விலையாக்கொடாருயிர்... ... *
ருத்தமாமுமக ருத்தினு ... ... *
யறத்துருடன் றத்தனிர்மையினை ... *
யப்பா யறிகிறபோ ... ... *

இதின் தாத்பரியம்.

பூமியில் விழுந்ததுரியோதனனுடைவன் கிருஷ்டணனைக்கோபித்துச் சொல்லுவான்குறிப்பினால்-அரிச்சுனனைக்கொல்லுவெனுயிர் போகக்கற்பித்தாய், நாமமாக யுத்தஞ்செய்யப்பட்டதினையறம்பயிடைய ரதிவாரோவென்று சொல்லுவான்பதாம்.

மேற்படிசருக்கம்- ௭அ-வது கவி.

மலைத்தபோர்தொறுமெனக்கு செய்தி *
மற்றுளோர்செயநினைப்பரோ ... ... *
குலத்திலேயிழிகுலத்தரானவர் ... *
குறிப்பிலாதிவைபிறக்குமோ ... ... *
சலத்தினுல்வினையியற்றுவார்முடி ... *
தரித்தகாவலுந்தராடோப்பரோ ... *
நிலத்தில்வாழ்வவர்பிறக்கொடாயினி ... *
நினைத்தகாரியமுடிக்கியே ... ... *

இதின்தாத்பரியம்.

யுத்தஞ்செய்யுந்தோறும் எனக்கு நீ செய்தபிழைமற்றவர்கள் செய்யநினைப்பார்களா சாதிகளில்தாழ்ந்தவர்கள்குறிப்பினுலேகாட்டிவெல்லாமல் வேறேவருமோ பொய்யாகியசூதினுலொருதலையத்தை மூடிக்கப்பட்டவர்கிரீடந்தரித்த அரசர்களுடன்வெய்யோன்

ரோ பூமியையாளப்பட்டஅரசானது பாண்டவர்கள்பெற நீதினைத்த காரியத்தை முடித்தாயென்று துரியோதனன்சொன்னானென்பதாம்

இந்தக்கவியில்கிருஷ்ணன்பிறந்தது ராஜகுலமாயிருந்தபோதிலும் இடையரிடம்வளர்ந்ததால் அதைப்பற்றியிழிகுலத்தோனென்று துரியோதனன்சொன்னதேதவிரவேறல்ல.

இதிற்குறித்துக்காட்டிய நூல்களில் இடையனை முல்லைநிலத்துக்கு உரியவனென்றும் புன்பிறப்படையவனென்றும் காட்டிவாழ்ந்துமாடுகளைக்காக்கப்பட்டவனென்றும் பொதுவனென்றும் இழிந்தவனென்றும் அற்பயிடையனென்றும் அறிவில்லாதவனென்றும் சொன்னநூல்கள்போல் இன்னுமனந்தநூலிலுஞ் சொல்லியிருக்கின்றதேதவிரகோவைசியனென்றுபெந்தநூலிலுஞ்சொல்லாதிருக்கஇவர்களைக்கோவைசியனென்றுகற்பித்தஅண்டப்புரட்டருக்கண்ணனுகியசாஸ்திரப்புரட்டர் பலநூல்களையுப்டாற்கவில்லையோ (அல்லதுபார்த்துப் புரட்டவகையில்லாமல் விட்டுவிட்டாரோ)தெரியவில்லை.

இரண்டாவதுதிகாரம்.

உ-வது-பிரிவில்-பாலைநிலமாக்கள் வேடனென்றுதிருஷ்டாந்தம் வரப்பட்டது,

இதுவுமல்லாமல் பஞ்சநிலத்தில் வசிக்குங்குடிகளிலொன்றுகிய முல்லைநிலத்துக்குரிய இடையனைக்குறித்து இவர்கள்பூவைசியரல்லவென்றும் மேற்படிபஞ்ச நிலத்தில்வசிக்கும் பஞ்சசூத்திரர்களில் ஒன்றென்றும் சிலநூல்களால் திருஷ்டாந்திரங்காட்டியிருப்பதால்இந்தமுல்லைநிலம்நீங்கலாகமற்றநான்கு நிலத்தில்வசிக்குங் குடிகளுக்கும்முல்லைநிலத்திடையருக்குமுண்டானதிருஷ்டாந்திரம்போல் நூல்களிலுண்டோவென்று சிலரியோசிக்கயிடந்தருவதாலும் மற்றநான்குகுலத்துக்குரியவரின்னாரென்றும் அவர்கள்செய்யுந்தொழில்களின்னதென்றும் யாவரும் எளிதி லுணர்ந்துக்கொள்ள வேண்டிய அவஸ்யமாதலால் பலநூல்களால் அதற்குரியசில உதாரணம்வ

பாலைநிலத்தில்வசிக்குங்குடிகளாகியவேடர்களைக்
குறித்துவருமாறு.

பெரியபுராணம்-கண்ணப்பநாயனார் சரித்திரம்-கூவது-கவி,

குன்றவரதனில்வாழ்வார் கொடுஞ்செவிருமலியார்த்த *
வன்றிறல்விளவின்கோட்டு வார்வலைமருங்குதீரங்கப் ...*
பன்றியும்புலியுமென்னுங்கடமையுமானின்பார்வை... *
அன்றியும்பாறைமுன்றி லைவனமுணங்குமெங்கும்... *

இதின்தாத்பரியம்,

குன்றவரானவேடர்கள் தங்கள்வீட்டுநாயானது குலைக்கும் வோசையுடன் விளாமரத்தின் கொம்பில் வலையானதுதொங்க பன்றி புலி-கரடி-கடைமான்இதுகள் பார்க்கப் பெறுகிறதுமல்லாமல்கற்பா றையாகியமுற்றத்தில் மலைநெல்லானதுவுலருமென்பதாம்.

மேற்படிகண்ணப்பநாயனார்சரித்திரம் ௯வது கவி.

ஆறலைத்துண்ணும்வேட ரயற்புலங்கவர்ந்துகொண்ட *
வேறுபல்லுருவின்மிக்கு விரவுமானினைகளன்றி .. ... *
ஏறுடைவானந்தன்னி லிடிக்குரலெழிலியோடு ... ... *
மாறுகொண்முழக்கங்காட்டு மதக்கைமாதினைகளெங்கும்

இதின்தாத்பரியம்,

வழிப்போக்கனையடித்துப்போசனஞ்செய்யும் வேடருடைய தினைப்புனங்களைக்கவர்ந்துகொண்டபல ரூபங்களையுடையமான்கூ ட்டங்களல்லாமல்இடிகள்போற்கற்சிக்கும் ஆனைக்கூட்டங்களும்மே ற்படிபுலத்தில்நிறைந்ததென்பதாம்.

மேற்படிபுராணம்-௭வது-கவி,

மைச்செறிந்தனையமேனி வன்றொழின்மறவர்தம்பால்
அச்சமுமருளுமென்று மடைவிலாருடைவன்றொலார்
பொச்சையினறவுமூனின் புழுக்கலுபுணவுகொள்ளு
நச்சழற்பகழிவேடர்க் கதிபதிநாகனென்பான்

ஹரிசந்திரகசாரம்.

இதின்தாத்பரியம்,

[illegible]றுத்தமேனியையும், வலியதொழிலையுமுடைய மறவராகிய [illegible]ர்தங்களிடத்தில் பயமும்கிருபையும் என்றும்பொருந்தாதவ [illegible]லியதேரு டையுடையவரும்கள்ளையும்மாமிசமும் உலகாக [illegible]பவரும் விவிமூட்டிய அம்பையுடையவராகியவேடருக்கு அ[illegible]நாகனென்பவனென்பதாம்.

இதுவுமல்லாமல் நாலாயிரபிரபந்தம் முதலாயிரத்தில் பெரி[illegible]யாழ்வாரிசொன்ன கண்ணனையன்னைகன்றின்மின் போக்கியதென்ன [illegible]மனக்கணிரங்கியிசைத்தல்-உ-வது கவி-

பற்றுமஞ்சட்பூசிப் பாவைமாரோடுபாடியில்..... *
சிற்றில்லிழைத்தெங்குந் திமைசெய்துதிரியாமே *
கற்றுத்துளியுடைவேடர் கானிடைக்கன்றின்பின் *
எற்றுக்கென்பிள்ளையைப்போக்கினேனெல்லேபாவமே*

இதின்தாத்பரியம்.

மஞ்சளைப்பூசிய பெண்களோடுஆயர்பாடியில்சிற்றில்விளை[illegible]யாடைக்கெடுத்து தீங்குசெய்து திரியாமல் பொய்யும்புழுதியும் [illegible]ருந்தினவேடர்கள் சஞ்சரியாநின்ற பாலைவனங்களில்கன்றுக்கு [illegible]பின்பென்பிள்ளையையனுப்பினேனிதென்னபாவமென்

இதுவன்றியும்-அரிச்சந்திரபுராணம்நாட்டுச்சிறப்பு-யெ வது-கவி.

தேருமாறுணராச்சின வேடர்பேய்த் .. ...*
தேருமாறுமுட்டேறறும் பாலையில் ... ... *
[illegible]ருமாதரியாளையு முந்திமான் ... ...*
[illegible]ருமாதரிதாடொழுதுற்றதே ... ... *

இதின்தாத்பரியம்,

கின்ற அந்தநிலத்துக்குரிய தற்கையினது பாதத்தை வணங்கிச்சரணு நதியானதுபோயிற்றென்பதாம்,

அதுவும்-மேற்படி அரிச்சந்திரபுராணம் - வேட்டஞ்செய்காண்டம்.

சுவது-கவி.

அந்தவேலை யருஞ்சுரம்யாவினும் ... *
சந்தன்மேவுகுறிஞ்சிக் கடத்தினும் ... ... *
குந்தம்வேல்சிலை கூன்குணில்கொண்டவன் *
வந்தவேடர்வரவு விளம்புவாம் ... ... *

இதின்தாத்பரியம்.

அந்தசமயத்தில் அரிதானபாலைவனம் யாவினும் சுப்பிரமண்ய ர் விற்றிராதின்ற குறிஞ்சியாகியமலையிடத்தினும் ஈட்டி - வேல் வில் லு வளைதடி கைக்கொண்டுவந்த வேடர்வரவைச்சொல்வோ மென்ப தாம்.

இந்தக்கவியில் பாலைநிலமாக்களும்குறிஞ்சிநிலமாக்களும் ஒன் றென்று சொல்கிறபடிஅவர்கள்ஒருஜாதியானபோதிலும் வித்தியா சமுண்டுஆதலால்தான் குறிஞ்சிநிலமாக்களென்றும் பாலைநிலமாக்க ளென்றும்பிரித்துச்சொல்லியிருக்கின்றது.

பெரியபுராணம் பிரபந்தம்அரிச்சந்திரபுராணமாகியமூன் றுநூல்களாலும்பஞ்சநிலத்தில்வொன்றாகியபாலைநிலத்துக்குரியவர் வேடர்களென்றும் -வழிபறிப்பவரென்றும்பயமும்கிருபையுமில்லா தவரென்றும் மறவரென்றும் சொல்லியிருப்பதுபோல்இன்னுமனந் தநூல்களிலும்சொல்லியிருக்கின்றது.

உ-வது - அதிகாரம் ௩-வது-பிரிவு

பஞ்சநிலத்தில் ஒன்றாகிய குறிஞ்சிநிலத்தில் வசிக்குங்குடிகளா கியவர்கள் குறவர்களென்று உதாரணம்வருமாறு.

சங்கத்தலைவர்களில் ஒருவராகிய கல்லாடர்செய்தகல்லா ம்-௩-வது-கவி.

சூல்முறைக்கூறிமறுத்தல்,
பெருமறைநூல்பெறக் கோன்முறைபுரக்கும்... .....
பெருந்தகைவேந்தனருங்குணம்போற

ஜாதகசங்கிரகசாரம்.

மணந்தோர்க்கமுதுந் தணர்ந்தோர்க்கெரியும் *
புக்குழிப்புக்குழிப் புலன்பெறக்கொடுக்கு ... *
மலையத்தமிழ்க்கால் வாவியிற்புகுந்து ... *
புல்விசழ்த்தாமரைப் புதுமுகையவிழ்ப்ப ... *
வண்டினம்படிந்து மதுக்கவர்ந்துண்டு ... *
சேயிதழ்க்குவளையிலிலைநிழையுறங்கு ... .. *
நிலைநீர்நாட னிசையிவளே ... ... *
மலையுறைபகைத்து வானுறைக்கணக்கும் .. ... *
புட்குலஞ்சூழ்ந்த பொருட்புடைக்குறவர்தம் *
பெருந்தேன்கவருஞ் சிறுகுடிமகளே .. *
நீயே யாயமோடாரிப்ப வரிகிணைபுடைக்கி ... *
மாயாநல்லறம் வளர்நாட்டினையே ... *

இவளே-தொண்டகந்துவைப்பத்தொழிற்புனல்வளைந்து
பகட்டினங்கொல்லும் பழிநாட்டவளோ ... ... *
நீயே எழுநிலைமாடத்திளமுலைமகளீர் ... ... *
நடுஞ்செயத்தரளவடந்தெறநகையோ ... *
இவளே கடம்பெறுகரிகுல மடங்கல்புக்கசழத் *
தெறித்திடுமுத்தந் தொட்டுவைப்பினளே ... *
நீயே-யணிகெழுநவமணி யலரொன்றத்தொடுத்த *
பொற்கொடித்தேரிமிசைப் பொலிகுவையன்றே ... *

இவளே-மணிவாய்க்கிள்ளை துணியாதகற்ற ... *
நெட்டிதணேறு மிப்புனத்தினளே ... *
யாதிவிற்பெருப்புக ழனைகுதியாயி ... ... *
ஞாணன்பாறத் தேவரிகெட்டோட ... *
வளிசுழல்விசும்பின் கிளர்முகடணவிக் ... *
கருமுகில்வளைந்து பெருகியபோல ... ... *
நிலைகெடப்பரந்த கடலெழுவிடத்தை ... *
மறித்தவருயிர்பெறக் குறித்துண்டருளித் ... *
திருக்களங்கறுத்த வருட்பெருநாயகன் ... *
கூடல்கூடினரிபோல ... ... *
நாடனீயிவள் கலைநத்தோணலசையே ... .. *

[illegible]

[illegible]

[illegible]

நின்ற இரத்தினக்கல்லுகளை நிறுப்பார்கள் அந்தமலைக் குரியகுள்ளவர் என்னிதையதாமரையினிடத்திராதிர்றவனும் அதிமூலமென்னுமழக்கப்பட்டதுனையையுடையவனு மிமன்பதாம்,

இதுவுமல்லாமல்-நாலாயிரப்பிரபந்தம் முதலாயிரம் பெரிய ழ்வார்சொன்னதிருமாலிருஞ்சோலைமலையின் மாட்சி சவது-கவி.

மாவலிதன்னுடைய மகன்வாணன்மகளிருந்த *
காவலைக்கட்டழிவித்த தனிகாளைகருதுமலை *
கோவலர்கோவிந்தனைக்குறமாதர்கள்பண்குறிஞ்சிப் *
பாவொலிபாடிநடப்பயின் மாலிருஞ்சோலையதே ... *

இதின்தாத்பரியம்,

வாணாசுரன் மகளிருந்த கன்னிகாமாடத்தின் காவலை யழித்த ஆடவுளரனவர் யிச்சித்தமலையானது கோவிந்தனைக்குறப் பெண்கள் தாங்கள் வாசம்பண்ணப்பட்ட குறிஞ்சிநிலத்துக்குரிய ராகதலைப் பாடி நடனஞ்செய்யப்பட்ட திருமாலிருஞ்சோலையென்பதாம்,

கல்லாடம் அரிச்சந்திரபுராணம் வேங்கடவெண்பாநாலாயிரப்பிரபந்தம் இந்நாலிலுங் குறிஞ்சிநிலத்துக் குரியவர்குறவரென்றும், தாழ்ந்தவர்களென்றும்சொன்னதுபோல் இன்னுமனந்தபுராணங்களிலுஞ் சொல்லியிருக்கின்றது இதுடாவருக்குர்தெரிடவரலாம்.

உ-வது-அதிகாரம்-சவது பிரிவு.

பஞ்சதிலத்திலொன்றுனநெய்தலிலமாகிய கடற்கரையில் வாசம்பண்ணுங் குடிகளின்விபரம் வருமாறு.

பெரியபுராணம்-அதிபத்தநாயனார்சரித்திரம்- ருவது-கவி.

அந்நெடுந்திருநகர்மருங் கலைகடல்விளிப்பிற் *
பன்னெடுந்திரைதுறைதவழ்பாங்கரின்ஞாங்கர் ... *
மன்னுதொன்மையின் வலைவளத் துணவினின்மலிந்த *
துன்மைவாழ்குடி மிடைந்ததுதடநுளைப்பாடி. ... *

இதின்தாத்பரியம்-

அழகுபொருந்திய நாகபட்டணத்திற்பக்கத்தில் அலைபொருந்திய கடலோரத்தில் நிலைபெற்றுவாசம்பண்ணப்பட்ட பழமையாகியவலைவளங்களையுடைய வுணவினால் நிறைந்த அதிக நன்மையாக வாழுந்தமிழ்களை நிறைந்தவுளையரென்பதாம்.

இதுவும்-மேற்படிபுராண சரித்திரம் அவது கவி.

வலைதெடுத்தாடரிவடம் புடைவலிப்பவரொலியும் ... *
விலைநுளைச்சியர்பகர்ந்துமீன் குவைகொடுப்பவர்விரியொலியுந் *
நிலைசிதந்தவெள்ளைசொரிபவர்சழங்கொலியும் ... ... *
அலைதெடுங்கடலதிரொலிக்கெதிரொலியனைய ... ... *

இதின்தாத்பரியம்.

வலைகளையிழுப்பவருடையசத்தமும், மீன்குப்பலைவிற்கப்படும் நுளைச்சியருடையசத்தமும் முதலன்மையானவெள்ளைச்சங்குகளைப் பிடித்துக்குவிக்குஞ் சத்தமும் இந்தசத்தங்களெல்லாம் கடலொலிக்கெதிரொலிபோன்றனவென்பதாம்-

இதுவும்-மேற்படிபுராணசரித்திரம் - ௧௨வது-கவி,

அனையதாகியவந்நுளைப்பாடியிலமர்ந்து ... ... *
மனைவளம்பொலிநுளையர்தங் குலத்தினில்வந்தார் ... *
புனையிளம்பிறைமுடியவரடித்தொண்டுபுரியும் ... *
பிலைவிளங்கிய வதிபத்தரொன்றிகழ்மேலோர் ... ...*

இதின்தாத்பரியம்,

அத்தன்மையாகிய நுளையரூரிற்பொருந்திமனைவளப்பமுடைய பரதவர்குலத்தினில்வந்தவர்-மூன்றும்பிறையையுடையபரமசிவத்துக்குத்தொண்டுபுரியும் அதிபத்தரென்னும்பேரையுடையபெரியோரென்பதாம்,

இதுவும்-மேற்புடியுராணசரித்திரம்-மு வது-கவி.

ஆங்கவன்பர்தாநுளையர்தந் தலைவராயவர்கள் . ... *
ஆங்குதெண்டிரைக்கடலிடைப்பலபடவிடக்கிப் ... .. *
பாங்குசூழ்வலைவளைத்துமீன் படுத்துமுன்றுவிக்கும் *
தூங்குபல்குவையுலப்பிலவுடையராயபயர்வார் . .....*

திரிகாசியம்,

அதிடக்தநாயனாரகிய சிவனமயார் நுளையருக்குத்தலைவராகி கடலிலேபலபட வுகோத்களினி லேவலைவீசி மீன்களைப் பிடித்து சகும்புகும்பலாய்ப்போட்டு அதிகுடையர்வாறென்பகாம்,

கல்லாடம்-உ-வது அகவல்- காமமிக்கசுழிபடர்கிளவி.

வானவர்சிகிரைவெளிலங்கிடை கொல்லவு ... *
திருவுடனிறைவிழியாயிரமொரு ... ... *
மிளையாடுவிழிதுரோர்ந்த பொலக் ... *
கஞ்சமொவ்வொயிடையாடலர்ந்து ... ... *
மணஞ்சூழ்கிடந்த நீள்கருங்கழிய ... . *
கருங்கழிகொடுக்கும்வெள்ளிறவருந்தக் ... *
கைபார்த்திருக்கு மடப்பெடைக்கு நகை ... *
பெடைக்குருகணங்கின் விடித்தவெண் சினையொடு ... *
காவலடைகிடக்குங் கைதையர்பொழிலே ... *
வெம்மையொடுகூடியுந் தண்மைபொருந்தியு... ... *
மூலகவிருமரக்குஞ் செஞ்சுடர்வெண்சுடர் ... *
காலங்கர்காடாயுறைமுறை தோற்ற .. *
மணிநிரைகுயிற்றிய மண்டபமாகிப் ... *
பொறைமான்மியிர்க்குந் தாயாமண்மகள்... ... *
களையாதுடுகுப்பைந்துகிலாகி ... ... *
வேனிற்கிழவன் பேரணிமகிழ ... ... *
மூழக்காதுதழங்கும் வார்முரசாகி ... *
தெழியோன்றுயிலாவறிவொடுதுயிலப் ... *
பாயற்கமைந்த பள்ளியறையாகிச் ... .. *

ஜாதிசங்கிரகசாரம்.

சலமாய்ந்து சேமநிலைவைத்த ... *
முத்துமணிகிடக்குஞ் சேற்றிருளாகாய்ப் ... *
புலவுடற்பரதவர் தங்குடியோம்ப ... *
நாளும்விளைக்கும் பெருவயலாகிக் ... ... *
கலமெனுமெடுத்தேர் தொலையாதோட ... *
வள்ப்பறப்பரந்தவீதியாகிச் ... ... *
கறவைவேத்து நெடும்படைசெய்ய ... ... *
முழக்கமாமுவளைத்த வமர்களமாகி ... *
மகரந்தெய்வ நாணிறைந்துறைய ... *
மணிவிளக்குதிறைத்த வாலயமாகி ... *
நீர்நெய்வார்த்துச் சகரரமைத்த ... .. *
நீவளர்வட்டக் குளமாகி ... ... *
யெண்டிகழ்பகுவா யினமணிப்பாத்தட் ... *
டண்டினின்றெரியுந் தகளியாகிப் ... *
பஞ்சவனிறைந்த வன்புடன்வேண்ட ... *
மாதிக்குனித்த நீறணிபெருமாற் ... *
கமுதபோனகங் கதுமெனவுதவு ... ... *
மடிந்தீமாறு மடைப்பள்ளியாகி ... ... *
யின்னும்பலவாய் மன்னுங்கடலே ... • *
நுங்களின்பம்பெருந்துணையென்றுற் ... *
றண்ணந்துறைவற்கின்றிவளொருத்தி ... *
நெருப்புறுமெழுகினுள்ளம்வாடியு ... *
மருவிதூங்கக்கண்ணீர்கொண்டு ... ... *
மரவின்வாயரியிற் பலவுநினைந்து ... ... *
நிலையாச்சூளி னிலையாநெஞ்சங் ... ... *
கொண்டனளென்னென வென்முகநாடி ... *
யுற்றவாய்மை சற்றுந்தருகிலீ ... ... *
நன்றெனினும்மி லொன்றுபட்டொருகா ... *
லிவளோதுயரம்பெறுவவென்னென்று ... *
வினவாதிருக்குங்கேண்மை ... ... *
மனநாடிற்கொலையினுங் கொடிதே *

இதின்தாத்பரியம்.

இந்த அகவலுக் குரையெழுதினால் அதிகமாகவிரிவாகுமாதலால் இதில்யெனக்கு உதாரணமாகவேலடியதை மாத்திரமெடுத்துக் காட்டலானேன் அதாவது, நெய் முதலிலமாக்களாகியகலாபாரிபட்டினவர்களுக்கு இந்தக்கடலானது எந்தநாடிலும் தங்களுடையகூடி விக்கும்படி மாறுதலினைவாங்கியபெரியவிரிலம்பேர் றெனறுந்தான்றும்படியாகஇந்தஅகவலில் புலவுடற்பரதவர்கூடியோடபதாறும்விளைக்கும்பெருவயலெல்லாம் [illegible] புலால்நாறுஉச்சரீரத்தையுடையபரதவராகியகலாபாரிபட்டினவர்களாகிய [illegible] விக்கஎந்தநாளும் குறையாமல் விளையுமெனபெரியகழனியானதுமுத்திரமென்பதாம்.

நீதிநூலாகிய நாலடியார் பொருட்பாலில் கல்வியென் னு

மதிகாரத்தில் ௬வது-கவி,

தோணியியக்குவார் மெல்லைவாணத்து * *
காணிற்கடைப்பட்டாரெனிற்சிறப்பர் காணாது * *
யவன்றுணையாவாறுபோ யறேறூர்கற்ற ... *
மகன்றுணையா நல்லகொளல் *

இதின்தாத்பரியம்,

தோணியாகிய படவுகளைத்தள்ளப்பட மேற்படிதெற்றநில மாக்களாகிய பரதவர்பழையஜாதிவிரோதியில்-கடைப்பட்டவனாயிருந்தபோதிலும் யிகழாமல் அவன்றுணையைகொண்டு ஆறுகடல் [illegible]த்தாண்டுவதுபோல் சாஸ்திரங்கற்றவன் யெந்தஜாதியாயிருந்தபோதிலும் அவனைச்சினேகிக்கக வதென்பதாம்.

திருவிளையாடற்புராணம்-நாட்டுப்படலம்.

௪௨-வது-கவி.

[illegible]ருமாறவுக்கிழுந்தேன் கொழுஞ்சுவைக்கன்ன *
[illegible]ளுமாறவுமளப்பன விடைவிடைமுத்தம்... .. *

இதன்தாத்பரியம்.

[illegible] [illegible]ளைச்சியர் [illegible] [illegible]
[illegible] [illegible]
[illegible] [illegible]
[

கன்னுக்குக்கிடைக்கிடைகொடுத்துமாற்றிக்கொள்ளும் நிலை [illegible]வருடைய தெய்ததிலமென்றுசொல்லப்படுட தண்ணி [illegible]பதாம்

இதுவுமல்லாமல்பாரதம்-ஆதிபர்வம்-குருகுலச்சருக்கம் ௯௦-வது கவி

பாசறைமூழுதுமொருபெருங்கடவுட் ... ... *
பரிமளமொல்லெனப்பரப்பி ... .. *
யோசனையளவுங்கனாயிருமருங்கு ... ...*
மூயிர்க்குமெல்லுயிர்ப்பெதிரோடித் ... *
தாசர்தங்குலத்துக்கதிபதியளித்த ... ... *
தையலைத்தாணிபர்க்கெல்லா ... ... *
மீசனுமுருகிக்கண்டுளங்களியா ... ... *
விலங்கிழையார்கொலியென்றான் *

இதின்தாத்பரியம்.

அரசனது பாடிகூடாரமுழுதும் தெய்வீகப்பரிமளமானது வீச அந்தவாசனைவந்த விடத்தைத்தேடிப்போய் அமைமக்குலமென்று சொல்லப்பட்ட நூளையருக்கெசமானனவன் பெற்றபெண்ணுகியபரிமளகெந்தியை உலகுக்கெல்லாம் நாயகனுகிய சந்தனுகண்டு பெண்ணே நீயாரென்றானென்பதாம்.

இந்தக்கவியில் தாசர்தங்குலத்துக்கதிபதியென்பது நூளையருக்குள்தலைவனென்பதாம்-

இதுவும்-மேற்படிசருக்கம்-௩-வது கவி.

புருவின்மாயிற்பிறந்ததோமகனென் *
புன்குலமகள்குயம்பொருந்தன் *
மேருவுமணுவுநிறுக்குமாறெக்கு *
மேலினியிவைபுகன்றென்கொல் *
பாருவகையினுலாருதற்கிருந்தான் *

இதன் தாத்பரியம்.

பூரு[illegible]சக்ரவர்த்திமரபிற்பிறந்த அரசமகன் எங்கள் அம்பமாகிய [illegible]லட்பெண்ணின் தனதுல்லத்தழுவுதல் மகாமேருவையும் அணுவையும் சமமென்றுநிறுப்பவனைப்போன்றிருப்ப தலலாமல் இந்தப்பூமியைப்பரிபாலனஞ்செய்யகங்கைபுத்திரருகிய தெய்வவிரதனிருக்க என்பெண்ணுக்குனடாளும் பிள்ளைசெய்யஞ்செய்ஸையெதுவென்றுபரதவத்தலைவன் சொல்லுனென்பதாம்.

(*)

இதுவும்- மேற்படிசருக்கம் ௩௬ வது கவி.

அ[illegible]புவியரசரிமாமணுமரச *
[illegible]ஷடி[illegible]ரிந்தவயவத்தழகா *
[illegible]ப்பருமியக்குங்கிளையைமுன்னிறுத்தி *
[illegible]ரிக்கிளைவாய்புதைத்துளாத்தா *
[illegible]பெருமானிக்கட்டருளுனக்கே ... *
[illegible]சைந்தமெய்த்தவம்புரியிவளை *
[illegible]ம்பவிழ்மலர்மாதென்[illegible]தயன்றி *
[illegible]ர்மாமகளெனக்கருதேல் *

இதன் தாத்பரியம்.

தாசர்குலமென்னும் நுளையருக்கதிபதியானவன் அரசன்பாதத்திலேவணங்கிதேவர்களும் ஆச்சரியப்படப்பட்டபரிமளகெந்தியையொருபக்கத்தில் நிறுத்தி அடங்கிவாய்புதைத்து யென்கடவுளே என்சொல்கேட்கக்கடவீர் தங்களுக்கிசையதவம்புரியாதின்றஇந்தப்பரிமளகெந்தியானவள் இலட்சுமியைப்போன்ற கூத்தரியப் பெண்ணேயன்றி பரதவராகிய நுளையருடைய பெண்ணெனறுநினையாதேநின்றுபரவத்தலைவன்சொன்னுனென்பதாம்.

இதுவும்- ௯௪சருக்கம்-௩௰-வது-கவி.

வாசனளித்தவிமானமீதொருவன் வசுவெனுஞ்சோதிமாமரேன், கேசவனெனப்பேரம்விசும்பிடைமனையான்கிரிகையைநினைந்த

[illegible]ரிசுரூபி, நேசமாடிசயபுருஷமக்களத்தினின்[illegible]விழுந்தவி
[illegible]ரியமெய்த்தேசவனனிந்தநாயிலடத்தாளத்தாரவளை [illegible]நாயகனொ
ருவரால்.

... ... *

நிதிசாத்தியம்.

வசுவெனறுசொல்லப்பட்ட அக்கினியவட்சத்தரசனுனவன் தே
வேந்திரங்கொடுத்த விமானமீதில் ஆகாயமார்க்கமாய்ப் போரும்
போது கல்பவிருக்ஷசாரியாகிய கிரிகலையினைத் விகாரத்தாலடைவ
விப்பட்ட தனதுவிரிய மானதுருரியருவுண்டாகப்பட்ட யாருரு
தியில் விழுந்தாலும்பதாம்

[illegible]

[illegible] ருக்கம் [illegible] கவி.

ஒருமுனிருவிவாலாமகமியாருதியினமாயுப்பவித்துழல்வா-
னிரையினைகளைவிருந்தபடிசருவ [illegible] ரிகாலையில்தனை
ப்-பரகவரிலிருகப்பட்டிருவிபட்டபாலகனுருவுமியாரு - மிரு
வருமிருந்தமிலவியிருந்தாயரு [illegible] *

நிதிசாத்தியம்,

ஒருரிசியினுடையசாபத்தினால் ஒருதெய்வஸ்திரியானவள்
மீனராகியபுருஷனியிலிருந்தவர் மேற்படி விரியத்தைபினையாகவி
ழுங்கஅதனால் கொட்டப்பட்டகாலையு [illegible] வெளிப்படுஞ்சமயத்தில்
அந்தமீனனது பரதவராகியபுருஷர் வலையிலகட்டட்டு அதைதுண்
டுக்க அதன்வயிற்றில் ஆணுமும் பெண்ணுமாகிய இருக்கக்கண்டா
லென்பதாம்.

இதுவும் மேற்படிசருக்கம் ஸ்ரீ உ-வது கவி.

மானவர்பதியாம்வசுவினுக்கிவளா
மங்கைறக்காட்டலுமகளை *
மீனவனைப்பேர்கொடுத்தனன்கொண்டு *
மெல்லியலிவளைமீண்டளித்தான் *
பானுமிக்களவுமென்மகளெனனு *
பியக்கையாலிவளிமையின்வளர்த்தேன் *

கரண[illegible]ரு[illegible]ப்பொன்னுத்து மீளவுத்தரு
கார[illegible]ரீ குருத் [illegible]டைகளுக்கன்

[illegible]

மானிடர்களுக் கழகியதாகிய [illegible] வேலன்பவனுக்கு இந்தப்பெண்ணையு மிவளையும்கூட்டி அந்தப்பிள்ளைய தாலன்மீளவென்று பேர்கொடுத்து தனிடத்தில் வைத்துக்கொண்டு இந்தப் பெண்ணைமணபடியும் யென்று [illegible] நாளும் [illegible]வரையில் மகளென்று முறையடையாக்கப்பிரியிலைகளைக் [illegible] பிரதப்பெண்ணுவளர்ந்து [illegible] மெய்கள் துளையர்குலத்தில் வளர்ந்து பேரழகாகி [illegible] வது பருவமடைந்தபின் தன்னிளமதிச்சேர்வதுபோல இந்தப்பெண்ணும் பருவமுற்றதுபின் தன் கணவனியராகிய [illegible] கழுவளைத்துக் கழிபதியாகிய [illegible] அரசனுக்கு [illegible] சொல்லுவளாயினாள்.

இந்தப்பரதவராகிய [illegible] வரிக்கப்பட்டபரியவெந்திலபம் [illegible] மனைத்தால் [illegible] இந்த [illegible] குலத்தாராகிய [illegible] வெண்ணங்கொண்டு பேசிக்கொள்ளுகிறார்கள்,

இந்தப்பரதவராகிய [illegible]யாக்குறித்து இதிலெழுதியிருக்கிற திருப்பிடாந்தம்தவிர இன்னும்பலராலகளையும் பாரதத்தில்சந்தனு மகாராஜன்கதையையும் செவ்வையாய்ப்பணிப்பார்ப்பாரானால்இவர்களதுவுண்மைசெவ்வையாகவே விளங்கும்,

விற்சொல்லப்பட்டபெரியபுராணம்-கல்லாடம்-நாலடியார்-அரிச்சந்திரபுராணம் பாரதம் [illegible] லிந்தநெய்தநிலமாக்களாகிய பரதவனாரையென்றும் இவர்கள்தொழிலை மீன்பிடித்தலென்றும் அற்பகுலத்தவரென்றும் வலையொன்றும் இன்னும்பலவாறாக இந்தநூற்களிற் சொல்லியிருக்கிற தந்தவிய இன்னாம் அனந்தப் நூல்களில் நெய்தநிலத்தில்வசிக்குங்குடிகளானவர் பட்டினவரிகளையர்ரென்றுசொல்லியிருக்கிறதாயவருக்குத்தெரிந்தேயிருக்கும் ஆனால், கணையாரென்பதும்பட்டினவரென்பதும் ஒரேவகுப்பேதவிரவேறல்லது [illegible] திருப்பிடாந்தம்கட்டுரையில் அடித்துவாசம்[illegible]

[illegible]குடிகளானபடியால்கரையார் அல்லதுபட்டினவ [illegible]வதுங்கிவ
ருகின்றதுஆனால்கரையாரென்பதுவெளியாயிருப்பதால் [illegible]வருக்கும்
இந்தவாக்கியத்துக்கு அர்த்தபரியெளிதிற்றெரிந்திருக்க [illegible]ப் பட்டின
வரென்பதற்குக்கரையமித்தவூரா ரென்றுபெப்படிச்சொல்லலாமென்
றுசிலர்யோசிப்பார்கள் ஆதலால் அதற்குரியதிருஷ்டாந்தம்வருமாறு.

சூடாமணிநிகண்டு வது இடப்பெயர்த்தொகுதி

[illegible] வது-கவி.

குறிச்சிசிற்றூர்பேரூர்குறிஞ்சிநெய்னிலத்தூர்ப்பேராம்
பறித்தமிமுல்லைபூரீ பாடிபட்டினமேநெய்தல் *
குறித்தெழுகுறும்பருமே குடிப்புபாலைகள்சுடற்றும் *
பறித்தபாசறையேபேர் [illegible] பதிபாழிவிடு *

[illegible]ராதியம்,

குறிஞ்சிநிலத்தூரின்பேர்-[illegible]சிற்றூர்-பேரூரென்றும், முல்
லைநிலத்தூரின்பேர் பாடியென்றும், நெய்தநிலத்தூரின்பேர் பட்டி
னமென்றும், பாலைநிலத்தூரின்பேர் குறும்பெனறும் சொல்லியிரு
ப்பதால்நெய்தநிலமாகிய கடற்கரையூரின்பேர் பட்டினமென்று
யாவருக்கும் விசிதமாகும், ஆதலால் அந்தயிடத்தில் வாசம்பண்ணு
ப்பட்டவருக்குத்தமிழ்ப்பேராகியகரையாரென்பதும், சம்ஸ்கிருதப்
பேராகியபட்டினமென்பதும் ஞாயம், ஆனால்மற்றநாலுநிலத்திலவ
சிக்குங்குடிகள் அந்தயிடத்தில்அவஸ்யத்தாலம்பாய்குடியிருந்தபோ
திலும் அவர்களுக்குஅந்தப்பேர் பொருந்தமாட்டாது என்பொரு
த்தாகென்றால் நெய்தநிலத்துத்தொழிலாகிய மீன்பிடித்தல் படவுத
ன்னுதலாகிய தொழில்கள் அவர்களுக்கேபொருந்துமென்பதாம்.



உ-து அதிகாரம் - ரு-வது-பிரிவு.

ப-சநிலத்திலொன்றாகிய நெல்விளையாநின்ற மருதநிலத்துக்குரிய குடிகளி-விபரம்வருமாறு.

மருதநிலத்தூரின்பேர்.

சூடாமணிநிகண்டு ரு-வது- இடப்பெயர்த்தொகுதி

சய-வது-கவி,

புரிகுடநகரம்பூக்கம் புரங்குடிநிகாயம்பள்ளி *
சரணமாவாசம்பாக்கந் தாவளநிகமந்தாமம் *
பாவியநிலயங்கோட்டம் பதிவாழ்க்கைசேர்வுபாழி *
மருதநன்னிலத்தூரீரைந் திரட்டியாம்வசதியும்பேர் *

இதின்தாத்பரியம்.

புரி குடம் நகரம்- பூக்கம்-புரம்- குடி - நிகாயம-பள்ளி-சரணம் ஆவாசம்-பாக்கம்-தாவளம்-நிகமம்-தாமம்-நிலயம்-கோட்டம்-பதி வாழ்க்கை-சேர்வு பாழி-வசதி-இந்த -உ-ம்.மருதநிலத்தூரின் பேரென்பதாம்

இந்தமருதநிலத்தைச் சேர்ந்தவூர்களில்சர்வஜாதிகளின் வாசமும் சர்வவியாபாரமும் இராஜதானிகளும்யிருந்தபோதிலும் மருதநிலமாக்களென்கிறபேர் எல்லாருக்கும்பொருந்தமாட்டாது, ஏனென்றால் மருதநிலமென்றுசொல்லப்பட்ட நெல்லு -கரும்பு -வாழைமுதலானதுகளையும் பயிரிட்டு வேலைசெய்யும் குடிகளுக்கேமருதநிலமாக்களென்று பொருந்தும்,ஆனால் இந்தமருதநிலத்தில் சர்வஜாதிகளும் பயிர்முதலானவேலைசெய்தபோதிலும் அவர்களுக்கு அந்தப்பெயர்பொருந்தாது,அதேனென்றால்-முதலதிகாரத்துள்-ரு-வது-பிரிவிற்சொல்லி யிருக்கப்பட்ட சூத்திரராகியவெள்ளாழரே மருதநிலமாக்களல்லாமல்வேறல்ல-இந்தவெள்ளாழனைமருதநிலமாக்களென்றுயெப்படிச்சொல்வது மருதநிலமாக்களைச்சொல்லுமிடத்தில்வெள்ளாழரென்கிறபேர்வாராதிருப்பதாலும்வெள்ளாழருக்குப்பேர் விசேஷமாய் முன்முதலதிகாரத்தில்-ரு-வது-பிரிவிற்சொல்லி யி

ருப்பதாலும்மருதநிலமாக்கள்வேறேயொருஜாதியிருக்கவேண்டுமென்று சிலர்வினவெண்ணங்கொண்டு யென்னைத்துருவர்கள் ஆராய்ந்த சம்சியத்தைவெளியிட்டுபாவருக்கும்விளங்கும்படிச்சொல்வதுயெனக்கு அவஸ்யமாதலால்அதைவெளியிட்டுச்சொல்லுகிறேன்

இந்தயிரண்டாவதாதிகாரம்முதற்பிரிவிற்சொன்னதுபோல் சூத்திரர்கள் செய்யுந்தொழில்களுமெல்லாம் உயர்ந்ததொழிலாகியபயிரிடுந்தொழில்கள் செய்யப்பட்டவரானபடியால்முன் முதலதிகாரத்தில் நாலாவதுபிரிவிற்சூத்திரரென்றுவெள்ளாளரைக்குறிப்பித்து சூத்திரருக்குத்தொழிலே முதற்காரணமானபடியால் தொழிலாகவிருமுதல் தொழிலாகிய பயிர்த்தொழிலுக்குரியவர்வெள்ளாளரென்று திகிந் சூறிப்பித்ததுவாகப் நிகண்டுகளில் சூத்திரருக்குள் வேளாளர்களென்றுசொன்னார் - மேற்படி பயிர்த்தொழிலைச் செய்யுமிடமானது மருதநிலமானபடியால் இந்தப்பஞ்சரிதத்தில்மருதநிலத்தைச் சொல்லுமிடத்தில் ஜாதியைக்குறிப்பிடாமல் செய்யப்பட்டதொழிலையேபற்றியேமருதநிலமாக்களென்று வெ நூல்களிற்றொழிலைக்குறிப்பித்துஞ்சொன்னார்,

ஆனால்சிலபுத்திமான்கள்மருதநிலமாக்கள் வேறேஜாதியிருப்பதாகவும் வெள்ளாளருக்குமிவருமயாதொருசம்பந்தமில்லையென்பதாகவும் அந்தமருதநிலமாக்கள்வெள்ளாளருக்கு வேலைசெய்யப்பட்டவர்களாகவும் தோன்றும்படியாகச்சிலநூல்களுக்கெழுதியவுரைகளில் மருதநிலமாக்களுக்குமள்ளனென்றுவந்திருக்கிற பேருக்குவுரைபள்ளனென்றெழுதியிருக்கிறார்கள் அதைவுண்மையென்றுசிலர்நம்பிவருகிறார்கள் அப்படி மள்ளனென்பதற்குமாத்திரம் பள்ளனென்றுயெழுதுவாரேயானால் அந்தமருதநிலமாக்கள்பேரிலேயே உழவர்வினைஞர்-கம்பளர்- இதுமுதலானவெள்ளாளருக்குரியபேர் வந்திருக்கின்றதற்கு யென்னசொல்லுவார்களோ தெரியவில்லை இதல்லாமல்மருதநிலத்தலைவன்பேர் -ஊரன்-கிழவன்-என்றுவந்திருக்க அந்தப்பேர்வெள்ளாளருக்குரியதென்று பலநூல்களாலும்யாவருக்குந்தெரிந்திருக்க மருதநிலமாக்கள் முன்சொன்னபள்ளனென்றும் அதற்குத்

அப்படியாகையில்லை-நெய்தநிலமாக்களாகியவலையர் அல்லது துளையருக்குள் அந்தஜாதியிலேயேதலைவராகவும்-பாலைநிலமாக்களாகியவேடருக்குள் அந்தஜாதியிலேயேதலைவராகவும் இதுபோல்மற்றமுல்லை-குறிஞ்சிநிலமாக்களிடையர்-குறவர்-இவர்களில்-அந்தஜாதிக்குள்தலைவரொன்றுபாரதமுதலானபலநூல்களிலுஞ்சொல்லியிருக்கிறதுயாவருக்குந்தெரிந்திருக்கலாம்,இப்படியிருக்கமருதநிலமாக்களுக்குமாத்திரந்தெரியாமலிருக்கிறஜாதியும்தலைவரொருசாதியுமாகயிருக்கிறார்களென்றுமெய்ப்பாடுசொல்லலாம்,எப்படியுரையெழுதலாம்,இதையோசித்தால்யாதாமொருநலகாரர்கள் ஆகலால்மருதநிலமாக்களே வெள்ளாழரொடுபதுமிவர்ள் தமோமருதநிலமாக்களென்பதும்சிலருக்குத்தெரியாமல் வெவ்வேறாகநினைத்திருக்கிற படியால் இவர்கள்வொன்றெனறுயாவருக்குந்தெரிந்தும்படி வெளிப்படுத்த அவஸ்யமாதலால் அதைச்சொல்லுகிறோம்

முதலதிகாரத்தில் ௪வது பிரிவிற்சொல்லப்பட்ட

சூத்திரர்-அல்லது வெள்ளாழர்பெயர்.

மன்மகள்புதல்வர் - வளமையர்-களமர்-சதுர்த்தர் உழவர்-மேழியர் ஏவளாளர் எரின்வாழ்நர் - காராளர்-வினைஞர்-பின்னவர்-ஆ(ரு) ஈர்,நப் பதினொருபெயருக்குள்ளவேமருதநிலமாக்கள்பெயர்வருமாறுகளமர்-மொழுவர்-மள்ளர்-கம்பளர்-உழவர் - வினைஞர்-கடைஞர் ஆ(௮)

முன்சொன்னவெள்ளாழர்பெயரும் பின்சொன்னமருதநிலமாக்கள் பெயரும் ஒத்தேயிருக்கிறதன்றி யென்னவித்தியாசம் அஞ்ஞல் சூத்திரராகியவெள்ளாழர்பெயரில் சொல்லாதிருக்கிறதொழுவர்-மள்ளர்-இவ்விரண்டுபெயர்கள் மாத்திரம்புதிதென்று சிலர்யோசிப்பார்கள் அதுபுதிதல்லதொழுவனென்பதுயிவர்களுக்குமேல்ப்பட்ட பிராம - க்ஷத்திரிய வைசியனென்கிறமூன்றுஜாதியையும்வணங்கப்பட்டவனென்றும் ,மள்ளனென்பதுசெய்யப்பட்டஉழவுத்தொழிலில் வல்லவ-

ளையுடையவரென்பதுமேதவிரவேறல்ல இதுவன்றிசெய்கைகுணங்களைப்பற்றி அனந்தநூல்களிலும் மருதநிலமாக்களேவெள்ளாழரொன்று தோன்றும்படியாகவும்வெள்ளாழரேமருதநிலமாக்களென்றும் சிலதுநூல்களிற் சொல்லியிருக்கிறதிருஷ்டாந்தங்கள்வருமாறு.

திருவிளையாடற்புராணம்-நாட்டிப்படலம்

மெ-வது-கவி,

களமர்கள்பொன்னேர்பூட்டித்தாயர் வாய்க்கனிந்தபாடற் *
குளமகிழ்சிறாரினேறு மொருத்தலுமுவகைதூங்க ... *
வளமலிமருதம்பாடி மனவலிகடந்தோர்வென்ற... ... *
அளமருபொறிபோலேவ லாற்றவாள்வினையின்மூண்டார் *

இதின்தாத்பரியம்,

களமரென்று சொல்லப்பட்ட வெள்ளாழர்பொன்னேர்பூட்டி மருதப்பண்ணாகிய ராகத்தைப்பாட யெருதுகள்யெருமைக்கடாக்கள் சந்தோஷமடைந்து தங்கள்சொற்படிகேழ்க்கப் பயிரிடுமுயற்சியிற்றொடங்கினரென்பதாம் -இந்தக்கவிக்குமேற்கோள்,

வெள்ளாழர்பேரில் கம்பர்செய்த- ஏரெழுபது,

ஏர்நடத்தற்சிறப்பு மெ-வது-கவி.

கார்நடக்கும்படிநடக்குங் காராளர்தம்முடைய *
ஏர்நடக்குமெனிற்புகழ்சா லியலிசைநாடகநடக்குஞ் *
சீர்நடக்குந்திறனடக்குந்திருவறத்தினெல்லைநடக்கும் *
பார்நடக்கும்படைநடக்கும் பசிநடக்கமாட்டாதே *

இதின்தாத்பரியம்,

காராளனதுமுன்னடக்க தாங்கள்பின்னடக்காதின்ற காராளரென்று சொல்லப்பட்ட வெள்ளாழர்யேராளனது நடக்குமாறுல் புகழ்-இயல்-இசை-நாடகம்-என்கிறமூன்று- தமிழும்,சிறப்புவல்லமை-தருமச்செயல்- உலகத்திருக்கும்வுயிர்கள் அரசர்களதுநால்வகைப்படைகளெல்லாம் நடக்கும் ஆறுல்பசியென்பதுமாத்திரம் நடக்காமலிருப்பதாம்.

இதுவும்-திருவிளையாடற்புராணம்-நாட்டுப்படலம்

௨௯-வது-கவி.

பலநிறமணிகோத்தென்னப் பன்னிறவேறுபூட்டி... . *
யலமுகவிரும்புதேயவாள்வினைக் கருங்கான்மள்ளர் ... *
நிலமகளுடலங்கண்டு சால்வழிநிமிர்ந்தசோரிச்... ... *
சலமெனநிவந்தசெங்கேழ்த்தழன்மணியிமைக்குமன்றே *

இதின்தாத்பரியம்,

பலநிறமாகியபெருதுகளைக் கலப்பையிற்பூட்டி யுழவுசெய்யும் வலியகாலையுடையமள்ளரொன்று சொல்லப்பட்ட வெள்ளாழரிகள் பூமிதேவியினுடைய வுடலங்கிழிக்க அதிற்புதைப்பட்டபிரத்தினக்கற்கள் வுதிரவெள்ளம்போல் பிரகாசிக்குமென்பதாம்.

இதற்குமேற்கோள்

ஏழுபது உகவது கவி - படைச்சாலின்சிறப்பு.

பழுதுசால்வகையறியாப்பழமறையோர்பெறுவேள்விக்
குழுதுசால்வதுகலப்பை யுயர்வானதென்றக்கால்... .. *
எழுதுசால்பெருங்கீர்த்தி யேரானும்பெருக்காளர் .. *
உழுதசால்வழியன்றி வுலகுவழியறியாதே ... ... *

இதின்தாத்பரியம்.

கலப்பையினால் வுழப்பட்டதால் பிராமணருடைய வேழ்வி முயற்சியையடைந்ததென்றால் ஏராகிய அந்தக்கலப்பை தங்களுக்குச்சொந்தமாக வுடையபெருமைதங்கிய-வெள்ளாழர்கள் உழப்பட்ட படைச்சால்வழியன்றி வுலகுக்குவழிதெரியாதென்பதாம்.

இதுவும் மேற்படிதிருவிளையாடற்புராணம்

பன்றிக்குட்டிக்குமுலைகொடுத்தபடலம்-௪-வது-கவி.

சுகலனென்றொருவோளாள னவன்மனைசுகலையென்பா *
ளிகலருங்கற்பினுள்பன் னிருமகப்பெற்றுள்செல்வப் *
புகலருஞ்செருக்காலன்ன புதல்வரைக்கடியராகி ... *
யகலருங்களிப்புமீதூ வூன்பினுல்வளர்க்குநாளில்... ... *

இதின் தாத்பரியம்,

சுகலனென்றொரு வேளாளனவன் மனைவியானசுகலையென்கிற பேரையும் மேலானகற்பையுமுடையவள் பன்னிரண்டு பிள்ளைகளைப் பெற்றனள் அந்தப்பிள்ளைகள் செல்வச்செருக்கினால் துஷ்டராகி சத்தோஷமானது அதிகரிக்கவளருகிறதாளிலென்பதாம்.

(*)

இதுவும்-மேற்படி- புராணபடலம் ௫-வது கவி.

தந்தையுந் தாயுமாயத் தறுகண்மிக்குடையராகி ... *
மைந்தருமவேடரோடு கூடிவெங்கானில்வந்து ... *
வெந்தொழில்வேட்டஞ்செய்வார் வெயில்புகாப்புதற்கிழெய்தி
யைந்தவித்திருந்துநோக்குங் குரவனையங்குகண்டார் ... ... *

இதின் தாத்பரியம்,

தந்தையும் தாயும் யிறந்தபிற்பாடு மேற்படிபன்னிரண்டு பிள்ளைகளும் அஞ்சாதவர்களாகி பருத்திலமாக்களாகியஇந்தப் பிள்ளைகள்பாலைநிலமாக்களாகிய வேடரோடுகூடிகாட்டிலிருந்துவெய்விதானதொழிலாகிய வேட்டஞ்செய்பவர் சூரியனாலும் புகுதற்கரியசெடிகளடர்ந்த ஒருபுதற்குள்போய் அந்தயிடத்தில் ஐம்புலனையெறுத்துத்தவஞ்செய்யு வொருபெரியவனைக்கண்டாரென்பதாம்;

இதுவும்மேற்படி-புராணபடலம்-௬வது-கவி.

கைத்தலம்புடைத்துநக்குங் கல்லும்வெம்பரலுமவாரி *
மெய்த்தவன்மெய்யிற்றாக்க வீசிநார்வினையைவெல்லு *
முத்தமன்வீக்கஞ்செய்தார்தவத்தினுக்குவரொன்றுன்னிச்
சித்தநொந்தினையவஞ்சத் தீயனாச்செயிர்த்துநோக்கா *

இதின்தாத்பரியம்-

அப்படிக்கண்டயிந்த பன்னிருவர்களும்கையைக்கொட்டிநகைத்து கல்லையும் பருக்காங்கல்லுகளையும்வாரி மெய்த்தவராகிய அந்த ரிஷியின்பேரில் தாக்கும்படி யெரிந்தார்கள் இருவினையையுவெல்லப்பட்டமேற்படிதவசிகோபித்து தவத்துக்குக்கெடுதியென்றுநினைத்து மனதைநொந்தஇந்தக் கொடியதுஷ்டனைப்பார்த்தென்பதாம்.

இதுவும்மேற்படி புராணபடலம்-எ-வது கவி.

தொழுந்தொழிலிலமறந்துவேடத் தொழிலுழந்துழல்வீர்நீர்மண்ணு *
ழுந்தொழிலுடையநீராற் பன்றியினுதரத்தெய்திக் ... ... *
கொழுந்தழலையவேனக் குருளையாய்த்தந்தைதாலய ... *
யிழந்தலமறுமினென்று விட்டனன்கடியசாபம் ... .. *

இதின்தாத்பரியம்.

அப்படிக்கோபித்துப்பார்த்து மேற்படிரிஷியானவர் உங்கள்வம்சப்பரம்பரையாழக்கப்போல் மேலோர்களைத்தொழப்பட்ட தொழிலைமறந்து வேடசாதியின் தொழிலைக்கைக்கொண்ட நீங்கள் பல்லினையழப்பட்ட தொழிலையுடையவர்களானபடியால் மண்ணை முகந்தாலுழப்பட்டபன்றியின்வயிற்றில்பன்றிகுட்டிகளாய்ப்பிறந்துதந்தைதாலயமிழந்து துன்பப்படக்கடவீர்களென்று சபித்தாரென்பதாம்.

இந்தச்சரித்திரத்தினாலும் மருதநிலமாகிவேசேற்றில் விழுதுபறிரிடப்பட்டவர் வெள்ளாழரென்றே விளங்கிற்று.

இதுவுமல்லாமல்- அரிச்சந்திரபுராணம்-நாட்டுச்சிறப்பு,

உ௬வது கவி,

கள்ளலம்பியவாயுங் களிமகிழ் ... ... *
வுள்ளலம்பியவுள்ளமுந் தோன்றவே ... *
புள்ளலம்பியபொய்கைக் கனாயெலாம் ... *
மள்ளர்வந்து நெருங்கிமலிந்தனர் ... ...*

இதின்தாத்பரியம்,

பசுநிகள்வாசம்பண்ணப்பட்டவுடைந்ததடாகக்கரைகளெல்லாம் கள்ளுகளைக்கொப்பளிக்காநின்ற வாயையுடைய மருதநிலமாக்களாகிய வெள்ளாழர்வந்து நெருங்கினரென்பதாம்.

இதுவும்-அரிச்சந்திரபுராணம் நாட்டுச்சிறப்பு-௩௰-வது-கவி,

கொட்டுவாங்கிக் குதித்துநிவப்புமண் ... ... *
வெட்டுவோர்மெய்ப்பரி மிதித்துக்கரை ... ... *

கட்டுவார்வன்கடிப் பெடுத்துக்கிணை ... ... *
தட்டுவார் தூரகங்கொடு தாங்குவார் ... ... *

இதின் தாத்பரியம்.

மருதநிலமாக்களாகிய வெள்ளாழர்கள் மன்னகளைவெட்டிச்சமத்து மருதத்துக்குரியபறையைக்கொட்டிக்கொண்டுவடைந்துபோனகளைகளை மிதித்துக்கட்டுவாரென்பதாம்.

இதுவும்-ஷ அரிச்சந்திரபுராணம்-நாட்டுச்சிறப்பு

கக-வது-கவி.

முழவெழும்படிமொய்சிறையிற்கறங் ... ...*
கெழவெருண்டய லன்னமிரிந்திடப் ... ... *
பழவரம்புபுதுக்கிப் பகடுசீர்த் ... ... *
துழவரெங்குமுழுமொலி யோங்குமே ... *

இதின் தாத்பரியம்,

மருதநிலமாக்களாகிய வெள்ளாழர்கள் வெள்ளத்தினாலுடைபட்டுப்போனபழையவரம்புகளைப் புதிதாகச்செய்துகிடாக்களைக்கட்டி வுழாநிற்றசத்தம் அதிகரிக்குமென்பதாம்

இந்தமூன்றுகவியாலும் வெள்ளத்தினாலுடைபட்டவரம்புகளைக்கட்டி சேறுசெய்கிற சிறப்புச்சொல்லியிருக்கிறபடியாடல் இந்தமூன்று கவிகளுக்குமேற்கோள்வருமாறு.

ஏரெழுபது கரம்புதிருத்தற்சிறப்பு-சக-வது-கவி.

மேடுவெட்டிவனப்படுத்தி மிகவரம்புநிலைநிறுத்திக் ...*
காடுவெட்டியுலகநெறிக் காராளர்காத்திலரேல் ... *
மேடுவெட்டிக்குறும்பறுக்கும்வேல்வேந்தரெற்றாலும் *
காடுவெட்டியுழுதுவருங் கவிகளையமாட்டாரோ.....*

இதின் தாத்பரியம்.

கார்க்காமற்போனால்அரசர்கள்மற்றரசர்களைச்சம்மரித்துத்தங்களுக்குக்குறையாகியதரித்திரத்தைக்களையமாட்டார்களென்பதாம்.

இதுவும்மேற்படி-ஏரொழுபது-வரம்புகோலுதற்சிறப்பு

உரு-வது-கவி.

மெய்வரம்பாநிற்கின்றவேதனூனெறிவரம்பாம்... ...*
யிவ்வரம்புமவ்வரம்பு மிப்புவிக்குவரம்பாமோ ... ...*
பொய்வரம்புதவிர்த்தருளும்புவிமடந்தைதிருமைந்தர்*
செய்வரம்புதிருத்தாமேற் றிசைவரம்புதிருந்தாதே ... *

இதின்தாத்பரியம்.

பூமாதேவிப்புத்திரராகிய வெள்ளாழர்கள்தங்கள்கையினால்செய்யப்பட்டவரம்புகள் செவ்வையாகச்செய்யார்களானால்திசைகளில் அந்தாகியவரம்புகள் செம்மைப்படாதென்பதாம்.

இதுவும்மேற்படி-ஏரொழுபது - சேறுசெய்தற்சிறப்பு.

உரு வது-கவி.

வெறுப்பதெல்லாம்பொய்யினையே வேளாளர்மெய்யாக ...*
ஒறுப்பதெல்லாங்கலியினையேயுள்ளத்தால்வெள்ளத்தால் ...*
செறுப்பதெல்லாம்புல்லினையேசெய்யின்வளமறிந்தறிந்து *
மறிப்பதெல்லாஞ்சேற்றினையேவளம்படுதறபொருட்டாயே *

இதின்தாத்பரியம்.

வெள்ளாழர்கள் வெறுத்துத்தள்ளுவதுஅசத்தியத்தையே-கோவிப்பது தரித்திரத்தையே-மனப்பூர்வமாய்யுத்தஞ்செய்துசம்மரிப்பதுபுற்களையே-உலகத்தார்வளம்பெறும்பொருட்டாய்க் கழனிகளுடையவளப்பத்தையறிந்து கட்வெதுசேற்றையென்தாம்.

அரிச்சரிந்திரபுராணம்-மயானகாண்டம் - உரு-வது-கவி.

நீராளவாவிசெறிநாடனைத்துநிறைமாதவற்குதவியும்..... *
பாராளுநீர்மைதொடர்பற்றதன்றுபடியாளுமெந்தைமுடியில்*

காராளரேர்கள்கடவோசையோய்வில்கன்னேகிநாடதனைமேல் *
ஆராளவல்லரவமேவனத்தி லரவாலிறந்தமகனே ... *

இதின்தாத்பரியம்,

நீர்கள்பொருந்தியதடாகங்கள் நிறைந்தகோசலநாடு முழுமையும் விஸ்வாமித்திரனுக்குக்கொடுத்தும் பூமியையாளும்வழக்கமானதுதுடர்பில்லாமற்போய்விட்டதல்ல பூமியையாளப்பட்ட பெரிய கப்பலாகிய மதிதடனிறந்தால் காராளராகியவெள்ளாழர்கள் மருதநிலமாகியகழனிகளில்ஏர்களைவோட்டாநின்ற வோசைநீங்காதகலேரு சிநாட்டை ஆர்ஆளவல்லமலையுடையவர்கள் விஞ்சுகக்காட்டில்சர்ப்பத்தாலிறந்தாயேமகனேயென்றுசந்திரமதிசொல்லுவென்பதாம்.

இந்தக்கவியினாலும் மருதநிலத்தில் ஏனாயுழப்பட்டவர்கள் வெள்ளாழரென்றுவிளங்கிற்றென்பதாம்.

இ அல் இராமாயணம்-பாலகாண்டம்-நாட்டுப்படலம் ௯ வசு கவி.

பண்கள்வாய்பிழற்றுமில்சொற்கடைசியர்பரந்துநீண்ட... *
கண்ணைகான்முகம்வாயொக்குங்களையலாற்களையிலாமை ...*
உண்கள்வார்கடைவாய்மள்ளர் களைகலாதுலாவிநிற்பார்... *
பெண்கள்பால்வைத்தநேயம்பிழைப்பரோசிறியோர்பெற்றால்*

இதின்தாத்பரியம்.

மருதநிலத்திசையைப்பாடாநின்ற வெள்ளாழஸ்திரீகளதுவிச்சாலமானகண்-கால்-முகம்-வாய்களையொத்திராநின்ற அல்லி-தாமரைப்புட்பங்கள் களையாயிருக்கிறபடியால் கள்ளுகளையுண்ணாநின்ற வெள்ளாழர்கள் களைகளையாமல்வுலாவிநிற்பார் பெண்களிடத்தில் சிறியோர்கள்நேயம்வைத்ததால்பிழைப்பரோவென்பதாம்.

இ-அ-ல்-அரிச்சந்திரபுராணம்-நாட்டுச்சிறப்பு-சகு-கவி.

வயலின்மென்களை மாய்க்குங்கடைசியர் ... *
சயதெடுங்கண் சலிலத்திற்றோன்றலால் ... ... *
மயல்விளைத்து மயங்கிடுமள்ளர்தாம் ... ... *
கயல்களென்றய லிற்பறிகட்டினார் ... ... *

இதின்தாத்பரியம்.

கழனிசூழிடத்தில் களைகளைப்பிடுங்கும் வெள்ளாழஸ்திரீகள் கண்ணுனது ஜலத்திற்றோன்றுதலால் மயலிலுல்மயங்கிடும் வெள்ளாழர்கள் மேற்கண்டையென்று அதைப்பிடிக்கமடைகளில்* பரிகட்டிலுமென்பதாம்,* பரி-என்பது-மீன்பிடிக்குமோர்கருவி.

(*)

இ அரி-மகாபாரதம்-நாட்டுச்சிறப்பு-உ-வது-கவி.

கொழுநீர்மதுவுண்கடைசியர்தங் ... *
குழலேதோய்விழியினெழுநிழலைக் ... *
கழுநீர்மலரென்றெருபகலுங் ... ... *
காலான்மயக்கிக்களைதுவைப்பார் ... ... *
முழுநீருதிமதுநிழன் ... ... *
முழுவங்கண்டுதொழுதிறைஞ்சிச் ... *
செழுநீரரமங்கையரென்று ... ... *
திகைப்பார்நகைப்பார்செறுவெல்லாம் ... *

இதின்தாத்பரியம்.

கள்ளுகளையுண்ணப்பட்டவெள்ளாழஸ்திரீகள்விழியினிழலைக்களையாகியசெங்கழுநீர்மலரென்றுமயங்கிப் பகல்முழுதும் காலால்துவைப்பார்கள் தங்கள்நிழலைத்தண்ணீரிற்கண்டுநீரறமகளீரென்றுதொழுது திகைத்துச்சிரிப்பார்களென்பதாம்.

இதற்குமுன்னு இராமாயணம் பாரதம்-அரிச்சந்திரபுராணம் இதுகளிற்சொல்லப்பட்ட மூன்றுகவிகளாலும் மேற்படிமருதநிலமாக்களாகிய வெள்ளாழர்களும் மேற்படிஸ்திரீகளும் களைகளையுஞ்சிறப்புச்சொல்லியிருக்கிறபடியால் இதற்குமேற்கோள் மேற்படி வெள்ளாழருக்குரிய நூலாகிய ஏரெழுபதிலையேவருமாறு.

ஏரெழுபது-சரி-வது-கவி களைகளைதற்சிறப்பு-

வளைகளையுமணிகளையுமலர்களையும் வரும்பலவின் ... ... *
சுளைகளையுங்கொடுகைக்கே சொரிபொன்னித்திருநாடர் ... ...*

விளைகளையுண்செஞ்சாலிவேரூன்றிக்கோடுகொள்ளக் ... ... *
களைகளையாவிடில்வேந்தர் கலிகளையமாட்டாரோ ... ... *

இதின் தாத்பரியம்.

மருதநிலமாக்களென்னும் வழுவராகியவெள்ளாழர்கள் நெற்பயிர்கள் செவ்வையாய் வேரூன்றும்படி களைகளைக்களையாமறபோவார்களானால் அரசர்கள்தரித்திரம் நீங்கமாட்டாதென்பதாம்.

இப்போதெடுத்துக்காட்டியதுபோல் யின்னும் அனந்தபுராணநூல்களிலும்மேற்படி வெள்ளாழரேமருதநிலமாக்களாகிய வழுவர்களென்று புத்திமான்கள்யாவருக்கும் தெரியவருகிறதுந்தவிரவெள்ளாழருக்குரிய வொழுபதென்னும் நூலைமுழுதிலும் பார்வையிட்டால்மேற்படிமருதநிலத்துக்குரியவர் வெள்ளாழரொன்றேதோன்றுமல்லவா ஆனால்வெள்ளாழஸ்திரீகள் மருதநிலமான கழனிகளிலுண்டான வேலைசெய்பவர்களென்றுபுராணநூல்களிற்சொன்னதுபோல்கடைச்சியராகிய வெள்ளாழஸ்திரீகள் மேற்படிமருதநிலத்தில் வேலைசெய்பவர்களென்று நானெழுதியிருப்பதைக்குறித்து அந்தஸ்திரீகளுக்குக் கடைச்சியரென்கிறபேர் சொல்லலாமாவென்றும் இவர்கள்மேற்படிநிலத்தில் வேலைசெய்யப்பட்டவர்களல்லவென்றும் தற்காலத்தில் ஆதிதொடங்கிமேலான அந்தஸ்திலிருப்பவர்களைப்போல் நடித்துக்காட்டப்பட்ட சிலரைப்பார்த்துநான்புராணத்தைப்போலயெழுதினதைத்தப்பென்றுசொல்லுவார்கள் ஆகையாலதன் விபரத்தைச்சுருக்கவெளியிடுகிறேன் கடைச்சியரென்கிறபேர் இவர்களுக்கு எப்படி வந்ததென்றால்-பிர்ம்ம- க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்கிற நான்கு ஜாதிவரிசைக்குள் இவர்கள்கடைச்சாதியென்றுநூல்களிற்சொல்வது சகசமல்லவா-அதைப்பற்றி-ஆண்பாலுக்குக்கடையரென்றுவந்ததுபோல் அவர்கள்பெண்பாலுக்குக்கடைச்சியரென்றுசொல்லுவது ஞாயமல்லவா-அதைப்பற்றி இவர்களுக்குக்கடைச்சியரென்றுவந்திருக்கின்றதேதவிர வேறல்ல இவர்கள்ஸ்திரீகள்முன்சொன்னதுபோல்தற்காலத்தில்சிலரிருக்கிற அந்தஸ்தைப்பார்த்து இவர்கள் அப்பேர்க்கொற்றதொழிலுக்குரியவர்களல்லவென்று யென்னுவது யெவ்வளவுஞ் சரியல்ல அதேனென்றால்தற்காலத்திலும்கொங்குதேசத்தைச்சேர்ந்த-கோயம்புத்தூர்-சேலம்-தருமாபுரி கருவூர்- இதுமு

தலாண அனந்ததேசங்களிலும் ஏராளமாயிருக்கப்பட்ட கொங்குவெ
ள்ளாழூர்-முரசவெள்ளாழூர் - மகவழிவெள்ளாழூர் முதலானவர்களு
டைய மதிரிகளும் மருதநிலமாகியகழனிகளுக்குரியசர்வம்வேலையும்
அவர்களேசெய்து வருகிறார்கள்-அவர்கள் செய்யப்பட்டவேலை பு
ராணங்களிற் சொன்னதற்குப் பதின்மணங்கதிகமாயிருக்குமேதவிர
வேறல்ல - ஆனால்அவர்களேவுயர்ந்தசூத்திரர்களென்பதற்கு யெவ்வ
ளவுஞ்சந்தேகமில்லை-அதெப்படியென்றால் பிராமணனானவன் சூத்தி
ரர்களுக்குவேதம்வோதிவைக்கக்கூடாதென்றும்மற்றயெந்தக்கருமு
மும்செய்துவைக்கக்கூடாதென்றும்யேற்படிசூத்திரர்பெற்றுக்கொ
ள்ளக்கூடாதென்றும்வேதபுராணங்களிற்சொன்னதுபோல்அவர்களி
ற்சிலர்பிராமணனைநீக்கி நாவிதனைக்கொண்டு தங்களுக்குரிய கலியா
ணமுதலிய கருமங்களையும் நிறைவேற்றிக்கொள்ளுகிறார்கள்,

அந்தக்கருமங்களுக்கு ஷௌரநாவிதர்கள்சொல்லி நடத்துகி
றமந்திரங்கள் யெனக்குத் தெரிந்திருந்தும் அதைவிரிந்தயிடத்திற்சொ
ல்லவேண்டிய அவஸ்யமில்லாததால் நான் யெழுதவில்லை இந்தசமாச
சாரம் நான்சொல்வதுபிசகென்று நினைக்கப்பட்டவர்கள் அவஸ்யம்
போய்விசாரித்துக்கொண்டால் சம்பூர்ணமாயதெரியவரும், இய
தவிர-கழனிகளில் ஸ்திரீகள்களைகளைதல்அறுப்பு முதலானவேலைகள்
யிந்ததேசத்தி லுஞ்செய்துவருகிறார்கள-அதெவ்விடமென்றால் இந்த
சென்னைபுரிக்குச்சொற்பதூரமாகிய ஆரணி பெரியபாளையத்துக்க
டுத்தஅனந்தகிராமங்களிலவசிக்கும் வெள்ளாழஸ்திரீகள் செய்யும்வே
லைகளைப்போய்ப்பிரத்தியக்ஷகாக்ஷியாய்க்கண்டுகொள்ளலாம் வேறூ
ர் பிராந்தியங்களிலும்இதைப்போலவேநடக்கின்றதுஅதையும்போ
ய்த்தெரிந்துக்கொள்ளலாம்-மேலும்தத்காலத்தில்மெய்மையாயிருக்
கப்பட்ட சிலவேளாளர்கள்எங்கள்பெண்டுகள் அப்படிவேலைசெய்
யப்பட்டவர்களல்ல அவர்கள்வேறேயொருஜாதிவேளாளர்களென்று
சொல்லுவார்களேயானால்புராணங்களில்நாலுஜாதிக்குள் சூத்திரராக
ப்புகழ்ந்து சொல்லப்பட்ட வேளாளர்களேவெளியிற் பெண்டுகள்
போய்வேலைசெய்யப்பட்டவர்களாகவே யிருப்பார்கள்-கம்பனால்பு
கழ்ந்து சொல்லப்பட்ட ஏரெழுபதென்னும்கிரந்தமும் அவர்களு
க்கேவுரியதாயிருக்கும்.

ஆதலால் இந்தமருதநிலத்திற்செய்யுந்தொழிலாகிய வருணபயிரிடுந்தொழிலானது அற்பமானதல்ல இத்தொழிலுக்குரியினை மேன்மையானதொழில்வுலகத்திற்கிடையாது-இத்தொழில் அற்பமன்றும் இத்தொழிலுக்குரிய வெள்ளாழனை அற்பமானவனென்றும் யார்தான்வாய்திறந்துசொல்லுவார்கள்,

ஆனால்த்துமதேசத்துக்குள்ள புராணகட்டுப்பாட்டின்படி பிராமணன் மோட்சத்திற்குரிய பகவத்தியானமாகிய வேதமோதவேண்டுமென்றும், இவர்களுக்குக்கீழ்ப்பட்ட க்ஷத்திரியர் வைசியர்-சூத்திரராகிய மூன்றுஜாதிகளும் மேற்படிபிராமணர்களை வணங்கிப்போஷிக்கவேண்டியதென்றும், க்ஷத்திரியனானவன் குருடர்-துஷ்டர் இவர்களைத்தக்கபடிதண்டித்து துஷ்டமிருகங்களைச்சங்கரித்து ப்பிராயர்ச்சிகள்கற்பித்துப்பார் பாவிகள் இவர்களைநல்மார்க்கத்தையடையும்படிக்கிணங்கி அடக்கியாளுதல்கர் நடக்கவேண்டியமானுஷட்டங்களுக்கு ப்பிராதமில்லாமலிருக்கவருணத்துக்குரியவர்ஞாயமப்படி முறைதப்பாமல் நடக்கத்தூண்டுவையக்கூடுத்திசூர்வஜாதிகளையும் பாதுகாத்துக்குடிகளிடத்திற்றனக்குரிய இறைவரியாகிய ஆதிலொருகூறு மைலையக்கைக்கொண்டு தானும் தன்னுடைய சகுடும்பத்தையும் உச்சீவிக்கவேண்டுமென்றும்,

வைசியனானவன் தனக்குமேலோராகிய பிராம க்ஷத்திரியரை வணங்கி வொருநிலத்திலவிளையப்பட்ட வஸ்துக்களை மற்றொருநிலத்தில் விளையப்பட்டவஸ்துக்களுக்குப்பதிலாகமாற்றியும் இலதப்பிலொத்த அனந்தவர்த்தகங்களைச்செய்தும் உழுது பயிரிட்டும் மாடுகள் மேய்த்தும் விர்த்திசெய்து சீவிக்கலாமென்றும், சூத்திரனானவன் தனக்கு மேலோராகிய மூன்றுபேருடையயேவல்களைச்செய்தும் பயிர்த்தொழில் படலான அனந்தத்தொழில்களைச்செய்தும் சீவிக்கவேண்டுமென்றும்சொல்லியிருக்கிறபடியால் பேதமாகப்பிரித்து யெழுதவேண்டிய அவஸ்யமாயிருக்கின்றது, வேதோத்தமமாய்ப்பார்க்குமிடத்தில்,நான்குஜாதிகளும்சமமேயொழிய வேறல்ல, ஆனாலித்த மேன்மையான பயிரிடுந்தொழிலை அனந்தகாலம் தொடங்கிப்பிரம க்ஷத்திரிய-வைசிய சூத்திரரென்கின்றநான்குஜாதிகளுஞ் செய்துவருகிறார்கள் அதற்குத்திருஷ்டாந்தம் பிராமணனிருந்தவூர்களுக்கு அ

க்ராமமென்றும், அந்தவூரைச்சேர்ந்த விளைவுநிலங்கள் மேற்படிபிராமணருக்குச்சொந்தமென்றும், க்ஷத்திரியரிருந்தவூருக்குமன்னர்வீடென்றும் கீழ ஊரைச்சேர்ந்த நிலங்கள் க்ஷத்திரியருக்குச்சொந்தமென்றும், வைசியர்க ளிருந்தவூருக்கு நகரமென்றும், சூத்திரரிருந்தவூருக்கு நத்தமென்றும், வழங்கிவருகிறதுந்தவிர இராஜாங்கத்துரிகாரம் முதலான அனுபோகங்களிலிருந்துவருகின்றது- மூலஸ்வாமியர்களுக்கு பெரும்பாலும் அரசர்கள் வாசம்பண்ணப்பட்ட பாரியதகரங்களிலிருந்துமுக்கியமாய்வர்த்தகத்தொழிலைக் கைக்கொண்டிருக்கிறபடியால் பெரும்பாலும் பயிர்த்தொழிலைக்கைவிட்டிருக்கிறார்கள் தகரஸ்தானங்களைவிட்டு முன்குறித்த -அக்ராரம் -மன்னவேடு நத்தம்- இந்தமூன்றுஸ்தானங்களில் வாசம்பண்ணுகிற வைசியர்கள் - வர்த்தகம்செய்தலோடு பயிர்த்தொழில்மாடுமேய்த்தல் முதலானதுகளைக் கைக்கொண்டு சீவித்துவருகிறார்கள்,

ஆனாலிந்தநாலு ஜாதிகளும் ஜாதியில்லாதமற்றவர்களும்மேன்மையானபயிர்த்தொழிலைஆதிதொட்டு செய்துவந்தபோதிலும்சூத்திரராகியவெள்ளாழரே இதிற்குறிப்பிடப்பட்ட பழுதிலத்தில் முக்கியவேலைசெய்பவரென்றுயாவருக்கும் விதிதமாகும்,

இதற்குதாரணம் பெரியபுராணம் திருத்தொண்டர் சரித்திரவரலாறு

கூவது-கவி.

காராளரணிவயலெழுதுதங்கள் ... ... *
கையாரதட்டமுடிதிருந்திவிளைத்தப் ... ... *
பாராளுந்திறலரசர்கவித்தவெற்றிப் ... *
பசும்பொன்மணிமுடிதிருந்துங்கலப்பையூண்ட .. *
வேராலெண்டிசைவளர்க்கும்புகழ்வேளாள ... *
சீரடிக்குஞ்சிறுகோலாற்றரணியாளச் ... ...*

* அக்ராரமென்பது,முதற்சாதியாரிருக்குமிடம், மன்னவேடு அல்லது-மன்னர்வீடு என்பது,இராஜபத்துக்களாகியக்ஷத்திரியர்களிருக்குமிடம், நத்தமென்பது சூத்திராகியகுடிகளிருக்குமிடம்.

சீராருமுடியரசரிருந்துசெங்கோல் ... ... *
செலுத்துவர்வேளாளர்புகழ் செப்பலாமோ ... *

இதின்தாத்பரியம்,

காராளனென்றுசொல்லப்பட்ட மருதநிலமாக்கள் அழகுபொருந்தியமருதநிலமாகிய கழனிகளிலுழுது தங்கள் கையினாற்பொருந்தும்படியாய் நட்ட நெற்பயிர்முடியானது செவ்வையாகு ஏ ஸ் இந்தப்பூமியையாளாநின்ற வல்லமையையுடைய அரசர் வெற்றிபொருந்திய இரத்நமிழைத்த தங்கள்சிரசிற்கவிழ்த்த முடிதிருந்தும் கலப்பையுண்டயேர்களினால் எட்டுத்திக்கும புகழ்பெற்றவேளாளரியேர்களையடிக்குஞ் சிறியவழங்கோலால் தரணியையாளும் அரசர் பூமியிலிருந்து செங்கோலசெலுத்துவர் ஆதலால் வேளாளர்புகழ் செப்பலாமோவென்பதாம்.

இந்தவெள்ளாழர் மருதநிலத்தில் வேலைசெய்கிறவர்களானபடியாற்றான் இந்தக்கவியில (தங்கள்கையாறநட்டமுடி) என்றுசொன்னதுபோல் மகாகவியாகிய - கம்பர் - வேளாளரைப் புகழ்ப்படி (ஏரொழுபது) என்னும் ஒருபிரபந்தம்பாடி மேற்படி மருதநிலத்திலுழப்பட்ட கலப்பையைப்பிரதானமாகவைத்துமேற்படிகலப்பைக்குரிய மற்ற ஆயுதங்களின்சிறப்பும், மருதநிலத்தில் மேற்படியார் வேலைசெய்யுஞ்சிறப்புஞ்சொல்லியிருக்கின்றது, ஏரொழுபதிற்சொன்ன கவிகளிற்சிலதை மருதநிலமாக்களுடைய வேலைகளைப் பற்றி மேற்கோளாகப் போட்டிருக்கின்றேனல்லவா-அதுதவிர இந்தயிடத்தில்மற்ற நான்குநிலத்துக்குடிகளைவிட இந்த மருதநிலமாக்களேசிரேஷ்டமுடையவரென்று தோன்றும்படி மேற்படி ஏரொழுபமுக்கியமான சிலதிருஷ்டாந்தம்வருமாறு.

ஏரொழுபது-நாற்றங்காற்சிறப்பு-உகூவது கவி.

எறுவளர்த்திடுமுகிலு மிசைவளர்க்குமெனவுணாப்பின் *
ஆறுவளர்த்திடுவதுசென் றலைகடலைத்தானன்றோ... ...*
வேறுவளர்ப்பனகிடப்ப வேளாளர்விளைவயலின்.....*
நாறுவளர்த்திடலன்றி ஞாலமுயிர்வளராதே... ... ... *

இதின்தாத்பரியம்.

வேளாளர் மருதநிலமாகிய கழனிகளிடத்தில் நெற்பயிரைவளர்க்காவிட்டால் பூமியிலுள்ளவுயிர்கள் வளராதென்பதாம்.

இதுவும் மேற்படி எரொழுபது-சுஉ-வது-கவி.

நெற்றுவித்தற் சிறப்பு.

நெல்லைமான்றெவ்வாத நலம்வளர்க்கும்பெருக்காளர் .....*
மல்லுபெருங்களத்தினிடை மாருதத்திற்றூற்றியிடுஞ்..... ...*
செந்நெல்லைப்பொலிவாலே செம்பொன்மலையெனகருவித்தே . *
ஆன்னெல்லின்பொலியாலே யவனியுயிர்வளர்ப்பாரோ..... .....*

இதின்தாத்பரியம்,

மேற்படி மருதநிலமாக்களாகிய வேளாளர்கள் களத்தில்நெல்லுகளைத்தூற்றி மகம்மேரு மலையைப்போல்குவிக்கும் பிரகாசத்தால் உலகத்துயிர்களை வளர்ப்பாரென்பதாம்.

இதற்குத்திருஷ்டாந்தம் நான் விரிவாக யெழுதவேண்டியதில்லை-சென்ற அக்ஷயவருஷத்தின் கருப்பே தெரிந்தவர்களுக்கும் தெரியாதவர்களுக்கும் திருஷ்டாந்தமாகயிருக்கின்றது - ஆதலால் முன் சொல்லப்பட்ட-குறிஞ்சி-பாலை-முல்லை-நெய்தல் - இதில் வாசம்பண்ணப்பட்ட குடிகளாகிய-குறவர் மறவர்-இடையர்-பரதவர் - இந்நான்குஜாதிகளைவிடமருதநிலமாக்களாகியவேளாளர்களேசிரேஷ்டமாகிய முதன்மையையுடையவர்களென்பதற்குச் சந்தேகமில்லை.

இந்தவேளாளர்கள் நான்குஜாதிகளி லொன்றாகவிருக்கிறதுந்தவிர பஞ்சதிலங்களில் சிரேஷ்டமான மருதநிலத்துக் குரியவர்களென்றும் பலநூல்களிலுஞ் சொல்லியிருக்க (நெல்சன்) இங்கிலீஷிற் செய்த (மதுரை) சரித்திரத்தில் உக்ரபாண்டியனுவன் பிரதேசங்களிலிருந்து நாற்பத்தெண்ணாயிரம் வேளாளரைக்கொண்டுவந்து தன்தேசத்திற்பயிரிடும்படி குடியேற்றினனென்றும், அதற்குமுன் பாண்டியதேசத்தில்-கள்ளர்-மறவர்- அகமடையர்- விளம்பர்எனகிற ஜாதிகளிருந்தார்களென்றும், அவர்களாலேஷேவேளாளரைப்பீடிக்கப்பட்டாரென்றும்- ஆதொண்டச்சக்கிரவர்த்திவெள்ளாழனாக்கனாரா

தேசத்திலிருந்து தொண்டமண்டலத்தில் குடியேறின சரித்திரத்தைப்பற்றியும், தானெழுதின சங்கதியைப்பற்றியும்-தனக்கு ஏவல் வையாய்த்தெரிந்ததாவது-பாண்டியதேசத்தில் வேளாளர் குடியேறினகாலம் கிறிஸ்துபிறந்த கூ வருஷமென்றும், மேற்படி வெள்ளாழர்கள் மற்றஜாதியாருடன்கூட சமமாயேறக்குறையமுட்பட்ட காலம்-ஊ௩ரு-ம் வருஷமென்றும்-அதன்பிற்பாடு பாண்டிய அரசானது-க்ஷீணித்தகாலத்தில் மூன்குறித்த-விளம்பர - கல்லர்களாலே துறத்தப்பட்டார்களென்றும், அக்காலங்களில் படைக்கேயிருந்து வந்த தெலுங்கர்களால் ஷை வெள்ளாழர்கள் அடங்கப்பட்டார்களென்றும் - மறுபடியும் இங்கிலீஷ்காரர் துரைத்தனத்தில் மேற்படி வெள்ளாழர்கள் தங்கள்பொறுமையினாலேயும் தானடக்கலையினாலேயும் - இப்போதுமேன்மையடைந்து வருகிறார்களென்றும் சொன்னதுமல்லாமல்அந்தவேளாளர்கள் காளைக்காட்டார் முண்ணவர்-சோழியர் - முதலான ஏழுபிரிவாய்ப் பிரிந்திருக்கிறார்களென்றும், அவர்களுடைய - நடை - தொடி பாவனை - முதல் னதுகளையும் சொல்லியிருக்கின்றார்.

இதல்லாமல் ஆதொண்டைச்சக்கிரவர்த்தி இந்தத் தொண்டமண்டலமாகிய காஞ்சிநாடு தன்னரசாட்சிக் குட்பட்டகாலங்களில் பிரதேசங்களிலிருந்து கொண்டைகட்டி வேளாளனைக்கொண்டுவந்து பயிரிடும்படி பூமிகளைவிட்டானென்றும், அதைச் சாகுபடிசெய்துவந்தார்களென்றும் சொல்லியிருக்கின்றது- அதுபோலவே மேற்படி வெள்ளாழருஞ் சொல்லிக்கொள்ளுகிறார்கள்-(எல்லீசு)செய்த மிராசிஷ்டத்திலும் மேற்படி வேளாளர்கள் பிரதேசத்திலிருந்துவந்து குடியேறினார்களென்று சொல்லியிருக்கிறார்கள் இதைப்புத்திமான்கள் ஆலோசிப்பார்களாகில்தகைப்புக்கிடந்தருமல்லவா- ஏனென்றால் ஒருதேசத்திலிருந்துமற்றொருதேசத்துக்குக் குடியேறவருகிறவர்கள் தாங்கள்பெவ்வளவு ஆதரவற்றுவதுதாங்களிருந்ததேசத்தில் மற்றஜனங்களால் பலவிதயிம்சைப்பட்டாவது தாழ்ந்தஸ்திதியிலிருந்தாவது நினைப்பதற்குங்கூடாத துற்பாக்கியத்திலிருந்தால்மாத்திரம் வேறேயொருதேசத்துக்குக் கூப்பிடுதற்குமுன்செல்று குடியேறவேண்டும் ,இதுவன்றி அரசர்களொருவருக்கொருவர் போர்புரிந்து ஜெயித்

தகாலங்களில் அந்தராசகுடும்பத்தாரும் அத்தேசத்து மற்றக்குடிகளும் செம்பாரமாகவே குடியேறுகிறவழக்கமுண்டு இதுபோலவே மகம்மதுமதஸ்தர்களாகிய அரேபியர் இத்தேசத்தின்மேற்படையெடுத்து வந்து குடியேறினார்கள் - அப்படியே ஐரோபகண்டத்தாராகிய இங்கிலீஷ்- பிரஞ்சி- டென்மார்க்கு- புடுத்துகீசு-முதலானவரும் வெகுகாலங்கழிந்து குடியேறினார்கள்.

ஆனால் இந்த வெள்ளாழர்களை ஒருவரால்கொண்டுவந்து குடியேற்றப்பட்டதென்று எழுதியிருப்பதால் இவர்கள் தற்பாக்கிய திசையிலிராமல் ஒருதேசத்துக்குக் குடியேறமாட்டார்களென்று நன்றாய்த்தெரியவருகிறது.

இவர்கள்பிறதேசத்திலிருந்துவந்து குடியேறியிருப்பார்களானால் புராணநூல்களிற்சொல்லப்பட்ட சூத்திரராகிய வேளையாளொன்றோ [illegible] கிற வெள்ளாழர்களாராயிருப்பார்களோ தெரியவில்லை. அப்படியே பூர்வீகவெள்ளாழர்கள் நாங்கள்தானென்றுவேறொருவகுப்பாரும் [illegible] ராஜபாண்டியனும்- ஆதொண்டச்சக்கரவர்த்தியும் நாங்கள் கொண்டுவரப்பட்டவர்களென்றும் சொல்லுகிறவெள்ளாழர்கள் எந்தஜாதியாவார்களோ தெரியவில்லை- ஆனாலவர்களிலொருவர் தேசத்தை செவ்வையாய்வெளியிட்டால் அத்தேசத்திலிருந்தகாலத்தில் அவர்கள் சந்ததியார்களிருப்பார்களாகில் அவர்களை [illegible] ஜாதியாரென்று அறிந்துகொண்டால் இவர்களையும் அந்தஜாதியாரென்றுகொள்ளலாம்.

இவர்கள் வந்தேறுங்குடிகளென்றும், அல்லது இத்தேசத்துப்பூர்வகுடிகளென்றும், அல்லது பூர்வீகவெள்ளாழர்கள் வேறேயிருக்கிறார்களென்றும், உண்மைசரியாகத்தெரியவில்லை -ஆதலால் நான் புராணநூல்களில் மருதநிலமாக்களாகிய வெள்ளாழரோ சூத்திரரென்று சொல்லியிருப்பதைப்போல் நான்சொல்லியிருக்கின்றேன் ஆதலால் பூர்வீகவெள்ளாழர்கள்- நாங்களென்று ருசுப்படுத்துமவர்கள் புராணநூல்களிற்சொல்லுகிறபெருமைகளுக்கும்மற்றபாத்தியத்துக்கும்சொந்தமாவார்கள்.

உ-வது அதிகாரம்-கூ-வது-பிரிவு

இந்தப்பிரிவில் நூலெயச்சிடப்பட்டவருடையவிபரமும்-தெலுங்குதேசத்திலிருந்துயிற்தத்தமிழ்நாட்டுக்குவந்ததெலுங்கருடைய விபரமும் - இத்தேசத்திலிருக்கும் சிலர் தாங்களுயரமவதுமென்றுஅக்ரமிக்கும் விபரமும் சொல்லியிருக்கின்றது

இந்தப்புத்தகத்தில் திருஷ்டாந்தவுதாரணமாகச் சொல்லிக்காட்டினபுராண நூல்கள்தவிர இன்னம்அனந்தநூல்களிலும்வெள்ளாமூர்களையும் [இடையர்களையும்] சூத்திரராகவும் சூத்திரரில் மேலாகவும் சொல்லியிருக்கஅகஸ்மாத்தாய்ச்சூடாமணிநிகண்டில்மாத்திரம்,வைசியரென்று நடுவில்கற்பித்திருக்கின்றது ஒப்படிக்கற்பித்த ருஷிடர்களைப்போல் அனந்ததுஷிடர்கள்சிலநூல்களிலிருக்கிறபூர்வீகத்தைக்கெடுத்து நூதனமாய்ச்சிலதைக்கற்பித்து அச்சிடுவார்களென்பதற்குச் சந்தேகமில்லை- ஆனால்பெரியோர்கள் செய்தநூல்களைப்பரிசோதித்து அச்சிடப்பட்டவர்கள் யெப்பேர்ப்பட்டவர்களாயிருக்கவேண்டுமென்றால், இலக்கண நூலாகிய(தன்னூல்.) பொதுப்பாயிரம் உ௰கூ-வது-சூத்திரம் வருமாறு.

ஐயர்திரப்பொருளையுணர்த்தலு ... ... *
மெய்நடுநிலையுமிகுநிறைக்கோற்கே ... ... *

இதின்தாத்பரியம்.

நூலாசிரியன்-உரையாசிரியன்-முதலான ஆசிரியர்கள்-நிறைக்கோலைப்போல் பொதுவாயிருக்கவேண்டுமென்று குறிப்பித்தார்-நிறைக்கோலின்குணமாவது, சந்தேகர்திரறிறுக்கப்பட்ட பண்டத்தினளவைக்காட்டலும், உண்மைபெறத்தானிரண்டுதட்டுகளுக்கு நடுவேநிற்கையும்,தராசுகோலின்குணங்களானபடியால்-அதுபோல மூன்குறித்தஆசிரியர்களும் நூலிற்சொன்னஞாயமானகருத்தைவெளியரங்கமாயெடுத்துக்காட்டவும்,வித்துவான்கள் நூல்களைப்பேரில்மாறுபட்டகாலங்களில் தாங்கள் நடுவாகநின்று வுண்மையைச்சொல்லப்பட்டவர்கள்ஆசிரியர்களென்பதாம்.

இந்தயிலக்கணத்திற்சொன்னதுபோல்திராசுமுனையொத்துநடுவோகயிருந்துபெரியோர்கள்செய்தகருத்தைக்கெடுக்காமலும்வேறே மத்தியில்சேர்க்காமலும் பரிசோதித்து அச்சிடுவாராகில் எந்த

நூலுக்கடாவாகி சரியாகவேயிருக்கும், அப்படியல்லாமல் தெரிபாதவாகளும் கெட்டவெண்ணத்தையுடையவர்களும் நூல்களைச்சேர்த்து அச்சிடுவார்களால் முன்னோர்கள்செய்த நூலின்கருத்து கெட்டுப்போகுமென்பதற்குச் சந்தேகமில்லை.

ஆனால்- மகாராசராசசரீ. ஆறுமுகநாவலரவர்கள் அச்சிட்டவேறு சிறநூல்கள்மாத்திரம் வேறுமானுபாடிகளாகவும் பெரியோர்கள் செய்தகருத்தைக்கெடுக்காமலும் அதிகபிரயாசமுயாடு - ஆராய்ச்சி செய்து அச்சிடுவதனால் அந்தநூல்களைப்பார்ப்பதற்கு ஆனந்தமாயிருக்கின்றது; இந்தமகானுபாவரோ சிலரீதானுமாருக அச்சிட்டிருக்கும் நூல்களைத்திருத்தி அச்சிடுவாராகில் சகலரும் சந்தோஷமடைவார்கள இதுபோலமற்ற அச்சுக்கூடத்தார்களுமிந்துவான்களும்பாருமையைவிட்டு சரீரப்பிரயாசை யெடுத்துக்கொள்ளுவார்களானால்கெடுதியடைந்தநூல்களெல்லாம்பழையபடி சீகிரத்தில் திருந்துமென்பதற்குச்சந்தேகமிராது - இதுதவிர சமஸ்கிருதநிகண்டாகிய அமரமென்னும்நூலில் பிரம்மவருக்கம்-க்ஷத்திரியவருக்கம் வைசியவருக்கம் சூத்திரவருக்கமென்று நாலாகப்பிரித்து அவர்கள் தொழிலை அந்தந்தயிடத்திற் சொல்லியிருக்கின்றது - தமிழ்நிகண்டுசெய்தவர் அப்படிச்சொல்லாமல் முதல் பிராமணருக்குரிய பெயரெல்லாஞ்சொல்லி இண்டாவது- க்ஷத்திரியரைச்சொல்லும்பதத்தில் க்ஷத்திரியகுலத்துக்குத் தலைமையாய் அரசாண்டுவந்த சேர சோழ-பாண்டியர்களைச்சொல்லி மூன்றாவது வைசியராகிய- செட்டிகளைச்சொல்லி நான்காவது சூத்திரராகிய வேளாளர்களைச்சொல்லி - அதன்பின்னால்குயவனாயும்-அதற்குப்பின் கண்ணாளனாயும், அதற்குப்பின்-கொல்லனாயும்-அதற்குப்பின் தச்சனாயும-அதற்குப்பின் தட்டானாயும்- அதற்குப்பின்சிப்பாசாரியையும்- அதற்குப்பின் கன்னானாயும்- அதற்குப்பின்வண்ணானாயும்- அதற்குப்பின் நாவிதனையும்- அதற்குப்பின் கூடைமுறங்கட்டும்வேதக்காரனையும்- அதற்குப்பின் துணிநெய்வானாயும்-அதற்குப்பின் பறையர்- அல்லது - சண்டாளனாயும்- அதற்குப்பின் பாணனாயும்- அதற்குப்பின் வாணியனாயும்-அதற்குப்பின் சாணானாயும்படிப்படியாய்த்தாழ்த்திப்பெயரைச்சொல்லியிருக்கின்றது.

இந்தயிடத்திலேவாருஞாயம்சொல்லவேண்டிய அவசியமி[illegible]ப
தால்அதுதசசொல்லுகிறேன் சூடாமணிநிகண்டு சொன்னமை[illegible]
ருடராஜவர் இதற்குமுன்னூலாகிய தீவகரம் பிங்கலம் [illegible]
மூலர்களைப்பார்த்துச்செய்தவரோதவிர வேறல்ல- அந்நூலைப்போ
ல்செய்யாமல் சிலதைமாத்திரம் அக்கிரமமாய்த் தன்மனம்போல
முன்னுமின்னுமாய்ச்செய்திருக்கிறார் அதுஎன்னவெனில் இத
ற்குமுன்னூலாகியதிவாகரத்தில் -முதல் சிவன்பெயர் சொல்லியபுக
ர இவர்- அருகன்பெயர்சொல்லி அதைஆராய்ந்தால் தன்மதத்தின
தாட்டிக்கொள்ள நூல்சொல்லவந்தவரோதவிர திவாகரப் பிங்கல
கவற்பாவாயிருப்பதால் கற்பவர்க்குமெய்ம்மைக்கற்கக்கூடாதாதால்
தாம்விருத்தப்பாவாய்ச் சொல்லுகிறேனென்றுசொல்லி
சித்தாந்தபுலியான [illegible]
[illegible]
[illegible]
[

ஞ்சூடாமணிநிகண்டானது இவாகரம் பிங்கலத்தைப்பார்த்து யிய ற்செய்ததாமென்று யெப்படிச்சொல்லலாம்.

இந்நிகண்டையியற்றுளுக்குமுந்திச்செய் திருக்கலாகாதாவெ ன்றுசிலரொண்ணுவார்கள் இந்நிகண்டுமெய்ஞ்ஞானகளுக்குப்பிந்திச் செய்ததென்றுதிருஷ்டாந்தப்வருமாறு.

வெ௧திகண்டு சிறப்புப்பாயிரம் எ வது கவி.

ஆங்கமேபோயமில்லறி யலகிலாவிறந்தமற்றுஞ் ... *
செங்கரவர்த்திமுன்றுந் தவாகரசிறப்பிக்க .. *
பிகல லாறாடாபிம் பெயலிலாசெய்தார்சேர ... *
ஓங்கிவையிரலை பிங்கற்க வெளிதலவெட் டுருபிந்து ... ...*

இலக்கணப்பரிசட்,

முதல்நூல் வ்ரிராசாரிட நூல- நிலைமுதலாகிய இலக்கணமெல்லா எல்லைறிந்த நூல்களை வுடைய ... ...

குதியும்-ஒருசொற்பல்பொருட்பேர்த்தொகுதியும்- பலபேர்கூட்டத்தொருபேர்த்தொகுதியும் - திவாகரத்திலே வருகிறவரிசைபோல் வைத்துப்பிங்கலத்திலேவரப்பட்டபொருளையும்தெரிந்தென்பதாம்.

இந்தயிரண்டுகவியினாலும் திவாகரம்பிங்கலந்தை யென்னும் நூலைப்பார்த்து செய்ததாகச்சொல்லியிருக்க அதைப்போல்செய்யாமல்இவர் சொல்லொன்றும் செய்கையொன்றுமாயிருப்பதைக்குறித்துயோசித்தால்இவர்ஏதோவொரு பெண்ணைத்தைக்கொண்டு நூல் செய்யவந்தவரேதவிர லோகோபகாரமாய் விருத்தப்பாவாசெய்யவந்தேனென்றுசொன்னசொல் நம்பத்தக்கதல்ல.

தப் பூமியின்கண்வந்துபிறக்கும் வழியானதுமறைந்துவிடும், விஷ்ணுவிருலதியப்படாதபாதமிரண்டையும் வணங்கப்படும், சந்தோஷிப்படப்பட்டஇசைகளோடுங்கூடியசாம வேதகானத்தைக்கற்கப்படும் நல்லநாடாகியபாண்டியநாட்டுக்குரிய ஆண்டன்மையுடையநால்வகைச்சேனைக்குச்சொந்தமாகிய அரசர்களின் பெருமையுமாகும், சந்தோஷிப்படப்பட்டஇளமையினதுநலத்தைவேறுபடுத்துந்தன்மை வெளிப்படுமென்பதாம். ஆகாவென்பதுஆகும், தே-ஈற்றசை. இதைஇலக்கணநூலிற்கண்டுகொள்ளலாம், சுவாமிமீன்வலைவீசியதுதிருவிளையாடற்புராணத்திற்கண்டுகொள்க. இந்தக்கவியினாற்படைக்குச்சொந்தக்காரர் அரசரென்றுவிளங்கியதுபோல் அனந்தநூலிலுங்காணலாம்.

இந்தஞாயம் பண்டிதர் - பாமரர் - யாவருக்குந்தெரியலாம். நாணிதைமுன்னிந்தஅதிகாரத்தில் சூ வது- பிரிவில்-படையாட்சியென்றுசொல்லப்பட்ட சேனாதிபதியேஅரசனென்று அதற்குரியநாயஞ்சொல்லியிருப்பதால்விவரித்தெழுதவேண்டியஅவஸ்யமில்லை.

---

௩ வது அதிகாரம் ௯-வது-பிரிவு.

இந்தப்பிரிவில்அரசருக்குப்பல்லவனென்கிறபேருரியதென்று திருஷ்டாந்தம்வருமாறு.

அரசருக்குப்பல்லவனென்கிற பேரெப்படிவந்ததென்றுசிலர் யோசிப்பார்கள் -நிகண்டுதிவாகரங்களில் அரசர்பொதுப்பேரில்புரவலனென்றுசொல்லியிருக்கின்றதல்லவா - அதின்பதப்பொருள்-புரமென்றுசொல்லப்பட்டதேகத்தில்பலமென்றுசொல்லப்பட்ட வல்லவனானபடியால் அரசனுக்குப்புரவலனென்றுசொன்னார்களேதவிரவேறல்ல, அந்தப்புரவலனென்கிறபேர் வல்லவனென்றெப்படிவந்ததென்றால் தலைக்குறைப்பதமாகபுரமென்பதுபோய் வலனென்றாயிற்று-வலம்-வழக்கதைப்போல் வல்லவனென்றாயிற்று,

ஆனால்வல்லவனென்கிறபேர் பல்லவனென்றெப்படியாகுமென்று சிலரெண்ணுவார்கள் -அதின்விபரமானது சம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் - வகரம் - பகரமாகவும் - பகரம்-வகரமாகவுங்கிரிகலியற்கையானபடியால் வல்லவனென்கிறபேர் பல்லவனென

றுதிரிந்தது;அதற்குகாரணம்-வாகு பாசென்றும்,வண்டி பண்டியென்றும்,வல்லயம் - பல்லயமென்றும், வலம் பலமென்றும், வடிவம் படிவமென்றும்,இதுபோலனந்தம்பேதமில்லாமற்றிரிவதைக் கண்டுகொள்ளலாம்.இர்தக்காரணத்தைப்பற்றியே அரசர்களுக்குப்பல்லவனென்கிறபேருரியதாயிருக்கின்றது ஆகையால்பல்லவனென்பது அரசனென்றேமேற்கோள்வருமாறு.

பெரியபுராணம்-திருத்தொண்டபுராணத்தில்

அடைவு-கவி,

அத்தலைகயபுகழ்வேளாண்மரபிற்சேக்கி ... ... *
ஞார்குடியில்வந்தவருண்மொழித்தேவற்கு ... ... *
தத்தபரிவ்வெறுந்தலைசெலவோடலாச்சுத் ... ... *
தலைமயலிற்றவிர்தமகுத்தலைதுபேரும் ... *
உத்தமச்சோழப்பல்லவனாமெனவோ ... ... *
முயர்பட்டங்கொடுத்திடவாங்கவர்தீர்நாட்டு ... ... *
நித்தனுறைதிருநாகேச்சுரத்தில்லப் ... . *
நிலைதவினுண்மறைவாதநிலைபடிக்கார் ... .. *

இதன்தாத்பரியம்,

புகழையுடையவேளாளர்மரபிற் சேக்கிழார்குடியிற்பிறந்த அருண்மொழித்தேவரென்கிறபேரையுடையவருக்குச்சோழராஜனவன்தன்னரசுக்குரியதலைமையான அதிகாரத்தைக்கொடுத்து மேலானபேராகிய சோழபல்லவனென்று வுயர்ந்தபட்டத்தைக்கொடுத்திடஅந்தச்சோழனுடையவளப்பம்பொருந்தியநாட்டில்அழியாதவராகிய பரமேஸ்வரன் வாசம்பண்ணப்பட்ட திருநாகேச்சுரத்திலன்பானதுறைந்து என்றுமறவாதநிலைமையில்மிகுந்தவரென்பதாம்,

இந்தக்கவியினால் வெள்ளாழருக்குள்சேக்கிழார்குடியில்வந்த அருண்மொழித்தேவருக்குச்சோழனவன் மந்திரிப்பட்டங்கொடுத்ததுமன்றித்தன்மரபுப்பேராகிய பல்லவனென்கிறபேரையுங்கொடுத்திருக்கிறபடியால் இவர்சூத்திரனாயிருந்தும் அரசுக்குரியஅதிகாரத்துக்குவந்தபடியால் பல்லவனென்கிறபேர்செயற்கையாற்பொருந்

துமேதவிர இயற்கையாற்பொருந்தமாட்டாது, சோழன்சந்ததியாருக்கு இயற்கையிற்பொருந்தியிருக்கின்றது,

சேக்கிழாரென்பது - வெள்ளாழர் குடிப்பேரிலொன்று, அருண்மொழித்தேவரென்பது-அவர்சொந்தப்பெயர், உத்தமப்பல்லவச்சோழனென்பது-இவருக்குச்சிறப்புப்பெயராய்அரசன்றன்பெயராக்கொடுத்தது, கிழாரென்கிறபட்டமானது அக்காலத்திற் சூத்திரருக்குரியதேவிர வேறல்ல, அதெப்படியென்றால்- ஸ்மிருதியாகியமநுநூலில்-உ-வது-அத்தியாயம் ஜாதகர்ம்மாதிசம்ஸ்காரம் ௩௧-வது சூலோகப்பிரகாரம்பிராமணனுக்குமங்களத்தையும், க்ஷத்திரியனுக்குப்பலத்தையும், வைசியனுக்குப்பொருளையும்சூத்திரனுக்குத் தாழ்வையுந்தரப்பட்டபேரை இடவேண்டுமென்றுசொல்லியிருப்பதுபோல்அக்காலத்திற்பிராமணனுக்கு ஐயர்-ஆசாரியர் -குருக்கள் இதுமுதலாகியமங்களமான உயர்வைத்தரப்பட்டதும், க்ஷத்திரியருக்கு- வருமன்- வீரன்- சிங்கன்- சூரன்- மிண்டன்-கண்டன் இதுமுதலான வலுவைத்தரப்பட்டதும், வைசியருக்குத்-தனபாலு நவகோடி - இலட்சாதி - இதுமுதலானசெல்வத்தைத்தரப்பட்டதும், சூத்திரருக்குப்பொற்கிண்ணக்கிழார்- மாமரத்தின்கிழார் -இலுப்பைமரத்துக்கிழார்- முதலானஇழிவைத்தருகிறபேரும் யிட்டுவழங்கிவந்தார்கள் - கிழார்-என்பது, கீழாரென்று நெடில்- குறிலாகமருவிற்று, கீழாரென்பது இவர்களுக்குமேற்பட்டமூன்றுஜாதிக்கும் தாழ்ந்தவரென்பதே, இந்தக்கீழாரென்கிறபேரும்மூன்-உ-வது-அதிகாரம்-டு-வது பிரிவில்- மருதநிலத்தலைவனுக்குரிய கிழவனென்கிறபேரும் முற்காலத்திற்சூத்திரருக்கேவுரித்தாய்வழங்கிவந்திருக்கின்றது இக்காலத்தி லதுமாறிப்பலவாறுகவழங்கிவருகிறார்கள்- ஆனாற்றாழ்ந்தவர்கள் உயர்ந்தவர்கள்பேராக்கொண்டுவழங்கிவருவதெப்படியிருக்குதென்றால் கறுப்பாட்டை வெள்ளாடென்றும், கெட்டபாம்பை - நல்லபாம்பென்றும் இந்துக்கள் சொல்லுகிற வழக்கம்போல்மங்கலச்சொல்லாகவுங்கொள்ளலாம்,

(*)

இதுவும்மேற்படி - பெரியபுராணம் திருநாவுக்கரசுசுவாமிகள்
சரித்திரம்-அ ச வது-கவி.

சொன்னவண்ணமேசெய்வது துணிந்ததுன்மதியோர் *
மூன்னதாஞ்சென்றுமுறைப்படுவோமெனமுயன்றே *
பின்னதன்மையிலிருட்குழாஞ்செல்வதுபோல ... . *
மன்னனுகியபல்லவனகரில்வந்தணைந்தார் ... ... *

இதின்தாத்பரியம்.

ஆலோசித்தபிரகாரமேசெய்யத்துணிவுகொண்டகெட்டபுத்தியையுடைய சமணர்கள் முன்னுதாகநாம்சென்று (சோழனுகிய பல்லவனிடத்தில்) முறையிடுவோமென்று முயன்றுஇருட் கூட்டங்களானதுபோவதுபோல் அரசனென்றுசொல்லப்பட்ட பல்லவன்பட்டணம்வந்துசேர்ந்தாரென்பதாம்,

(*)

இதுவும்மேற்படி புராணம்-திருநாவுக்கரசுசுவாமிகள்
சரித்திரம் அ அ-வது-கவி

வினையலங்கற்பல்லவனுமதுகேட்டுவெகுண்டெழுந்து *
புனையுடையமனத்தினராய்ப் போவதற்குப்பொய்ப்பிணிகொண்*
னைசிறந்தசமயத்தையழித்தொழியப்பெறுவதே ... *
கனையிறவத்தீரதனுக்கென்செய்வதெனக்கனன்றான் ... .. *

இதின்தாத்பரியம்.

வாசனையுடையமாலையைத்தரித்த (சோழனென்று சொல்லப்பட்ட) பல்லவனுனவன் கேட்டுகோபித்துத்திருட்டு மனதையுடையனுய்ச் சைவசமயத்துக்குப்போகும்பொருட்டுப் பொய்வியாதிகொண்டுசிறந்தசமணசமயத்தைக்கெடுத்துப் போனவனையென்ன செய்வதென்றுகோபித்தாரென்பதாம்,

இதுவும்மே- திருநாவுக்கரசுசுவாமிகள்

சரித்திரம்-கூடு-வது-கவி.

பல்லவனுமதுகேட்டுப் பாங்கிருந்தபாயுடுக்கை .. ...*
வல்லமணர்தமைநோக்கி மற்றவனைச்செய்வதினிச் ... *
சொல்லுமெனவறந்துறந்து தமக்குறுதியறியாத .. ...*
புல்லறிவாரஞ்சாது நீற்றறையிலிடப்புகன்றார்... ...*

இதின்தாத்பரியம்,

அரசனானவன்சேட்டு பாயுடையாகவுடைய சமணர்களைப்பார்த்து மறுபடியும்இவனை யென்னசெய்வது சொல்லுங்களென்று கேழ்க்க தருமத்தைக்கைவிட்ட அற்பவறிவையுடையவர்களஞ்சாமற் சுண்ணாம்பறையில்வைக்கும்படிச்சொன்னானென்பதாம்.

இதுவும்-மேற்படி- திருநாவுக்கரசுசுவாமிகள்

சரித்திரம் ௩சடு-வது கவி,

புல்லறிவிற்சமணர்க்காய்ப்பொல்லாங்குபுரிந்தொழுகும்... *
பல்லவனுந்தன்னுடையபழவினைப்பாசம்பறிய ... ...*
அல்லலொழிந்தங்கெய்தியாண்டவரசினைப்பணிந்து ... *
வல்லமணர்தமைநீத்து மழவிடையோன்றாளடைந்தான் ...*

இதின்தாத்பரியம்.

அற்பவறிவையுடையசமணருக்காகத் (திருநாவுக்கரசுசுவாமிகளைப்)பொல்லாங்குசெய்யப்பட்டபல்லவனுந்தன்னுடையபூர்வீகதீவினையானது தன்னைவிட்டு நீங்கத்துன்பத்தையொழித்து திருவதிகையில்வந்துதன்னையாண்டுகொண்டகடவுளைப்பணிந்து வலுமையான சமணர்களைநீக்கிஈஸ்வரனுடையபாதத்தைச்சேர்ந்தானென்பதாம்,

சோழராஜனானவன் சமணர் சமயத்தைச்சேர்ந்திருந்துதிருநாவுக்கரசுசுவாமிகள் மகத்துவத்தைக்கண்டு மறுபடியுஞ் சைவசமயத்திற்சேர்ந்து சமணர்களைநாசஞ்செய்து பாடலிபுரத்திலிருந்த சமணர்கோயில்களையிடித்துக்கொண்டுவந்து திருவதிகையில் வீரிட்

டேஸ்வரருக்கு ஆலயமும் அதல்லாமல் அனேக சிவஸ்தலங்களுங் கட்டிவைத்தாரென்கிற சரித்திரத்தில் ஓரிடத்திலரசனென்றும் ஓரிடத்திற் பல்லவனென்றும் ஒருவிடத்தில் மன்னவனென்றும் வேற்றுமையில்லாமற் சொல்லுகிறபடியால் அரசருக்குப்பல்லவனென்கிறபேரேதவிர வேறல்ல.

இதுவும்-பெரியபுராணம்- ஐயடிகள்நாயனார்சரித்திரம்-க-கவி.

வையநிகழ்பல்லவர்தங்குலமரபின்வழித்தோன்றி ... *
வெய்யகலியும்பகையுமிகையொழுகும்வகையடக்கிச் *
செய்யசடையவர்சைவத்திருநெறியாலரசளிப்பார்.. *
ஐயடிகணீதியாலடிப்பணித்துஞ்செங்கோலார் ..... *

இதின்தாத்பரியம்

இந்தப்பூமியிற் பிரகாசிக்கப்பட்ட பல்லவருடைய வம்மிசத்தி லுண்டான வெவ்விதான தரித்திரத்தையும் சத்துருக்களையுமடக்கிச் சிவந்த ஜடையையுடைய சைவநெறியா லரசாளப்பட்டவர் ஐயடியென்று சொல்லப்பட்ட அரசனுனவர் மநுநீதியினால் மற்றவர்களைத்தன்னடியில் வணங்கும்படிச் செங்கோல் நடத்தப்பட்டவரென்பதாம்.

இதுவும்-மேற்படிபுராணம்-கழற்சிங்கநாயனார்சரித்திரம்-க-கவி.

படிமிசைநிகழ்ந்ததொல்லைப்பல்லவர்குலத்துவத்தார் *
கடிமதின்மூன்றுஞ்செற்றகங்கைவார்சடையார்செய்ய *
அடிமலரன்றிவேறொன்றறிவினுட்குறியாநீர்மைக் .. *
கொடிநெடுந்தானைமன்னர்கோக்கழற்சிங்கரென்பார் *

இதின்தாத்பரியம்,

இந்தப்பூமியில்கண்ணிற் பிரகாசிக்கப்பட்ட பழைமையான பல்லவர்குலத்தில்வந்தவதரித்தவர் திரிபுரங்களையெரித்தவரும் கங்கையைச் சடைபாரத்துடையவருமான பரமேசுவரரது சிவந்தபா

தமல்லாது வேறொன்றையும் நினையாத நெறியையுடைய வெற்றிக் கொடிகளும் நீண்டசேனையுமுடைய அரசனான கழற்சிங்கராயனென்பதாம்,

இவ்விரண்டுகவியினாலும் அரசருக்குரியபல்லவரென்கிறபேர் க்ஷத்திரிய குலத்துக்கே யுரியதென்று தோன்றும்படி இந்தவுலகத்தை விளங்கச்செய்யும் பல்லவர்குலமென்றார் - அதினாற்றான் அரசருடைய சந்ததியாரும் நாளதுவரையிலும் பல்லவனென்று பேர் வைத்து வழங்கிவருகிறார்கள்.



ஈதல்லாமற் றிராவிடவேதமாகிய நாலாயிரப்பிரபந்தத்துள்
திருமங்கையாழ்வார்சொன்ன பெரியதிருமொழி.
பரமேசுவரவிண்ணகரப்பத்து-பரமபதநாதன்விஷயம்,

உ - வது - கவி.



கார்மன்னுநீள்விசுமபுங்கடலுஞ்சுடரு ... ... *
நிலனும்மலையும்தன்னுந்தித் ... ... *
தார்மன்னுதாமரைக்கண்ணனிடந்... ... .. *
தடமாமதில்சூழ்ந்தழகாயகச்சி ... ... *
ஏர்மன்னுதென்னவனைமுனையிற்செருவிற்றிறல் ... *
வாட்டியதிண்சிலைகோன் ... ... *
பார்மன்னுபல்லவர்கோன்பணிந்த ... ...*
பரமேச்சுரவிண்ணகரமதுவே ... ...*

இதின்தாத்பரியம்.

ஆகாயமும்-சமுத்திரமும்-மூன்றுசுடரும்-பூமியும்-மலையும்-தன்னுந்தியிலுண்டாக்கின சிவந்ததாமரைக்கண்ணனுக்கு இடமாகிய விசாலம்பொருந்தியமதில்சூழ்ந்த காஞ்சீபுரியில்பாண்டியனையுத்த முகத்திற் செயித்தபலம்பொருந்திய வில்லையுடைய அரசனான இந்தப்பூமியில் நிலைபெற்ற பல்லவராயன்பணிந்த பரமேஸ்வரவிண்ணகரமென்பதாம்.

இந்தக்கவியினால் சோழன்-பாண்டியனைச் செயித்ததைக்குறிப்பித்தார்.

—*—

இதுவும்-ஷை-பரமேஸ்வரவிண்ணகரப்பத்து ௬-வது-கவி.

திண்படைக்கோளரியினுருவாய்த் ... *
திறலோனகலஞ்செருவிலமுன்னாட் ... *
புண்படப்போழ்ந்தபிரானதிடம் ... ... *
பொருமாடங்கள்சூழ்ந்தழகாயகச்சி ... *
வெண்குடைநீழற்செங்கோனடப்ப ... *
விடைவேல்கொடிவேற்படைமுன்னுயர்த்த ... *
பண்புடைப்பல்லவர்கோன்பணிந்த .. ... *
பரமேச்சுரவிண்ணகரமதுவே ... ... *

இதின்தாத்பரியம்.

இரணியனை நரசிம்மரூபமாய்வந்து பிளந்த கடவுளானவருக்கு மாடமாகிய மாடகூடங்கள்சூழ்ந்த காஞ்சீபுரியானது வெள்ளைக்குடைநீழலிலிருந்து செங்கோ நடத்தி விடைகொடியும்-விற்கொடியும்-வேலாயுதமென்கிற ஆயுதத்தையும் தன்முன்னே விருதாகப் பிடிக்கப்பட்ட பல்லவமகாராஜன்பணிந்த பரமேஸ்வர விண்ணகரமென்பதாம். வேலென்பது ஆயுதப்பொதுவானபடியால் இந்தவிடத்தில் சோழபல்லவனுக்கு வில்லவனென்று வந்திருக்கிறபடியால வேற்கொடி-என்பது-விற்கொடியென்றுகாண்க.

இந்தக்கவியினால் - சேரனென்பதும் - சோழனென்பதும் தேசத்தைப்பற்றியேயொழிய [illegible]வற்றுமையில்லாததால் சேரனுக்குடையவிற்கொடியைச்சோழனுக்குரியதென்றும்சோழனையே சேரனுகவுஞ்சொன்னார்.

—*—

இதுவும்-ஷை-பரமேஸ்வர விண்ணகரப்பத்து-அ-வது-கவி.

குடைத்திறன்மன்னவனுயொருகாற் ... *
குரங்கைப்படையாமலையாற்கடலை ... *
அடைத்தவனெந்தைபிரானதிடம் .. ..*
மணிமாடங்கள்சூழ்ந்தழகாயகச்சி ... ... *

விடைத்திறவில்லவனெனமலியில் ... ... *
வெருவச்செருவேல்வலங்கைப்பிடித்த ... ...*
படைத்திறல்பல்லவர்கோன்பணிந்த... ... *
பரமேச்சுரவிண்ணகரமதுவே ... ...*

இதின் தாத்பரியம்.

ஒருதரம் அரசனாக வவதாரஞ்செய்து குரங்கைப்படையாகக் கொண்டு மலையினாலேகடலை யணைகட்டின என்கடவுளாகியவருக்கிடமாகி உப்பரிகையினாற்சூழ்ந்து அழகுபொருந்திய காஞ்சீபுரியில் அரசுசெய்யப்பட்ட குற்றமில்லாதவில்லவனென யுத்தமுகத்தில்யாவரும் பயப்படும் படிவேலைவலதுகையிற்பிடித்த நானகுவகைச் சேனைகளையுடைய பல்லவமகாராஜன்பணிந்த பரமேஸ்வரவிண்ணகரமென்பதாம்.

(*)

இந்தக்கவியினால் வில்லவனென்கிறபடியால் அரசர்வம்சமென்று விளங்கும்படிச்சாமந்தரென்றும் படைத்திறள் பல்லவனென்றுஞ் சொன்னபடியால் அரசருக்குரியபேராகிய படையாட்சியென்றும் பல்லவர்கோனென்றுஞ் சொன்னபடியால் மற்றவரசருக்கு மேற்பட்டமகாராஜனென்று தோன்றும்படியாகவுங்குறிப் பிதார் பரமேஸ்வரவிண்ணகரமாகிய பத்துபாசுரத்தினமுடிவினும் சோழனாகிய பல்லவமகாராஜனைச் சிறப்பித்துச்சொன்னார் பரமேஸ்வரவிண்ணகரமென்பதுந்திருமல்லியென்பதுங் காஞ்சீபுரத்தைச்சேர்ந்ததேதவிர வேறல்ல - மேற்படிசோழனும் காஞ்சீபுரத்தையாண்டவனேயாகும்.

இதுவும்-ஷெ திருமங்கையாழ்வார்-திருச்சித்திரகூடம் கோவிந்தராஜன்விஷயமாய்ச்சொன்ன-பத்து-௩-வது கவி.

வெம்புசினத்துப்புனற்கேழலொன்றாய் ... ...*
விரிநீர்முதுவெள்ளமுள்புக்கழுந்த ... ...*
வம்புண்பொழில்சூழுலகன்றெடுத்தா ... *
னடிப்போதனைவான்விருப்போடியப்பிர் ... *
பைம்பொன்னுமுத்துமணியுங்கொணர்ந்து... ... *
படைமன்னவன் பல்லவர்கோன்பணிந்த ... *

செம்பொன்மணிமாடங்கள்சூழ்ந்ததில்லைச் ... .. *
திருச்சித்திரகூடஞ்சென்றுசேர்மின்களே ... *

இதின்தாத்பரியம்.

பிரளயகாலத்திற் பல்லிருபமாக இந்தப்பூமியையெடுத்தகடவுளினது தாமரைப்போன்றபாதத்தை ஆசையுடன்றுதிக்கப்பட்டவர்களேபசியபொன்னும்-முத்தும்-இரத்தினங்களையுங் கொண்டுவந்துபடைகளுக்குடைய வரசனாகிய பல்லவமகாராஜன் பணிந்ததிருச்சித்திரகூடஞ்சென்றுசேவியுங்கோளெனபதாம்.

இந்தக்கவியிற் சிதம்பரத்தையாளப்பட்ட சோழனைக்குறித்துப்படைமன்னவன் பல்லவன் பணிந்ததென்றுசொன்னார்.

இதுவுமல்லாமல்-சுந்தரமூர்த்திநாயனார் செய்த-தேவாரப்பதிகம்
திருவேகம்பம்-திருமேற்றளி-௰வது தேவாரம்.

பாரார்பல்லவனூர்மதிட்காஞ்சிமாநகர்வாய்ச் ... ...*
சீரார்பூறலிற்றிருமேற்றளிச்சிவனை ... ...*
யாரானடியானடித்தொண்டனாரூரன்சொன்ன ...*
சீரார்பாடவல்லார்சிவலோகஞ்சேர்வாரே ... *

இதின்தாத்பரியம்.

பல்லவமகாராஜனாராகிய காஞ்சியாநகரத்திலிருந்தபரமசிவன்பேரிற் சுந்தரமூர்த்திநாயனார்சொன்ன இந்தப்பத்துப்பதிகத்தையும் பாடவல்லவர்கள் சிவலோகஞ்சேர்வாரென்பதாம்-

இந்தக்கவியினால் சுந்தரமூர்த்திநாயனார் காஞ்சீபுரம்வந்துபதிகம்பாடினகாலத்தில் அரசுசெய்தசோழனைக்குறித்துச் சொல்லாரென்றுகாண்க,

---

இதுவும்-ஷை-தேவாரப்பதிகம்-கோயிற்பத்து-ச-வது-கவி,
சிதம்பரத்திலருளிச்செய்தது,

கருமையாற்றருமனார்தமர்நம்மைக் ... *
கட்டியகட்டறுப்பிப்பானை ... ... *

பருமையாந்தன்னுலகத்தருவானை ... *
மண்ணுலகங்காவல்பூண்ட ... *
வரிமையாற்பல்லவர்க்குத்திறைகொடா *
மன்னவரைமறுக்கஞ்செய்யும் ... *
பெருமையாற்புலியூர்ச்சிற்றம்பலத்தெம் ... *
பெருமானைப்பெற்றுமன்றே ... ...*

இதின்தாத்பரியம்.

எமனுடையகாலாரர்களாற்கட்டப்பட்டகயிற்றையறுத்து அரிதாகியதன்னுவர்க்கலோகத்தைத்தரப்பட்டவனும்-இந்தப்பூலோகவரசுக்குரியவனானபல்லவமகாராசனுக்குத்திறைகொடாதமற்றவரசரைத்துன்பஞ்செய்யப்பட்டவனுமானபெருமையையுடைய புலியூர்-அல்லதுசிதம்பரத்தில்வாசம்பண்ணப்பட்டகடவுளைப்போற்றுவோமென்பதாம். .

இந்தக்கவியினுற் சிதம்பரம்-அல்லது - பித்தர்புரமாளப்பட்ட சோழனுக்குக்கோயிற்புராணத்திற் பரமசிவனானவர் சோழன்சந்ததியாருக்கு என்னகுற்றஞ்செய்தபோதிலும் பொறுத்து உன்சத்துருக்களைநாசஞ்செய்து இரட்சிக்கிறேனென்றுசொல்லியிருக்கிறபடியால் அதுதோன்றும்படிப்பல்லவருக்குத்திறைகொடாமன்னவரைமறுக்கஞ்செய்யுமென்றுசொன்னார்,

பரமசிவமானவர் அதியிரணியவர்மச்சோழனுக்கு இந்தப்பிரகாரம் அனுக்கிரகஞ்செய்ததாலாவது-அதிகாரத்தில் இரண்டாவது பிரிவிற்கண்டுகொள்க,

இதுவுமல்லாமல்-காஞ்சிபுரம்-ஏகாம்பரநாதர் -தெய்விகவுலா

சுக-வது-கலிவெண்பா

சம்புகுலத்தொருவன் சாத்துகைக்காமென்றளித்த ... *
செம்பொன்மணிமகுடஞ்சேர்வித்துத்-தம்போ ... ...*

இதின்தாத்பரியம்.

சம்புகுலமென்னப்பட்டசோழகுலத்தில் ஒருவனாகிய ஏகாம்பரசம்புபல்லவமகாராசன் கடவுளுக்குச்சாற்றும்படியாகக்கொடு

தனிவந்தபொன்னிரத்தினங்களினாலே செய்த கிரீடத்தைத்தரித்தா னென்பதாம்.

இதுவும்-ஷி-உலா ௩ -வது-கலிவெண்பா

வடித்தசுடர்வேற்சம்பன்வாழ்மல்லிநாதன் ....*
கொடித்ததிருத்தேர்மேற்கொண்டு - முடித்ததநி ....*

இதின்தாத்பரியம்,

கூர்மையாகவடிக்கப்பட்ட பிரகாசம்பொருந்திய வேலைக்கையி லேந்திய சம்புகுலத்துதித்த திருமல்லிநாதனாகிய அரசன்கொடுக்கப்பட்டதேரின்பேரிலஏகாம்பரநாதர் மேற்கொண்டாரென்பதாம்.

—(*)—

இதுவும்மேற்படி-உலா-௩௪௬- வது - கலிவெண்பா,

செம்பதுமைகேள்வன்திருமல்லிநாதனுயர் ... *
சம்புபதிநல்குத்தடத்தேர்போல்-கம்பரே .....*

இதின்தாத்பரியம்,

சிவந்தபதுமைபோன்றவளுக்குநாயகனாகவும், திருமல்லியென்றுசொல்லப்பட்ட காஞ்சீபுரிக்கு நாயகனுமாகிய சம்புகுலத்தானென்றுசொல்லப்பட்ட (ஏகாம்பரபல்லவச்சோழன்) கொடுத்தவிசாலம்பொருந்தியதேர்போலென்பதாம்

இதுவும்மேற்படி-உலா ௩௫ வது - கலிவெண்பா.

வெஞ்சமரில்-தத்துபரிபல்லவன் சம்புகுலப்பெருமான்
வைத்ததுலாபாரமண்டபத்துஞ்... ...*

இதின்தாத்பரியம்

வெவ்விதானயுத்தத்தில்தத்தித்தாவா நின்றகுதிரையைநடத்தியவரசனென்றுசொல்லப்பட்ட பல்லவனானசம்புகுலப்பெருமானானவன் தானம்பண்ணப்பட்ட துலாபாரமண்டபத்திலு மேறினானென்பதாம்

இந்தக்கவியினுற் சோழவம்சமாகிய சம்புகுலமும்பல்லவனென்பதும் அரசனென்றுதோற்றும்படிக்கூறினார் சிலர்பல்லவனென்கிறபேர் அரசன்பேரே யொழிய ஏகாம்பரப்பல்லவனென்று சொல்லுவார்கள் ஆனால்-இரட்டையர் அரங்கேற்றிய காலத்தில்மேற்படி யுலாவிற்சொல்லப்பட்டபல்லவராஜன்கிறப்புப்பேர்வகாம்பரஜம்புபல்லவனேதவிரவேறல்ல இதற்குஸ்திருஷ்டாந்தம்,

---

தொண்டமண்டலசதகம்-அஃ-வது-கவி.

மேதைப்புலவரெண்ணேகாம்பரசம்புமெச்சநெடுங் *
காதைப்புலவரிரட்டையர்பாடுங் கலம்பகமும் . .....*
மோதற்கரியநல்லேகம்பவாணருலாவுமந்த..... *
மாதைப்பதுவலும் பாராட்டிடுந்தொண்டமண்டலமே

இதின்தாத்பரியம்,

அறிவையுடையவித்துவான்களால் மதிக்கப்பட்ட ஏகாம்பரஜம்புவென்னும் (சோழனானவன்)மெச்சும்படியாகஇரட்டைப்புலவர்கள் பாடப்பட்டகலம்பகமும், சொல்லுதற்கரிதானஏகாம்பரநாதரி வுலா-முதலான அனந்தநூல்களையும் பாராட்டப்பட்டதொண்டமண்டலமென்பதாம்,

---

இதுவும்ஷை-சோழனாகிய பல்லவராயன்-கோவை,

எறிக்கும்புகழ்க்கச்சி யேகாம்பரசம்பவெண்டிசையும்... .. *
பொறிக்கும்புலிக்கொடியான்புயம்வேட்டபின்பூவையந்நாள்
வெறிக்குங்குமக்கொங்கைமீதேவிழிசொரிவெள்ளந்துள்ளித் *
தெறிக்குந்திவலையழிக்குஞ் சிந்தூரத்திலதத்தையே .....*

இதின்தாற்பரியம்,

எட்டித்திசையுந் தனக்கெல்லைக்கல்லாகத்தன்புலிகொடியையெழுதிப் பிரகாசிக்காநின்றபுகழையுடையகச்சிக்தரசனாகிய ஏகாம்பரசெம்பியனென்னும்சோழனுடையபுயத்தை வீரலட்சுமியானவள் இச்சித்த சந்தோஷித்தால்பொழியப்பட்ட ஆனந்தக் கண்ணீ

ரானது மிருகமதங்களை யணியப்பட்ட கொங்கையின்மீதுவிழ அதுவெதிர்த்துத் தெறிக்கப்பட்டதூளியானது நெற்றியி லிராதிக்கசிந்தூரத்திலத்தையழிக்குமென்பதாம்

இதிற்சொன்னபிரகாரம்அரசன்பேர் ஏகாம்பிரசெம்பியனே தவிரவேறு லஆதலாற்பலநூல்களில்பல்லவனென்றுவருமிடந்தோறும் வெவ்வெறுபேரிருக்கின்றது இதுபோலனந்தநூலிலும் அரசனுக்குரியபேர்பல்லவனென்றே சொல்லியிருக்கின்றது வேண்டியவர்கள் அதுவருமிடந்தோறுங்கண்டுகொள்ளலாம்,

மூன்றாவததிகாரம்-முற்றிற்று.

ச-வது-அதிகாரம்

இந்த அதிகாரத்தில் சேர-சோழ பாண்டியர் சந்ததிகளே முன்னதுகாரத்திற் சொல்லப்பட்ட வன்னியர்முதலான பிரதான ஐந்துபேலாயுடையவர்களென்ற திருஷ்டாந்தமும்-வைசியர் தத்காலத்திலுண்டென்கிற திருஷ்டாந்தமுங் குடிமதிப்புச் சபையாரின் வஞ்சகமானியயோசனைவிபரமும்சொல்லப்பட்டிருக்கின்றது.

ச-வது-அதிகாரம்-முதற்பிரிவு

இந்தப்பிரிவில்சேரன்சந்ததியைக்குறித்துவருமாறு.

முன்-கூ-வது- அதிகாரத்தில் ஐந்தாவதுபிரிவிற்குறிப் பித்த வன்னியர்-பள்ளிகள்- சாமந்தர்-படையாட்சிகள்-பல்லவர் - என்று சொல்லப்பட்ட ஐந்து காரணப்பேரைத் தங்களுக்குரியதென்று ஆதியரசசந்ததியார் நாளதுவரையில் வழங்கிவருகிற படியாலும் அவர்களே யாதிகாலந்கொட்டரசாண்ட க்ஷத்திரியர்சந்ததியாரென்று அனுபவதிருஷ்டாந்தங்கள்வருமாறு,

முதலாவது, மலைநாடென்றுசொல்லப்பட்ட மேல்நாட்டரசனை சேரராஜன் சந்ததியார்-மலையாளம்-அல்லது கள்ளிக்கோட்

டை-திருவாங்கூர் திருவனந்தபுரமென்று பலபேராய்ச் சொல்லப் பட்டதைச்சேர்ந்தமேதசங்களில் நாளதுவரையிலரசராயிருந்துவரு கிறார்கள் இதிற்பேரரசராயிருக்கிறமலையாளத்துமகாராஜாவும் அந்தச் [illegible] யாம்தவிரமேறல்ல, எப்படியென்றாலவர்வம்சமும் சாமந்த [illegible] வருகிறபடியாம் தாம்ரு [illegible] அதிகாரத்தில் ஐந் [illegible] - சேரமர்பேர் வில்லவனென் [illegible] சாமந்தனென்றுவழங்கிவருகிறார்கள் - இ [illegible] - [illegible] சாமந்தனென்றுவழங்கிவருகிறார்கள் [illegible] அதிகாரம், தாலாதுபுரியில்மூன்றுகுலமு மொலமறலமுனிசாமந்தமேல் பேதமில்லாமற் சூரியகுலமென் றும், வல்லிடைக்கோ [illegible], சொல்லியும் வழங்கிவருகிறார்கள். ஆனால் மூன்றுசாலைப்பட்டபேர் ஐந்து பள்ளியம் கிறபேரை அந்தச்சா ந்தியாரென்றும் [illegible] சாமந்தனுமேறப்பட்ட மருடவாந்தரிமாந்திரம் வழங்கிவருகிறதுமல்லாமல் மேற்படிம லையாளத்தைச்சார்ந்த மேற்படிசேரன்சந்தியாராகிய இருபத்து தாலுகிறரசரிருக்கிறார்கள் - அவர்கள்ரும்பள்ளிமாரென்கிற பேரை வழங்கிவருகிறார்கள் - இப்படி [illegible] வர்த்தனரா யிருக்கப்பட்ட வரசரும் பள்ளியென்கிறபேரைவகித்திருக்கிறார் - அதெப்படியெ ன்றால் - அரசன்கையாளப்பட்டசீவமும் அரசன்போகுவருந்தை யுங்குறிக்கும் அரசூழியக்காரர்களும் மற்றவர்களும் அரசனுடைய பட்டத்துயானையைப்பள்ளியினுடைய யானையென்றும், அரசனது பட்டத்துக்குதிரையைப் பள்ளியினுடைய குதிரையென்றும், அர சனேறும் பல்லக்கைப் பள்ளியினுடைய பல்லக்கென்றும், அ ரசன்கையாளப்பட்டபெட்டியைப் பள்ளியினுடையபெட்டியெ ன்றும், அரசன்படுக்கும்வீட்டைப்பள்ளியினுடையஅரையென்றும், அரசன்வருவதைக்குறித்துப் பள்ளிவருகிறானென்றும், அரசன்போ வதைக்குறித்துப் பள்ளிபோகிறானென்றும், இன்னும் அரசனைக்குறி த்துப்பேசும்போதெல்லாம் நாளதுவரையில்பள்ளியென்றேசொல்

லுகிறார்கள்- இந்தப்பள்ளியென்பது முன் - ௩ - வது- அதிகாரம்- ௪-வது- பிரிவில் அரசன்விஷ்ணுஅம்சமென்றும், ஆதலால்விஷ்ணு விஷ்ணுடையபோராகியபள்ளியென்பதுஅரசருக்கேவுரியதென்றுசொன்னதுபோல் மேற்படிசோதேசத்தில் அரசவம்சத்தில் சிம்மாசனமேறி யரசாளப்பட்ட அரசனுக்குமாத்திரம் அந்தப்பேரானவைத்துவழங்கிவருகிறார்கள்- ஆனால்சோழநாட்டில் அரசெல்லாம்சோழராஜன்சந்ததியார் அரசுக்குரியவர்தவிர மற்றகாலத்தும் மற்றானஞ் செய்யப்பட்ட இங்கிலீஷ்காரர்களில் ஒருசாளுகிறவர்களுக்கு மாத்திரம் துரைகளென்று வழங்கவேண்டி யவழக்கமிருக்க [illegible] செய்யப்பட்ட அவர்சந்ததியார் முழுமையாகவும் [illegible] த்தாரிற்சிலர் அவர்களைச்சேர்ந்த அவர்களைப்போலானபரங்கிகளார்களும் துரைகளென்று வழங்கவருகிற வழக்கமிருக்கிறபடியால் [illegible] தொழிலைச் செய்பவரும் சொந்தமான [illegible] மற்ற அர்தவர்சத்தாரு முமையும் மேற்படி [illegible] பேரைத்தங்களுக்குரியதென்று வழங்கிவருகிறபடியால் [illegible] ட்டில் அந்தப்பேரில் பெருமையும் - [illegible] கின்றது- அதைப்பற்றிப் பறச்சாதியார் பொருமையாகிறதாற் [illegible] தேபோலென்னுகிறதுபோல் மேற்படி யந்தராஜசந்ததியாரனிற் சிலநூறுனவிவேகிகள்கூட அந்தப்பேரிழிவென்று நினைத்து மறைக்கவெத்தனப்படுகிறதாகவுந் தெரியவருகின்றது,

அதைப்பற்றி நான்விவரித்தெழுதினால் அது பெரிதாகமுடியும் - அதுநிற்க இப்போதுகுறிப்பித்துப்பேசிய மலையாளத்தரசனுக்குச்சாமந்தனென்கிறகாரணப்பேரும் வன்னியனென்கிறகாரணப்பேரும் - பள்ளியென்கிற சிறப்புப்பேராகிய பட்டப்பேரும்- நாளதுவரையிலவருக்கும் அவர்வம்சத்தாருக்குமுரியதென்றுவிசாரித்தாலியாவருக்கு நன்றாய்த்தெரியவரலாம் - இதுவுமல்லாமலவருக்குரிய பட்டப்பேரின்விபரம்- ஸ்ரீபத்மநாபதாச வஞ்சிபாலவர்ம்ம-குலசேகர-கிரீடபதிவன்னியசுத்தான்-மஹாராஜராஜேராமராஜாபாதர்ஷிங்-சிய்யஜங்கல்மஹாராஜா--வென்கிற இந்தப்பேர் பூர்விகமாய்வழங்கிவந்திருக்கசென்னப்பட்டணம் இராஜதானியில்ஷை யரசன்சரித்திரத்தில்அவர்பேரை யெழுதியிருக்கின்றது -அதில்கிரீட

பதி வன்னியசுலுத்தானென்று] சொல்லவேண்டியதை மன்னியசு லுத்தானென்று யெழுதியிருக்கின்றது-இதைக்குறித்தாலோசித்தால் சிலர் நூற்களில் ஒருவழியாய்ச்சொல்லியிருக்க-அதை வேறொருவழியாகத் திருத்தி அச்சிடுகிறவழக்க மொன்றிருக்கின்றது.

அதுயெவ்விதமென்றால் - இராமாயணம் - உத்தரகாண்டத்தை யசுவமேதப்பிரபுலிங்கையையழித்த படலத்தில்-யுகவது - கவியில (படிமன்னிவாழும் பலவன்னியரொன்று) அனந்தயேட்பிரதிகளிலிருக்க அதையிவர் படிமன்னிவாழும் பலமன்னியரொன்று அச்சிட்டிருக்கின்றது இதுபோலனந்த நூற்களிலேயும் ஏதோகெட்டமனதைக்கொண்டு திருத்தி அச்சிட்டிருக்கிறார்கள், அதைப்பேலவ்வன்னியசுல்த்தானென்பதை - மன்னியசுல்த்தானென்று திருத்தியிருக்கலென்பதற்குச்சந்தேகமில்லை - ஆனால்நந்தத்தப்பு சொரூபங்கத்தரி மனமறிந்து செய்யார்கள்- அவர்களிழியர்களிப்படிச்செய்திருக்கலாமென்பர், இப்படிச்செய்ததை முன்குறித்த மஹாஸ்ரீ கனகசபாபிள்ளையவர்கள் அறிந்திருப்பதும் அறியாதிருப்பதுந் தெரியவில்லை- ஆனால்சாசனறிந்திருந்தபோதிலும் [illegible] அவர்கள்குறித்துத் தொந்தரவையெடுத்துக் கொள்ளமாட்டாமலிருக்கலாமென்றது- எப்படியென்றால்- வருஷிரவருஷிம் மலையாள [illegible] புத்தகத்துவக்ஷத்திரிய வருப்பட [illegible] - அதிகாரியர்-சாமந்தர் - அம்பலவாசிகள் [illegible] வக்ஷத்திரியர்களும் [illegible] - என்ற-வருஷித்திற்செய்தகுடிமதிப்புப்பட்டயமுமிராமனவருப்பும் சூத்திரவருப்புமென்றேழுதியிருக்கிறது- அதைமேலாசிரியர்கள் [illegible] வக்ஷத்திரியர்களும் வைசியர்களும் - பூமியிலில்லையென்கிற கருத்தைக்கொண்டெழுதினவராகத்தெரியவருகின்றது- அதைக்குறித்து அப்படிச்செய்தவர்களை யேனென்றுகேட்காமலும் கவனிக்காமலுமிருப்பதே திருஷ்டாந்தமாக விருக்கின்றது - ஆனால் முன்குறித்தபேரில் அனந்தபதிமநாபகவாமிக்குத் தாசனென்றும், வஞ்சிநாடாகிய சேரநாட்டைப் பரிபாலனஞ்செய்யும் குலசேகரவர்ம்ம கிரீடாதிபதியென்று சொன்னதினாலேயே 'இவர் சேரன்சந்ததியென்றும், வன்னியரென்று

சொன்னதே அக்கிலிகுலத்தாரென்றும், சுத்தாரனென்று சொன்னதே அக்காலத்திலிருந்த அரசரியாவருக்கும் மேலானசக்கிரவர்த்தியென்றும் யாவருக்குமெளிதல் விளங்கலாம்,

ஈதல்லாமல் தத்காலத்திலிராதின்ற இருபத்துநான்குதீர்த்தங்கரர்களும்-ஆதிசேரன் சந்ததியாரென்றும் இந்தக்காரணப்பேர்- சிறப்புப்பேர் அவர்களும்வழங்கிவருகிறார்களென்றும், அவர்கள்பூர்வீக சரித்திரபுத்தகங்களையு மனழப்பித்துப்பார்த்துத் தெரிந்துக்கொள்ளலாம் - இந்தச்சேரன் சந்ததியாருக்குச் சாம்ராஜ்யமென்றும், க்ஷத்திரியரென்றும், வம்சியரென்றும், சூரியகுலத்தாரென்றும், பேதமில்லாமல் வழங்கிவருவதுபோல் ஆதியிலிந்தச்சந்ததியிலொருவராகிய குலசேகரவர்மப்பெருமாள்சொன்ன

திராவிடவேதமாகிய பெரியதிருமொழி முதலாயிரத்தில் அழகியமணவாளர் விஷயம்-ஒகவது கவி,

திடர்விளங்குசரைப்பொலிநறுவுட்பாட்டுத் ... ... *
திருவரங்கத்தரவணையிற்பள்ளிகொள்ளும் ... *
கடல்விளங்கு நிறருமேனியம்மான்றன்னைக் ... ... *
கண்ணாரக்கண்டுகக்குங்காதலுள்ளே ... ... *
கொடைவிளங்குவிறற்றுணைமொழிமங்கையாள் .. *
கூடலரிகோன்குடைக்குலசேகரன்சொறசெய்த . *
நடைவிளங்குதமிழ்மாலைபத்துமவல்லார் .. .. *
நலந்திகழ்தாரணனடிக்கீழ்நண்ணுவாரே... ... *

இதின்தாத்பரியம்,

காவேரியாற்றின் மத்தியிற்றிருவரங்கமென்னுந் தலத்தில்-சேஷசயனத்தின்பேரிற் பள்ளிகொள்ளும் கறுத்த மேனியையுடைய கடவுளைக் கண்டு சந்தோஷப்படுமாசையினாற் பிரகாசியாநின்ற குடையும்,பலம்பொருந்தியசேனையும், வெற்றியைத் தராநின்றவாளையுமுடைய மதுரைக்காசனனகொடுக்குந்தன்மையையுடைய குலசேக

ரப்பெருமானாற் சொல்லப்பட்ட தமிழ்மாலைபத்தும்- வல்லவர்தா
ரணனடியைப்பொருந்துவாரென்பதாம்,

திருவுடைமைக் குலசேகரப்பெருமான்சொன்ன
மணவாளதாசர்விஷயம் ௯வது கவி,

அரங்கநாதனடியுண்மையானவடியார்களுடைய அடிமைத்
தொழிற்செய்யுங்காலமாயில்எக்காலத்திலுந்தாவாதிற்றமனதையு
டையவனாகிய கொல்லிமலைக்குநாயகனான சேரனாயும் - மதுரைக்கு
நாயகனாகிய பாண்டியனும் உறையூருக்குநாயகனாகிய சோழனு
மாகிய குலசேகரப்பெருமான் சொல்லாநின்ற தமிழ்மாலையைத்து
திக்கவல்லவர்கள் அடியார்க்குமடியவராவாரென்பதாம்,

திருவுங் குலசேகராழ்வார்சொன்ன
தில்லைநகர்த்திருச்சித்திரகூடமால் தொல்லிராமனாய்த்
தோன்றியகதைநூறை ௧வது கவி.

தில்லைநகர்த்திருச்சித்திரகூடத்தன்னுட் ... ... *
டிறலவிளங்குமாருதியோடமர்ந்தான்றன்னை ... *
எலியிசிர்க்கடாதமறன்மகனாய்த்தோன்றித்... *
தருமுலகாத்தன்னுலகம்புகத்தீராக் ... *
செலவிபலு படைத்தானைக்கொற்றவொள்வாட் ... *
டிகழியரிசோர்கொடைக்குலசேகரன்சொற்செய்த*
நலவிபலிறமிழ்மாலைபத்தும்வல்லார் ... ... *
நலந்திகழ்நாரணனடிக்கீழ்நண்ணுவாரோ ... ...*

இதன்தாத்பரியம்.

சிதம்பரத்தில் அனுமனுடனமர்ந்தகடவுளுமாய்த் தசரதச்சக்கிரவர்த்தி பிள்ளையாகப்பிறந்தது முதல்தன்னுலகம்போகத்திராதகடவுளாகிய ராமன்பேரிற் கொல்லுஞ் செய்கையுடைய படைகளையும், வெற்றியைத்தராதிருக்கிற வெளிபொருந்திய வாளையுமுடைய உலாபுருக்குராயகவுன கோபிக்குந்தன்மையுடைய குலசேகரப்பெருமானாற் சொல்லப்பட்ட தமிழ்மாலைபத்தும் வல்லவர்-நாரணர் பாதகாமலையில்சேர்வாரென்பதாம்,

இந்திரவம்சிகுலசேரவம்சத்தானுகிய குலசேகரப்பெருமானானவர் ஒருவிடத்திற்றன்னை யக்கினிகுலச்சேரனென்றுதோன்றும் படிக்கொண்டிருக்கலாமென்றும், அவரே சூர்யகுலமென்று தோன்றும் படிக்கேளுமி சேரனென்றும், அவரே சந்திரகுலபாண்டியனென்று தோன்றும்படிக்கூடமற்றுயகனென்றும், அவரந்தச்சொல்லப்பட்ட [illegible] கொள்ளலாம்-கொல்லியென்பது- சேரநாடுமுழுவதுமாகிய மலைநாடு, அல்லது-சோலைப்பதியாகிய [illegible] தலைநகரமாகிய உறையூர்-கூடலென்பது பாண்டியநாட்டுத் தலைநகரமாகிய மதுரை-இவர்பாடல்களிலிருந்து [illegible] குலமும் ஒரு குலமென்றே குறிப்பிடுகிறதேயன்றி வேறல்ல.

ஆனால் குலசேகரப்பெருமானுஞ்சைவசமயத்திலடியாராகிய சேரமான்பெருமானுமிவர்களிரண்டுபேரும் வைஷ்ணவசைவர்களிற் றொண்டர்களாயிருந்தும், இவர்கள் சுவத்துரியர்களில் பெரியவர்களானபடியால் மற்றவர்களை ஆழ்வார்கள்-தாசர்கள்-அடியார்களென்று வழங்குவதுபோல் வழங்காமலும், இவர்கள் பெருமைக்குக் குறைவுவராமலும், குலசேகரப்பெருமானென்றும், சேரமான் பெருமானென்றும், நூற்களிலுலேயும் வழக்கத்திலுலேயுஞ்சொல்லியும் வழங்கிவருகிறார்கள்.

(*)

இதுவல்லாமல் இந்தகுலசேகரப்பெருமாள் சொன்ன

நாலாயிரப்பிரபந்தத்தில்

செய்வளர்காட்சியின்சீர்ஆயசோதைபோல் தாய்தேவகிபெறுத் தாழ்வெணிப்புலம்பல் கூவதுகவி.

மூத்தைதன்முறையன்புடைமகளிர் ... ... *
முறைமுறைதந்தங்குறங்கிடையிருத்தி ... *
எந்தையேயெந்தன்குலப்பெருஞ்சுடரே ... ... *
யெழுமுகிற்கணத்தொழிலிலவரோடே ... ... *
உந்தையாவனெனக்குரைப்பதிர்செங்கேழ் ... *
விரலினுக்கடக்கண்லுங்காட்ட ... ... *
நந்தன்பெற்றனனல்லனையில்லா ... ... *
நங்கள்கோன்வசுதேவன்பெற்றனனே ... ... *

இரண்டாந்தாலாட்டியம்.

தூசையுடையமகளிர் வரிசைக்கிரமமாகத் தன்தொடையிலே கிடத்தி என்கடவுளே - என் தந்தையே சோதிமயமாகிய தீபமே பெரியசுடரே மாதிரின் பெரிய கூட்டமாகிய ஆனாயமே சிவந்தமேகவானியை வெயிலுங் கலைக்கல்லுங் கலைக்கண்ணாடி வினைகளாடாறின்ற வினையாட்டைக்கண்டு [illegible] நப்பனுயிராதிற்ற நந்தகோபாலனுவன் பெற்ற நலவிளையை எங்களரசனுன வசுதேவன் பெறவில்லையாயபடி.

இந்தக்கவியில் ஆக்கினிகுலக்குலசேகரப்பெருமாளானவர் சூரியகுலமென்றுசொல்லப்பட்ட சந்திரகுலமிருஷ்ணனைக் குழந்தைப்பருவத்தில் தாதிகள்சொல்வதுபோல எந்தன் குலப்பெருஞ்சுடரேயென்றதுமல்லாமல் நங்கள்கோன் வசுதேவன் பெற்றிலனென்றார்-இதினுற்சந்திரகுலமும் அக்கினிகுலமும் பேதமில்லாமற்றோன்றும்படிச்சொன்னார்.

இந்தக்கிருஷ்ணனைச் சிலர் பொதுவராகிய இடையர்குலமென்றும், சிலர் இடையருக்கே சந்திரகுலமாகிய வெதுகுலமென்றுஞ் சொல்லிக்கொள்ளுகிறார்கள்-ஆனாலப்படிச்சொல்கிறவர்கள் விவேகமில்லாதவர்களேதவிர விவேகிகள்சொல்லமாட்டார்கள்- இப்போதுசொன்ன இந்தக்கவியினால் நந்தனுகியவிடையன் வளர்க்கும்படி

ச்செய்ததவம் இவனாப்பெற்றவரசனாகிய வசுதேவன் பெறவில்லை யென்றுசொல்லுதலினாலேயே இடையர்குலம்வேறென்றும் கிருஷ்ணன்பிறந்தவசுதேவகுலம்வேறென்றும்விளங்குகின்றதல்லவா.

இதுவுமல்லாமல்-பாரதம்-ஆதிபர்வம்.

மாலையிடுசருக்கம்-கக வ௨ கவி

இந்தக்குரிசில்யதுகுலத்துக்கெல்லாந்தலை [illegible]

வந்துற்பவித்துப்பொதுவருடன்வளருங் [illegible]

முந்தக்கஞ்சமாமனுயிர்முடிக்கானிலத்து [illegible] ... *

யந்தப்புரத்திலாராமமந்தப்புரத்துக்காராமம் ... ... *

இதில் தாத்பரியம்.

இந்தவரசனானவனி யதுகுலமென்றுசொல்லப்பட [illegible] குலத்துக்கெல்லாந்தலைவனென்றுசொல்லும் [illegible] பொதுவென்றுசொல்லப்பட்ட விடையர்பேடியுடன் [illegible] மாயமென்றுசொல்லப்பட்டகிருஷ்ணன்முற்காலங்களில் [illegible] ராமனாகிய கஞ்சனைக்கொன்றவன் - இதுவுமல்லாமற்மேலவர்களாகிய அந்தப்புரத்துத் தோட்டத்திலிராதிநின்ற [illegible] ன்றோட்டத்திற்கொண்டுவந்து வைத்தவனாகிய [illegible] தொழில [illegible] ரோபதைக்குச்கொடுத்தானென்பதாம்.

இந்தக்கவியினால் யதுகுலம் வேறேயும், பொதுவென்றுசொல்லப்பட்ட விடையர்குலம்வேறேயும் பிரிவுபடச்சொன்னதுபோலின்னுமனந்தநூலிலுள் சொல்லியிருக்கின்றது - அதுகருமிடந்தோறுங்கவனித்தாற்கண்டுகொள்ளலாம்.

இதுவும்மேற்படிகுலசேகரப்பெருமாள்சொல்லப்பட்ட

கண்ணபுரத்தொளிர்-காகுத்தன்றாலாட்டு ௩-வது-கவி

கொங்குமலிகருங்குழலாள்-கோசலைதன்குலமதலாய் *

தங்குபெரும்புகழ்ச்சனகன் திருமருகாதசாதி.....*

கங்கையினுந்திர்த்தமலி கணபுரத்தெங்கருமணியே... *
எங்கள்குலத்தின்னமுதே யிராகவனேதாலேலோ ... *

இதின்தாத்பரியம்.

கௌசலையின்குலமகனே, ஜனகராஜனுடையமருமகனே, தசரதச்சக்கிரவர்த்தியின் புத்திரனே, கங்கைகதிகமான தீர்த்தங்கள் தெருங்கிய கண்ணபுரத்திலிராதின்ற நீலரத்தினமே, எங்கள்குலத்திலவந்த இனிப்பாகிய தேவாமிருதமே, இராகவனே தாலேலோவென்பதாம்.

இந்தக்கவியினாற் சூரியகுலத்திலவந்தராகவனையக்கினிகுலமென்றுசொல்லப்பட்ட குலசேகரப்பெருமாளாலவர் சூரிய அக்கினிகுலமொன்றானபடியால் எங்கள்குலத்தின்னமுதேயென்றார்.

இதுவுமல்லாமல்-மகாபாரதம்- பாயிரம்-௯௬வதுகவி.

எந்தமிவனிசைபரப்பிவருநாளில்யாமுரைத்தவிந்தநாட்டிற் [ன்றி
கொங்கர்குலவரபதியாட்கொண்டானெனவொருவண்மைக்குரிசிறோ
வெங்கலியின்மூழ்காமற் கருநடப்பேர்வெள்ளத்துவிழாமலுன்கஞ்
சங்கமெனமுச்சங்கத்தண்டமிழ்நூல்கலங்காமற்றலைகண்டானே *

இதின்தாத்பரியம்.

எந்தத்தேசங்களிலும் மேற்படிவில்லிபுத்தூராழ்வார் கீர்த்தியானது பரவவருநாளில் நான்முன் சொல்லப்பட்ட நாட்டிற் சேரகுலத்தில் வந்தாட்கொண்டானென்னும்பேரையுடைய வளப்பம்பொருந்திய ஓராசன்றோன்றித்தன்றேசத்துச்சனங்களைத் தரித்திரமுதலான துன்பத்தில் மூழ்காமலரசுசெய்து முன்னிருந்த மூன்றுசங்கத்தோடு நான்காஞ்சங்கமென்று யாவருஞ்சொல்லும்படியாய்த் தமிழானதுசிதைந்துபோகாமற் சங்கத்தைவிர்த்திசெய்துதானதின்முடிவைக்கண்டானென்பதாம்.

இதுவும்மேற்படி-௨௭-வதுகவி.

மற்றவுன்பபுவியாளும்வளவனுக்குமுடிகவித்துவழுதித்தெவ்வைவச்
செற்றவனுக்கவனியெல்லாஞ்செங்கோன்மைநிலையிட்டுச்செல்வமெ

ல்லாங், கற்றவருக்கிருகையுடைக்கற்பகம்போலினிதளித்துக் கமல மாதுங், சொற்றவையுமனங்களிப்பத்தன்னுமேருவினுங் கோட்டி னானே, *... ... ... *

இதின்தாத்பரியம்.

முன்சொல்லப்பட்டசேரனுனவன் இந்தப்பூமியையாளும்வள வனுகியசோழனுக்குக்கிரீடந்தரித்துப்பாண்டியனுகிபசத்துருவைக் கொன்று அந்தப்பூமிமுழுமையு மேற்படிச்சோழனுடைய செங் கோலைநிலைநிறுத்தி மேற்படி பாண்டியனுடைய அயில்வரியமெல் லாந்தேர்ந்தவித்வான்களுக்கு இரண்டுகையையுடைய கற்பகர்போ ற்கொடுத்து இலட்சுமியுந்துற்கையுஞ் சந்தோஷப்படும்படிச் செ யத்தைப்பெற்றுத் தன்னுமத்தை மகாமேருபருவதத்திற் (றனக் குரியவெல்லைக்கல்லாக) வெழுதினனென்பதாம்.

இதுவும்மேற்படி-உ-வதுகவி,

தென்னுட்டில்வடநாட்டிற்குடநாட்டிற்குணநாட்டிற்றெவ்வரோடக் கன்னுட்டியமரிபொருதுகங்கைநீளுட்டுவித்துக்கண்டன்வேங்கை * யென்னுட்டுமெழுதியவன்றிருமரபோர் பெற்றபுகழ்யாவர்பெற்று * ரன்னுட்டுக்கொற்றமெல்லாமக்குரிசில்புகழொடவதரித்ததன்றே *

இதின்தாத்பரியம்,

தெற்கு-வடக்கு-கிழக்கு-மேற்கென்றுசொல்லப்பட்ட நான்கு திக்கிலிராதின்ற சத்துருக்கள்பயந்தோட-இறந்தவர்களுக்கு நாட்ட ப்பட்ட கல்லுகளை எங்கையுநாட்டப்படும்படி யுத்தஞ்செய்துகண் டனென்றுசொல்லப்பட்ட ஒருசோழனுடைய புலிக்கொடியைஎந் தநாட்டிலுமெழுதி யவன்வம்சத்தார்பெற்ற புகழைப்போல் யார் பெற்றார்கள்-அந்தநாட்டின் அரசியல்வலிமையெல்லா மந்த வரச ன்புகழோடுண்டாயிற்றென்பதாம்,

இந்தமூன்றுகவியினு லாட்கொண்டானென்னும் சேரனுனவ ன் தன்சத்துருவாகிய பாண்டியனைச்செயித்துக் கண்டனென்கிற சோழனுக்கு அந்தப்பாண்டிய னிராச்சியத்தை யொப்பித்தானெ

ன்று இந்தச்சோன்மரபாரோ சோழன்மரபாரென்று தோன்றும்படி யாய்ச் சோழனுடைய புலிக்கொடியை இந்தராச்சியமுழுமையும் நாட்டி மேற்படிச் சத்தியார் புகழ்பெற்றானென்று சொல்லியிருப்பதினாலேயே சோல்வம்சமும்சோழன்வம்சமும் ஒரேசாதியாரென்றெளிதிற் றெரிந்துக்கொள்ளலாம்.

இதுகள்போலின்னுமனந்தநூல்களிலும் மூன்றுகுல மொன்றென்றும், மூ ஃகுறித்தவரசருக்குரியபிரதானப்பேரைந்தும் அரசருக்கேயுரியதென்றுஞ் சொல்லியிருக்கின்றதுந்தவிர சேரனுக்குச்சிகாரபுத்திரனாய்ச் சோழன்புத்திரன்போனதாகவும், ஒருகாலத்திற்சோழனுக்குப்பாண்டியன் புத்திரன் சிகாரமாய்வந்ததாகவும் இதுபோலொருவருக்கொருவர் மாறிமாறிப் புத்திரர்களைச்சிகாரமாய்ப் பெற்று தங்களரசுநிலைநிறுத்தினானென்று சொல்லுஞ்சரித்திரத்தினாலேயேமூன்றும்வொன்றென்றறியலாம்.

முற்றிற்று.

ச-வது-அ .-வது-பிரிவு

முன்னிந்த அதிகாரத்தின் முதற்பிரிவில் சோன்சத்தியாரைக்குறித்து வந்த சிலதிருஷ்டாந்தம்போல் அரசருக்குரிய பிரதானப்பேரைந்தில சிலது சோழன்சத்தியாருக்குரியதென்று திருஷ்டாந்தம்வருமாறு,

அதாவது சோழன்பேர்பதினாறில் அவன்கோத்திரம்-அல்லது வம்மிசப்பேராகிய செம்பியனென்றொரு பேர்வந்திருக்கின்றதல்லவா அந்தப்பேரை இந்தத்தேசத்தில் வாசம்பண்ணப்பட்ட மேற்படிச்சோழன் சத்தியார் நாளதுவரையிலு மந்தச்சம்புகோத்திரமென்றேமுக்கியமாய் வழங்கிவருகிறார்கள் - ஆனாற் சோழன்பேர் செம்பியனென்றிருக்க அவன்சத்தியார்கள் சம்புவென்றெப்படி வழங்கிவரலாமென்று சிலர்சொல்லுவார்கள் - செம்பென்பது-சம்பென்றுவருவதும் சம்பென்பது செம்பென்று வருவது மியல்பு

சம்பெண்பது- செம்பியனென்றுவந்ததற்குக்காரணம்இலக்கணவிதி யாற்கண்டுகொள்ளலாம்-மூன் மூன்றுவதிகாரம்-ஒன்பதாவதுபிரி வில் - காஞ்சீபுரமாண்ட சோழபல்லவனைக்குறித்து இரண்டைப்பு லவர்கள்பாடினதை யெழுதியிருக்கிறேனல்லவா- அதில்மேற்படிச சோழனைச் சம்புகுலமென்று சொல்லியிருக்கின்றது - இந்த அ திகாரத்தில்- இந்தப்பிரிவில்- இதுன்பின்னாலினித் திருஷ்டாந்தமாகச் சொல்லப்போகிறசிதம்பரம்-கோயிற்புராணத்திற் றிருவிழாச்சருக் கம்- ௯௪-வது- கவியில் - சிதம்பரமாண்ட ஆதிசோழனைச்செம்பிய னென்றுஞ் சொல்லியிருக்கின்றதும் செம்பியனென்றிருப்பது சம் புவென்றாச்சுதோ- அல்லது-சம்புவென்றிருந்து செம்பியனென்று ச்சுதோ அதைப்புத்திமான்களாலோசித்தால் விபரந்தெரியும்,

ஆனால் காஞ்சீபுரமாண்ட சோழன் சந்ததியாருஞ்சி தம்பரமாண்ட சோழன் சந்ததியாரும் ஆதிதொட்டு தத்காலம்வ ரையிலும் பேதமில்லாச் சம்புவென்றும், செம்பியனென்றும், வ ழங்கிவருவதால் எப்படி யிருந்தபோதிலுஞ்சரிதான் - இதுதவிர காஞ்சீபுரத்தில் சோழபல்லவனுக்கு ஏற்பட்ட கோபுரத்துக்குமு ன்-மூன்றுவதிகாரத்தில் எழாவதுபிரிவில்-சமத்திரியவர்ம்மன் ஆக்கு ள்ளாசுபண்ணுகிறவனுக்கு மாத்திரம் பள்ளியெழுச்சி முடியுமென் றெழுதியிருக்கிறேனல்லவா - அதுபோலவே நாளதுவரையிலு ம்பள்ளிகோபுரமென்றே வழங்கிவருகின்றது அந்தச்சோழன்சந்த தியார்பிரதானமாகசிவாரசில்லாமற்றுமுகளாயிருந்தபோதிலும் நா ளதுவரையிலுந்தங்களை சிவ சோழவர்மனென்று தோன்றும்படி த்தலைப்பிள்ளைக்குவிரசம்புவென்கிறபட்டப்பேரைச்சிறப்புப்பேரு டன் சேர்த்துவழங்கிவருகிறதுந்தவிரசோழனுக்கு அபயனென்கிற பேர்வந்திருப்பதால் இந்த அபயனென்பதற்குப்பொருள்-பயமில் லாதவனென்றும், மற்றவர்களைக் காத்து ரட்சிப்பதென்பதுமே யாம், அந்தஅபயனென்கிற்பதம் சமஸ்கிருதமானபடியால்அதுத மிழில்வெளிப்படையாய்த் தோன்றும்படியாய்ச்சிறைமீட்டானென் கிற ஒருகாரணப்பெயரையும் வைத்துவழங்கிவருகிறார்கள்- அதை யறிந்துக்கொள்ள வேண்டியவர்கள் காஞ்சீபுரத்துக்குப்போய் வி சாரிப்பார்களானாலியாவருக்குந்தெரியவுரலாம்.

இதிலோமலாபுரியிலிருந்தப்பூமி காடுகொண்டிருந்தகாலங்களி
ற் கவுடதேசத்துராஜகுமாரனாகிய சிங்கவர்ம்மனானவன் தபசுமார்
க்கமாய்த் தென்றேசத்தைநாடிவந்து முதல் ஸ்ரீசைலம்-காளஸ்திரி
யில் நின்றுபூசித்துப் பிற்பாடுகாஞ்சீபுரஞ்சேர்ந்து ஏகாம்பரநாத
னைப்பூசித்து, தில்லைவனமானசிதம்பரம்போய் வியாக்கிரமபாதரு
டைய தெரிசனம்பெற்றுப் பிரிந்து அவராற்பதஞ்சலிமாமுனிவரை
யுந்தெரிசித்து அவர்களால் நடேசர்கடாக்ஷம்பெற்று சிவகெங்கை
யில்மூழ்கித் தனதுவெளுப்பாகிய சிங்கவர்ணம்மேம்பாய்ப் பொன்
னிறமான தேகத்தையடைந்து இரணியவர்ம்மனென்று மறுபேர்
பெற்று அவிட்டத்தில் வசிக்கும்போது தன்கவுடதேசத்தரசனான த
ல்றகப்பனிறந்தபிற்பாடு தன்குலக்குருவான வசிஷ்டராற்றன்தேச
ம்போய்ச்சேர்ந்து தனக்குண்டானநூதனகாட்சிகளை யவர்களுக்
குச்சொல்லித் தம்பிமாருடனும் அனந்தராஜகுமாரர்களுடனும்
அனந்தமுழியக்காரருடனும் இரத-கஜ-துரக - பதாதிகளான நா
ல்வகைச்சேனைகளுடனும்பிரமலோகத்தில் யாகம்பண்ணிக்கொண்
டிருந்த தில்லைமூவாயிரரிஷிகளுடனும்மேற்படிச்சிதம்பரம்வந்து
சேர்ந்து அந்தக்காட்டைச்சீர்திருத்திநாடாக்கிச் சபாநாதருக்காலை
யமும், தில்லைமூவாயிரவர்களுக்கு மூவாயிரம் வீடுங்கட்டினதுமல்
லாமல் திருவிழாவுமனந்தந் திருப்பணிகளுஞ்செய்து தனக்கிருப்
பிடமாக மேற்படி தலத்துக்குச்சமீபத்தில் கீழ்ப்புரத்தில் படை
வீடுகட்டி அதிற்றுனிருந்து மேற்படிச்சபாநாயகருக்குவிக்கிரக மு
தலானதுஞ்செய்வித்துத்தன்றம்பிமானாப் பூர்வீககவுடதேசத்துக்
கரசனுக்கியனுப்பிவைத்துத் தனக்குமேற்படி வியாக்கிரமர்- பத
ஞ்சலி - தில்லைமூவாயிரவர்களால் மேற்படிச்சபாநாயகர்வீற்றிரா
நின்ற பஞ்சாக்ஷரப்படியின்மேல்வைத்து மேற்படிச் சபாநாதரு
க்குச்செய்வதுபோல் அபிஷேகமுதலானதுஞ்செய்து இத்தேசத்
துக் கதிபதியென்று கிரீடமுந்தரித்து - வாள்-முதலான ராஜசின்
னங்களும்பழையபடிபெற்று மேற்படிச் சபாநாதராகிய பரமசிவ
த்துக்குரிய - ஆத்திமாலை- சிரமாலை- சங்கு- திருச்சின்னங்காவிக்கொ
டிமுதலானதும்பெற்றுப் புலிப்பதியாகிய சிதம்பரத்துக் கரசனெ
ன்றுதோன்றும்படிப் புலிக்கொடியுரியதென்று ஷை-யாராலிகொடு
க்கத் தான்பெற்றுப் பஞ்சாக்ஷரமாகிய திருநீற்றைத்தரிப்பித்துத்

திருநீற்றுச்சோழனென்கிற மூன்றுவதுபேரைக்கொடுக்கப்பெற்று கடவுளுக்குச்செய்யும்சர்வமரியாதையும் செய்யப்பெற்று ஆனையின்பேரில்மேற்படிநகரப்பிரதக்ஷிணம் வருங்காலையில் கர்ப்பூரஆலாத்தி-தூபகலசம்-ஆலவட்டமுதலானமரியாதைகளும் ஷை யாரால் செய்யப்பெற்றுதன்னரசுக்குரியஸ்தானத்திருந்துஅரசுசெய்ததுமல்லாமல் தன்வம்ஸத்தார்யெவரைகுற்றஞ்செய்தபோதிலும்பொறுத்துத் தங்கள்பரம்பரைவழியாய் அடிமைகொண்டு திருப்பணிவேலையை நடத்திக்கொள்ளும்படி மேற்படிச் சபாநாயகரிடத்தில் பெற்ற வரத்தைப்போல் நாளதுவரையிலும் மேற்படிச்சோழன் சந்ததியாருக்கு மேற்படி பஞ்சாக்ஷரப் படியின்பேரில் வைத்து முடிதரிக்கும் ஆதிகாலத்திற்செய்த சர்வமரியாதைகளும் பிசகாமல் நாளதுவரையிலுமிப்பிராய்நடத்திவருகிறார்கள் - ஆதியில் சிதம்பரத்துக்கருகு கீழ்ப்பாரிசத்தில் கட்டப்பட்ட அரண்மனையில் நாளதுவரையில் அந்தச்சந்ததியார் பேரரசுபோய் விட்டுச்சிற்றரசராயிருந்துவருகிறார்கள் தங்கள்கோத்திரம் பாஸ்கரகோத்திரமென்றும், பலனிவலென்றும், சூர்யவம்ஸமென்றும், வன்னியரென்றும், செம்பியரென்றும், சோழனென்றும், வழங்கிவருகிறார்கள்-திவ்ஸமூவாயிரவர்களுடைய சந்ததியாரும் இரணியவர்ம்பச்சோழனால் தங்களை ஆட்கொண்டு சந்ததிக்கு சொல்லிக்கொள்ளுகிறார்கள் - இதுவுமல்லாமல் ஷை ஸைலத்தில் நித்யபூஜை முதலான சிலவு திருப்புமுதலானதைப்பற்றிய கவலையுமேத திவ்ஸமூவாயிரவர்களை மேற்படிச் சோழன் சந்ததியாருக்கு கொடுத்துவிட்டும் வருகிறார்கள்,- அதைமேற்படிச்சோழன்சந்ததியார் தங்களிராஜதானிகணக்கில் சபாநாயகர்கணக்கென்றுபதித்துப்வரவுசிலவுகளையொப்புக்கொண்டுஷை ஸைலத்துக்குரியதிறவுகோல்மூன்றில் ஒன்றைத்தாங்கள்கைப்பற்றியும், தங்களுத்திரவின்பேரில் ஆகவேண்டியகாரியங்களை நாளதுவரையில் நடத்திவருகிறார்கள் - இந்தத்திருஷ்டாந்தக்காக்ஷியை வேண்டியவர்களியாவரும்இப்போதுப்போய்த்தெரிந்துகொள்ளலாம்-மற்றவனந்தவிடங்களில்ரசாண்ட அனந்தஞ் சோழர்களும் இவர்கள்சந்ததியார்களேதவிரவேறல்ல.

இதிற்குறிப்பித்த இரணியவர்ம்மச் சோழசரித்திரத்துக்குப் புராணதிருஷ்டாந்தம்வருமாறு.

கோயில்புராணம்-இரணியவன்மச்சருக்கம்-௬-வது-கவி.

அன்னவர்கள்பின்னவனுமனுவாகிவவனுக்கு..... ... *
மன்னுமனைவியரிருவருளராகிமற்றவரின் ... . *
மூன்னவள்பாலுடன்மடங்கன்முழுதிறமாமகவுதிப்பப் *
பின்னவள்பாலிலிரண்டாயிருகுதயர்பிறந்தார்கள் ... *

இதின்தாத்பரியம்,

அப்படிப்பட்ட நாலுமனுக்களுக்குப்பின் சுவுடேசனென்னுமனுவுண்டாகிநீதி செலுத்துங்காலத்திலவனுக்குரிய இரண்டு மனைவியர்களில் பிரதானமான ஸ்திரியினிடத்திற் சிரேஷ்ட ஞ்சிங்கவர்ன்மமாக ஒரு குமாரனுண்டாக இரண்டாம் ஸ்திரியினிடத்தில் ராஜலக்ஷணம் பொருந்திய விரண்டு குமாரர் பிறந்தார்களென்பதாம்,

இந்தக்கவியிலிசுவுடேசனென்னுமனுவுக்கு மூன்றுகுமாரர் உற்பத்தியானார்களென்றுகுறிப்பித்தார்-

---

இதுவும்-ஷை-ய-வது-கவி,

வீரவுசிங்கவருமன்பின்வேதவன்மன்சுமதியென .. ... *
வருதநயர்மூவர்களுமறைமுறையின்மலிசடங்கு ... *
பெருகியபின்படைபயின்றுபிறங்குமதகரிபரிதேர் ... *
கருதியுகைத்திடுமாறுமொன்றுகக்கற்றார்கள் ... ... *

இதின்தாத்பரியம்.

சிங்கவர்ம்மன்- அவன்தம்பி வேதமர்ம்மன்- அவன்றம்பி சுமதியென்றுசொல்லப்பட்ட இந்தமூன்றுகுமாரர்களும் வேதமர்க்கத்தில் க்ஷத்திரிய ஆங்கமானகிரியைசெய்து முடிந்தபிற்பாடு ஆயுதம் அப்பியாசித்துத்தேறினபின்- ஆனை - குதிரை- தேர்- முதலான

துமேறி ஒப்பு முபாயங்களும் மூவரு மொருமிக்கக் கற்றுரென்பதாம்.

இந்தக்கவியினால் ஷை குமாரர் மூவர்களின்பேரும் அவர்கள்கற்றவித்தையையுஞ்சொன்னார்.

இதுவும் ஷை-ய-வது-கவி.

கற்றதற்பின்முன்னவன்மெய்க்களங்கத்தாலரசாள்கை *
குற்றமுளதினியுலகிற்குலமைந்தரிருவரினும்..... ...*
பெற்றவர்கள்பெறுகின்றார்மனுவிசைவாற்பெருந்தவங்க
ளுற்றொடுங்குமிதுசாலவுறுதிநமக்கெனவுணர்ந்து ... *

இதின்தாத்பரியம்.

பலகலையுங்கற்றான் முந்தினகுமாரனானவன் தன்னுடையகாரகுற்றத்தினாலே தனக்கு இராச்சிய மாளுகைக்குத் தோஷமெறுதப்பிமாரிருவரும் அரசுக்குரியவர்கள், மனுவுக்குப்பின் நாம் முடையராச்சியம் ஆளப்பெறுவார்கள், நாம் மேலான தபசுகளைச் செய்து சித்தத்தையொடுக்குவதே மிகவும் ஆத்மலாபமென்றுவிசாரித்தானென்பதாம்.

இந்தக்கவியிலிரணியவர்ப் மனுவன் தன்தேகத்திலிருக்கிற குற்றத்தினால் அரசாளுவதைநீக்கி தான்றவசுக்குப்போவதாகவும், தன்றம்பிமார் அரசாளுவதாகவும் யோசித்ததாய்க் குறிப்பித்தார், அவன்றகப்பனிடத்தில் விடைபெற்றுத் தவசுபண்ணுவதற்கு விடமும், பெரியோர்களையுர்தேடித் தென்றிசைநோக்கி வருவதைபேற்படிபுராணத்தில் வேண்டியவர்கள்விபரமாய்க் கண்டுகொள்ளலாம். மனு-வென்பது-அரசு மனுக்குலமென்பது இராஜகுலமென்பதாம்,

---

இதுவும் மேற்படிச்-சருக்கம்-ஐ வது-கவி.

பருப்பதமிறைஞ்சிவிழிசோதிபயில்வித்துத் ... ...*
திருத்தகுநதிப்பொருவிநீர்த்தமவையாடி ... *
யருத்திமிகுகாளனுடனத்திபணிநித்தன் ... ... *
பொருப்புறவுடன்றொழுதுபோதலுறுநாளில் ... ... *

இதின்தாத்பரியம்,

சிங்கவர்ம்மனுனவன் ஸ்ரீசைலத்தைக்கண்டுவணங்கிசோதிமய மானசிவலிங்கத்தைவிழியில் நீங்காதுபொருந்துவித்துப் புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து நாகமும்- ஆனையும்- வணங்கப்பட்ட காளத்தியில்பரமசிவத்தையும் மேற்படி மலையும் வணங்கித்தெற் குநோக்கி வருதாளிலென்பதாம்.

இந்தக்கவியினால் சிங்கவர்ம்மனுனவன் ஸ்ரீசைலத்தையுங் காளத்தியையும்பூசித்துத், தெற்குநோக்கினுனென்றுகுறிப்பித்தார்.

இதுவும்-மேற்படி சருக்கம்-உரு வது-கவி.

மற்றவனாயெய்தவழிசெய்கவெனவேடன் ... ... *
றுற்றசரிபூடுகொடுபோகியிவர்சொன்ன ... ... *
கொற்றவனெக்குமாரனுங்குறிகினுன்முற் ... ... *
கற்றமறைசொற்றமறைகம்பர்திருமுன்பு ... ... *

இதின்தாத்பரியம்,

நீசொன்ன மாவடித்தேவனைக்காணத்தக்கதாக வழிவிடென்று சிங்கவன்மன்சொல்லவேடனுனவன் சுவடுமறைந்தசரிவழிக்குள்ளா கக்கொண்டுபோய் இவர்தாம் நான்சொன்ன தேவனென்றுகாட்டக் கவுடதேச ராஜகுமாரனும் முன்னேபிரமாதிகளாலே கற்கப்பட்ட வேதங்கள்ஈச்சுவரயிக்கியம்விஞ்ஞாபிக்கும்திருவேகம்பர்திரு முன்னேஅணுகினுனென்பதாம்,

இந்தக்கவியினுலிரணியவன்மன்காஞ்சிபுரங்கண்டு தெரிசித் ததாகக்குறிப்பித்தார்,

---

இதுவும் மேற்படி-சருக்கம்-ஈரு-வது-கவி,

அத்தனுடனுருயிர்கள் கூடவணைவிக்கும் ...*
சத்திதகுவேடனரசன்றநயனைக்கொண் ... *
டெத்தகையகானமுமியாறுமகல்வித்துச் ... ...*
சித்தமலிதில்லைவனவெல்லைசெறிவித்தான் ... ...*

இதின்தாத்பரியம்,

பரமசிவத்தினோடு ஆன்மாக்களைச்சேரக்கூட்டுவிக்கும் அருட்சத்தியையொக்கும்வேடல் இராஜகுமாரனைகைக்கொண்டு எந்தப்பொரியகாடுகளும்ஆறுகளுநடந்து கடப்பித்துத் தரிசனமானமாதுரத்தி லேசித்தஞ்சிவமாக்கும்தில்லைவனத்தினெல்லையை அணுகிவித்தானென்பதாம், இந்தக்கவியினுல்சிங்கவன்மனைவேடனுனவன்சிதம்பரத்திற்கொண்டுபோய்விட்டதாகக்குறிப்பித்தார்,

---

இதுவும்மேற்படி சருக்கம்-௫௨-வது-கவி,

அங்கருளிட்பாடியரோடருமுனிவர்கடதணைந்து ... *
சிங்கவன்மாவுனக்கின்பத்திருந்துநடம்புரிந்தருள
வெங்கள்பிரானருள்செய்தானெய்துவவென் றடனெயெ
பங்கயப்பூந்தடமதனிற்படிகவெனவுனாசெய்தார் [ழிற்

இதில் தாத்பரியம்,

அவ்விடத்துப்பொருந்திய கணநாதர்களுடனே பெரியமுனிவர்களும்சடுதியிலேபொருந்திசிங்கவன்மனே உனக்கானந்தநிருத்தம்திருவுளம்பற்றஎங்கள்கடவுளானவர்அருளிச்செய்தார் வரவேண்டு அவனைப்பொற்றுமனாப்பொய்கையிலே ஸநானம்பண்ணச்சொல்லிக்கற்பித்தார்களென்பதாம்,

---

இதுவும்மேற்படி சருக்கம் ௫௩ வது கவி,

அருளதனுற்றடம்படியுமவன்கடன்மேலருக்கனென *
விரவுபசுங்கானடைந்த மேருகிரியெனவிளங்கி ... ... *
யிரணியமாமுருவாகியெழுந்ததுகண்டதிசயித்துப் .. *
பரவியதுபெயராகயாவர்களும்பயில்வித்தார்... ..... *

இதின்தாத்பரியம்,

அருளாலேஸ்நானம்பண்ணி யெழுந்திருக்கு மவன் கடல்மேலுதிக்குமாதித்தனைப்போலவும், பசுமைபொருந்தின காடுசூழ்ந்தமகாமேருவைப்போலவும்பிரகாசித்துப்பொற்சொரூபமா யெழுந்திருந்தமைகண்டு ஆச்சரியப்பட்டுஎல்லாரும்புகழ்ந்து அந்தவிரணிய

வர்னமேபோகஇரணியவன்மனென்று பொருந்தப் பேர்கற்பித்தார்களென்பதாம்,

இந்தவிரண்டுகவியிலும் சிங்கவன்மனுடைய வெண்குஷ்டம் நீங்கிப் பொன்தேகத்தையடைந்து இரணியவன்மனென்கிறபெயரிண்டாம்பேர்பெற்றதாகக்குறிப்பித்தார்,

---

இதுவும்-மேற்படி-சருக்கம்-ரகஉ-வது-கவி,

அருந்தவரடங்கத்திலிலையம்பலஞ்சூழவைகத் ... *
திருந்தியசீர்மன்மன்றந்திகழ்ஞானதிசையிற்சேரப்... *
பொருந்தியதானைமல்கப்புகழ்படைவிடுசெய்தங் ... *
கிருந்தனன்பின்புசெய்தவியல்புகளியம்பலுற்றாம் ... *

இதின்தாத்பரியம்.

இரணியவர்ம்மனுனவன்பிரமலோகத்திருந்துதானிட்டுவந்தமூவாயிரம்பிரமரிஷிகள்முதலான பெரியோரியாவரும்தில்லையம்பலத்தைச்சூழ்ந்திருப்பக் குற்றநீங்கினவிரணியவன்மனுனவன் சிதம்பரத்துக்குக்கிழக்காகப்பொருந்தித்தன்னைச் சேவித்துவந்தசதுரங்கபலத்துக்கு மிடமுண்டாகக்கொற்றவன் குடியிருப்பென்றுசொல்லப்பட்ட படைவிடுகற்பித்து அவ்விடத்துக் கட்டின மாளிகையிலிருந்தான் - பின்பு நடந்த காரியங்களைச் சொல்லப்புகுகின்றேனென்பதாம்,

---

இதுவும்மேற்படி-புராணம் திருவிழாச்சருக்கம்- உ-வது-கவி,

சங்கமிருந்தபினங்கமர்புண்டரிகத்தாளோ ... *
நிங்கரசன்றருமைந்தரின்முந்தையளிப்பார்மெய்ப் *
பொங்கருள்கொண்டுபுரப்பவனிப்புவிமுற்காவற் ... *
பங்கமிறம்பியர்தம்பதியென்றுரைபாரித்தான் ... ... *

இதின்தாத்பரியம்,

தில்லைமூவாயிரவர்கள்- வியாக்கிரமபாதர்- பதஞ்சலி-வர்முதலானபெரியோர்களும் அந்தவரசக்கூட்டங்களுங்கூடியிருந்த

பின் அவ்விடத்துப்பொருந்தினகவுடதேசன்றந்த குமாரரில்முத்தி னகுமாரனாகிய இரணியவன்மன் இந்தத் தேசத்தைச் சத்தியமாய்ச் செங்கோல்நடத்தக்கடவன், தம்பிமார்கள்தங்கள்கவுடதேசத்துக்கு முதற்காவலாக யிருக்கக்கடவர்களென்று யாவருங்கேட்க வியாக்கிரமபாதர் சொன்னாரென்பதாம்-முதற்காவலென்பது-பேரரசு,

இதுவும்-மேற்படி-திருவிழாச்சருக்கம் ௩-வது-கவி,

உருகுபதஞ்சலிமன்னுபமன்னியனன்மாமல் ... ...*
றிருவுடையந்தணர்யாருமுவந்துரைசெய்யச்... ... *
ரிரணியவன்மனைமுன்மரபின்மணமேய்வித்தே... ...*
மருவியமன்றயன்மண்டபமொன்றுவகுப்பித்தார் ... *

இதின்தாத்பரியம்

பதஞ்சலிமுனியும்- உபமன்னியரும் - அவருக்குமாமனாகிய வசிஷ்டரும்-திவ்ஸ்லமூவாயிரவர்கள் முதலானமற்றுமுள்ள தேவரிஷிகளியாவரும்வியாக்கிரமபாதர் சொன்னபிரகாரமே செய்யக்கடவதென்றுசொல்ல இரணியவன்மனுக்கு அவன்கூத்திரியவம்சத்துக்குரிய விவாகஞ்செய்வித்துச் சிதம்பரச்சபைக்கருகி லபிஷேகமண்டபமொன்று கட்டுவித்தாரென்பதாம்,

இதுவும்-திருவிழாச்சருக்கம்-௪-வது-கவி.

மற்றதின்மங்கலமாலைகடோரணம்வாழ்தீபம் ... *
பொற்றவிசெண்பலகைக்குலநெய்பொறிபுற்பூநூல் *
சுற்றியகும்பமுடன்கலசம்பலசூழ்வித்தே ... ... *
யற்றிகழ்வொன்றுசடங்கதிவாசமமைத்தார்கள்... .. *

இதின்தாத்பரியம்,

அந்தமண்டபத்தில் மங்கலார்த்தமான தருப்பைமாலைகள் மாவிலை தோரணங்கள் - தூண்டாவிளக்குகள் - கனகசிங்காதனம் - அட்டமங்கலப் பலகைத்திரள்- தருப்பை- இவை முதலானதும்

தெய்- பொறி-புஷ்பம்-முதலானதும், நூல்சுற்றிய பிரதானகும்பக லசமுதலானதுமமைத்து ஒருராத்திரிமுழுதும் அதிவாசகிருத்தியம் விளங்கப்பண்ணினார்களென்பதாம்,

இதுவும்-மேற்படி-திருவிழாச்சருக்கம்-௫-வது-கவி,

காலைதொடங்கிநடந்துசடங்குகணித்தோதும் ... ...*
வேலையின்மங்கலநீடபிடேகம்வியந்தாடி ... ... *
மூலமுயங்கியமாமுடிதார்முதுவாள்பெற்றங் ... *
கேலவிருந்தபினிட்டனராண்டொன்றிரண்டென்று *

இதின்தாத்பரியம்,

உதயகாலந்துவக்கி நடத்தவேண்டிய சடங்குகளைமுடித்துக் குறிக்கப்பட்ட முகூர்த்தத்தில் அபிஷேகம்பண்ணிப் பாரம்பரிய மான மகத்தான்மணிமடகும்-ஆத்திமாலை- பழையவீரகடகம்- வியாக்கிரமபாதர்கையினால் கொடுக்கப்பெற்று அந்தமண்டபத்திற் சிங்காதனத்திலேயிருந்தபின் என்பதாம்,

இந்த ஐந்துகவியினாலும் வியாக்கிரமபாதர் முதலானரிஷிகளுங்கூடி கவுடதேசத்தரசனான இரணியவர்ம்மனை இத்தேசத்துக் கரசனாகவும், இவன்தம்பியானை மேற்படி கவுடதேசத்துக்கரசனாகவும்நியமித்து மேற்படி இரணியவர்மனைப் பஞ்சாக்ஷரப்படியிலெழுந்தருளப்பண்ணி முடிசூட்டி ராஜசின்னங்களைக் கொடுப்பித்ததைச்சொன்னார்.

இதுவும்-மேற்படி-திருவிழாச்சருக்கம் ௬-வது-கவி,

சிந்தைமகிழ்ந்தெதிர்வந்தனைதன்றநயன்செய்யத் ... *
தந்தைமகிழ்ந்துதழீஇவளாசிகடானல்கிப் .. ... *
புந்தியிலங்குபுலிப்பதிகாவல்புரப்பாயென் ... ... *
றந்தமின்முந்துபுலிக்கொடியங்கையகத்துய்த்து ...*

இதின்தாத்பரியம்,

சிந்தைகளிகூர்ந்து தன்னருட்புதல்வனான இரணியவர்ம்மச் சக்கிரவர்த்தி எதிரேவந்து நமஸ்கரிக்க அருட்பிதாவாகிய வியாக்கிர

மபாதர் பிரியத்துடனே தழுவிக்கொண்டு மிகுந்த ஆசீர்வாதஞ்செய்து அறிவுக்கறிவானவியாக்கிரபுரத்தைக் காத்தளிப்பாயாகவென்று முடிவில்லாத பழைய வெற்றிப்புலிக்கொடியை அழகியகைத்தலத்திலே திருவுளம்பற்றிக்கொடுத்தாரென்பதாம்,

இந்தக்கவியினால்மேற்படி இரணியவன்மச்சோழனுக்குப்புலிப்பதிக்காசனென்றுதோன்றும்படிப் புலிக்கொடியை வியாக்கிரமபாதர் கொடுத்ததாகக்குறிப்பித்தார். பழையபுலிக்கொடி- என்பது ஆக்நேயத்தில் இவர்கள்வம்சத்துக்கு மூலபுருஷனுற்பத்தி யாகுங்காலத்தில் ஆண்புலிக்கொடியுடன் பிறந்தானென்று சொல்லியிருப்பதால் அதுஇவர்கள்வம்சத்துக்குரியதாகையால் இந்தவிடத்தில் முந்துபுலிக்கொடி என்றுசொன்னார்,

---

இதுவும்-மேற்படி-திருவிழாச்சருக்கம்-எ வது-கவி,

போதுகவெள்ளுவலங்கொடுபுக்கருண்மிக்காடு ... *
நாதமுனாண்மலர்சிந்திவணங்கநயந்தண்ணல் ... *
பாதமிரண்டுமெடுத்தவர்முச்சிபரிப்பித்தா ... ...*
னோதமெழுந்தெனயாவருமோகையுறாத்தாரிகள் ... *

இதின்தாத்பரியம்

இரணியவன்மனைவருகவென்று பிரதக்ஷணமாகச்கொண்டுசென்றுஉள்ளேபுகுந்துஅருள்மிகவானந்தநிருத்தஞ்செய்யும் சிதம்பரநாதர்சன்னிதியிலே நல்லபுட்பாஞ்சலிபண்ணி நமஸ்கரிக்க கற்பித்து கடவுளது திருப்பாதுகை விரண்டினையுமெடுத்து இரணிய வன்மன் சிரசிலேவியாக்கிரமபாதமகாரிஷிதரிப்பித்தார்- அப்போது சமுத்திரகோஷிடம்போல்தேவரிஷி-பூதகணம்-மனிதர்கள்- அரசகூட்டங்கள்முதலானயாவரும்பிரியவார்த்தைகள்சொன்னார்களென்பதாம்.

இதுவும்-திருவிழாச்சருக்கம்-அ வது-கவி.

ஈறில்பெருந்தனமென்னவைநின்னவையிப்பார்மே *
லாறினிலொன்றுகொளஞ்சினிலொன்றுகொளத்தாவிப் *

பேறுபிறந்தடியேன்மறையோர்கள்பிழைத்தாலுங்... *
கூறருமன்புகொடுத்தடிமைப்பணிகொள்கென்றான்

இதின் தாத்பரியம்,

என்னுடையபூர்வார்ச்சிதமானமூடிவில்லாதசகல ஐசுவரிய மும்தேவரீருக்காகக்கடவன இந்தப்பூமியிலே நீதிபிரகாரம்ஆறிலொருகடமைகொள்ளுகிறதைவிட்டு ஐந்திலொருகடமைகொண்டு அடியேனுக்குப்பிறந்துவரப்பட்டயென்சந்ததியார்குற்றஞ்செய்தாலும் பொறுத்தருளிச்சொல்லுதற் கரிதாகியபத்தியையுண்டாக்கி அடிமைத்தொழில்கொண்டருளவேண்டுமென்று இரணியவர்ம்மன் வேண்டிக்கொண்டானென்பதாம்.

இதுவும் திருவிழாச்சருக்கம்-கூ-வது-கவி.

அன்னனுமவ்வகைசெய்குவமென்றருள்செய்போதிற் *
கண்ணமர்தாரைகாணாநிகர்ப்பக்கரைவுற்றங்..... *
கெண்ணருமின்னருளெய்தியிறைஞ்சியெழுஞ்சேயைத்
தின்னணியநல்முனிகொண்டுடையானடிசேர்வித்தான் *

இதின் தாத்பரியம்,

தேவநாதரும்அப்படிச்செய்வோமென்று திருவுளம்பற்றின காலத்துப்பொருந்தினகண்ணீர்த்தாரை மழையொப்ப நீராளமாயுருகிஅவர்எண்ணரிதாகிய விநியவருள்பெற்றுநமஸ்கரித்தெழுந்திருந்து அவ்விடத்தேநிற்கிறகுமாரனை ஞானவீரரானநல்ல வியாரக்கிரம பாதமகாரிஷிகொண்டுசென்றுமூலஸ்தானக்கடவுளினது பாதங்களை அணுகிவித்தாரென்பதாம்.

இதுவும் திருவிழாச்சருக்கம்-ம-வது-கவி.

அங்கும்வணங்கிவணக்கருமானையைமேல்கொண்டு ... *
மங்கலமாநகர்சூழ்வரமாமுனிதானேவச் ... ... *
சங்கவியங்கண்முழங்கவலங்கொடுதார்மார்பன் ... *
பொங்கியபங்கயமாதமர்கோயிலினுட்புக்கான் ... *

இதின்தாத்பரியம்,

மூலத்தானமுடையசிவபெருமான் சந்நிதியிலே நமஸ்கரித்து பாகரால் வணக்கரியமத்தகசத்தின் மேற்கொண்டுமங்கலமாய்மகத்தாயிருக்கிறசிதம்பரநாதனைப் பிரதக்ஷணம்வரவியாக்கிரமடாதர்கற்பிக்கசங்கவாத்தியங்கள்முழங்கஆத்திமாலைமார்பனானஇரணியவன்மன்பிரதக்ஷணம்வந்துகற்புமிகுந்தஇராஜலட்சுமி யுறைகின்றதனக்குமுன்குறித்ததிருமாளிகைக்குள்ளே புகுந்தானென்பதாம்,

---

இதுவும்- திருவிழாச்சருக்கம் ௩௧-வது கவி,

தார்புனையாரணிசெம்பியனெம்பியர்தானல்கும் .. ...*
பாருமதூருமதாகவெனுவணிதார்பட்டம் ... ... *
போர்தருசாமரைதோரைகணீள்குடைபொற்பீடம் ...*
தேரணிமாவயமாதியாதிகள்சேர்வித்தான் ... *

இதின்தாத்பரியம்,

ஆத்திமாலையையணிந்தசெம்புருஷத்தானாகிய விரணியவர்மனானவன்தம்பிமாரையழைத்து உங்களுக்குநலம்பொருந்தினதேசமும் கௌடதேசமாகக்கடவதென்று படைவீடுங் கடகமேயாகக்கடவதென்றுகற்பித்து ஆபரணமும் மாலையுங்கொடுத்துப் பட்டங்கட்டிப்பொருந்திவிசும் உபயசாமரையும்பிடிக்குடை தவளச்சத்திரம்பொற்பீடம் தேர்நிறை-யானைகள்குதிரைகள்-பதாதிகள் முதலானவையுங்கொடுத்தானென்பதாம்,

---

இதுவும்-திருவிழாச்சருக்கம்-௩௨-வது-கவி,

மென்றிநடந்தொழுதம்பியர்வந்தடிமேல்வீழ்வுற் *
றன்றவர்சென்றபின்மன்றம்வணங்கியவன்றந்தை ... *
முன்றொழுதந்தணர்வந்தனைமாளிகைமுற்செய்வா ...*
னின்றருளென்றவையெங்குமிலங்கவெடுப்பித்தான்...*

இதின்தாத்பரியம்

அந்தத்தம்பிமார் சிதம்பரநாதருடைய வெற்றியொருந்தானந்தக்கூத்தைவணங்கிவந்து தன்னையும்வந்து நமஸ்கரித்து

அனுப்பிக்கொண்டுபோகத்தக்கவர்களை யனுப்பப்போனபின்சிதம்பரமூர்த்தியினுடையசேவைபண்ணின இரணியவன்மனுக்கவன்தன்னுடையபிதாவாகியவியாக்கிரமபாதரை முன்தொழுதுதில்லைவாழந்தணனாயவரவர் திருமாளிகையிலேசென்று நமஸ்கரித்துத்திருமாளிகைகள்கட்டுகிறதற்குத்திருவுளம்பற்றுமென்று உத்திரவுபெற்றுக்கொண்டுவந்து வேவிடத்தும்விளங்க மூவாயிரந்திருமாளிகைகட்டிமுடிக்கத்தொடங்கினனென்பதாம்,

---

இதுமேற்படி-திருவிழாச்சருக்கம்-௩௩ கவி,

எழுநிலைமாளிகைகுளிகை சாளரமோரார்சீர்..... *
வாழ்மதிலோரணவாயில் கடைணிமாரிசி..... ...*
சூழ்வுறமேருவினோர்பலகோவியசோழேசன்... ... *
ஊழ்வுடன்மாதவர்யானையுநீள்குடிசார்வித்தான் .. ...*

இதின்தாத்பரியம்,

இத்துமல்லாமல் திருவிளையாடற்புராணம்

திருநகரங்கண்டபடலம் உ வது-கவி,

இன்னரம்புளரேழிசைபெழான்மிடற்றளிகள் ... *
கின்னரர்பயில்கடம்பமாவனத்தினில்கீழ்சார்த் ... *
தென்னர்சேகரமெனுங்குலசேகரனுலக ... *
மன்னர்சேகரனரசுசெய்திருப்பதுமணலூர் ... .. *

இதின்தாத்பரியம்,

இனிதானநரம்புக்கருவியால் இசையேழையு மிசைப்பதுபோல்தங்கள்கண்டத்தினாலே பாடப்பட்ட வண்டுகளும் கின்னரப்பட்சிகளுஞ்சூழ்ந்து மொய்க்கப்பட்ட கடம்பவனத்துக் கீழ்ப்பக்கத்திற் பாண்டியர்களுக்கும்- மற்றகுலங்களுக்கும் மற்றவரசர்களுக்கும் கிரீடம்போன்றவ னரசுசெய்திருப்பது மணலூரென்பதாம்.

இதுவும்-மேற்படித்-திருவிளையாடற்புராணம்

உக்கிரபாண்டியன்- அவதாரப்படலம்-க-வது-கவி,

மன்னவன்குலசேகரன்றிருமகன்மனைவி ... *
தன்னெடுங்கடலாடியதகுதியிதற்றத் ... *

தென்னவன்றனித்திருமகடிருவுளங்களிப்ப ... ...*
உன்னருந்திறலுக்கிறனுதித்தலாருரைப்பாம் ... *

இதின்தாத்பரியம்,

குலங்களுக்கெல்லா முடியாகிய அரசவம்சமாகிய அழகிய மகனாகிய மலையத்துவசபாண்டியன் தன்பெண்சாதிகாஞ்சனமாலையுடன் கடலாடியவிபரம்போக இது மேற்படி மலையத்துவசபாண்டியன்மகளான தடாதகைப்பிராட்டியாரென்னும் மீனாட்சியானவள் சந்தோஷிக்கும்படியாய்த் திறனுடைய உக்கிரவழுதிப்பிறந்தனைச்சொல்வோமென்பதாம்,

இதிற்குறித்த-சுலோகம் கவிகளினாலும் - சேர - சோழ பாண்டியர் மூவர்களுக்கும் வெவ்வேறுபேரிருந்தும்- குலங்களுக்கெல்லாமேலானவர்கள் அரசகுலமென்று தோன்றும்படியாய்க் குலசேகரனென்றுஞ் சொன்னார்கள் - இதுபோலின்னுமனந்த நூல்களிலுங் குலசேகரனென்கிறபேர் - அரசருக்கே யுரித்தாக வருவதைப்பற்றி முன்சிலையெழுபதிற்குறித்த கவியிற் குடவளமென்றார்- மேற்படிக்கவியில் நிலவளமும், அந்தநிலத்தைப்பயிரிடும் உழவராகிய குடிகளின்வளமுமென்று சொன்னபடியாலதற்குத்திருஷ்டாந்தமான மேற்கோள்வருமாறு,

---

வெள்ளாழனாக்குறித்து கம்பனாற்சொல்லப்பட்ட
எழுபது - பாயிரம்-ச-வது-கவி,

நிழமண்டலமுதலெனவுலகத் ... ... *
தெண்ணுமண்டலத்தெறிபடைவேந்தர் ... *
வாழுமண்டலஞ்செம்பியன்மாபிணோர் ... .. *
நாமெலாம்பிறந்தினியபல்வளத்தின் ... *
வாழுமண்டலங்கனகமுமணிகளும் ... *
வரம்பிற்றாவிரிகூரம்பினிற்கொழிக்குஞ் ... ...*

சோழமண்டலமிதற்கிணையாமெனச் ... ... *
சொல்லுமண்டலஞ்சொல்வதற்கில்லையே .. .. *

இதின்தாத்பரியம்,

யாழ்ப்பாணமாகியஇலங்கைத்தேசமுதலான உலகத்திற்சொல்லப்பட்டவனந்ததேசங்களுக்குரியவஸ்திரசஸ்திராப்பிரயோகம்பண்ணப்பட்டவேந்தர்களெல்லாம் வந்துதாழப்பட்ட மண்டலமாகியசம்புகோத்திரத்தில்வந்த வனந்தஞ்சோழர்கள்பிறந்து இனிதானபலவளப்பத்தினால்வாழ் பூமியின்கண்ணிற்பொற்சன்னங்களையும்-இரத்தினங்களையுங் கண்க்கில்லாமற்காவேரியானது அலைகளினாலிருபக்கத்திலும் ஒதுக்கப்பட்டசோழமண்டலத்துக்கொப்பாகச் சொல்வதற்கு வேறுதேசமில்லையென்பதாம்.

இந்தக்கவியினால் முன்சிலையெழுபது-ருச-வது கவியில்- நிலத்தின் வளப்பமுடையவனென்று சொன்னதுபோல் சம்புகோத்திரத்தாருக்குரிய சோழமண்டலத்தைப்போல் மற்ற எந்தத்தேசமுமில்லையென்று சொன்னாரேதவிர வேறல்ல,

---

இதுவும்-ஷை-ஏழெழுபது-பாயிரம் ௬ வது-கவி,

சோழராஜன்சிறப்பு,

முடியுடையமன்னவரின்மூவுலகும்புடைத்துடைய .. *
கொடியுடையமன்னவரிற்குலவுமுதற்பெயருடையான் *
இடியுடையவொலிகெழுநீரெழுபத்தொன்பதுநாட்டுக் *
குடியுடையான்சென்னிபிறரொன்றுடையார்கூறீரே... *

இதின்தாத்பரியம்.

கிரீடந்தரித்த வரசர்களில் திரிலோகமும் தங்களுக்குரியதாகவுடைய வில்- புலி- சேல் - என்றுசொல்லப்பட்ட மூன்றுகொடிகளையுந், தங்களுக்குரிய விருதாகவுடைய தமிழ்வேந்தராகியென்றுவரசர்களிற்சென்னியென்றுசொல்லப்பட்டமு

[illegible]வனும், இடையைப்போற் சத்திக்காநின்ற ஜலப்பிரவாகப் பொருந்திய எழுபத்தொன்பது நாட்டுக்குடையநல்ல (வெள்ளாழக்) குடையையுடைய சோழனுமவன் பிறர் என்னுடையார் சொல்லிவிரல்பதாம்.

இந்தக்கவியினால் முன்சிலையெழுபதிற் சொன்னகவியிற் குடிவளமுடையவனென்று சொன்னதுபோல் எழுபத்தொன்பதுநாட்டுக்குடைய குடிகளையுடையவன் சென்னியென்றார் - சோழராஜனுக்குடைய குடிகளை மேற்படிச்சோழராஜன் சந்ததியாருக்குரியதாகவருவித்து முன்கவியிற்சொன்னார் - இதல்லாமல் மேற்படிக் கவியில் அறவளமென்று சொல்லியிருக்கிறபடியாற் சிலையெழுபதில் அறவளமென்று பிரத்தியேகமாய் பொருகவிசொல்லியிருப்பதாலும் மேற்படி கவியிற்குடிவளமென்று சொல்லி அதைச்சேர்ந்தே யறவளமென்று சொல்லியிருப்பதா லிதுகுடிகளுக்குரிய அறவளமேதவிரவேறல்ல- ஆதலாற் குடிகள்செய்யப்பட்ட தருமத்தைக்குறித்து சிலதிருமிடாற்தக்வறியாறு.

வேளாளர்சாதிபாற்சொலலப்பட்ட

தொண்டமண்டலசதகம் - எக - வது - கவி,

கோலூருழவக்குடியானவன்றன்குமிழம்பட்டு *
வேலூர்க்கிழானொருவேளாளன்பஞ்சம்விடியளவு *
நாலூரிலுள்ளபுலவோர்க்குந்தேசத்துநாவலர்க்கு *
மாலூருமன்னங்கொடுத்தளித்தான்றொண்டமண்டலமே

இதின்தாத்பரியம்,

குமிழம்பட்டிலிராநின்ற உழப்பட்டகுடியானவனான வேலூர்க்கிழானென்கிறஒருவேளாளனானவன்கருப்புத்தெளியளவும் நாலூரிலுள்ள வித்துவான்களுக்கும் மற்றத் தேசத்திலுள்ள நாவலருக்கும் பாலும் அன்னமுங்கொடுத்து ரட்சித்தானென்பதாம்,

இதுவும் மேற்படித் தொண்டமண்டலசதகம் ௧௫ வது-கவி,

தரைபார்மழைபுந்தபனனும்போலத்தடையுமிந்தி *
யுனையாதுநீசனெடுண்டமையாதுமோருனமின்றித் *
தினையார்புவியிற்புகழேபடைத்துத்தினந்தினமும் *
வரையாதுவள்ளர்மைகாட்டுவதாற்றொண்டமண்டலமே

இதின்தாத்பரியம்,

புவியில் மழையும் ஞாயிறும் சரிவிதின் பேரிலும் பேதமின்றி பெய்ந்துகாய்வதுபோல் ஒருகடையுஞ்சொல்லாமற் பறையறைந்து புகழ்படியாற் சமுத்திரஞ் சூழ்ந்த விந்தப் பூமியி லுள்ளமின்றி நாள்தோறு மிரவலெனறு சொல்லாமற் கொடுக்குந்தன்மையையுடைய ஒருகளாகிய இந்தவெள்ளாழரல்லாமல்மற்றொன்பதாம்,

இவர்கள்பறையறைந்தாரென்பதற் மேற்கோள்-இவர்களிருக்கைவளத்திற் கண்டுகொள்ளலாம் - இந்தக்குடிகளுடைய தருமச் செயல்களும் மேற்படித்தொண்டமண்டலசதகத்திற் கண்டுகொள்ளாதல்லாமல் மேற்படிக்கவியில் இமையப்பொருப்பரிபண்ணுடைமென்று சொல்லியிருக்கிறபடியால் மேற்படி ராஜசூத்திரியாருக்குத் தசாங்கத்தில் மலை மகமேருவானபடியா லதைப்பற்றி இமயப் பொருப்பமென்று சொன்னதுஞ்சரி - அல்லது- இந்த சேர-சோழ-பாண்டியர்க ளுலகமுழுமையுஞ் செயித்துத்தங்கள்விருதாகிய வில்-புலி - சேலித்த மூன்றுகொடிகளையுந் வடக்கே மகமேருவிற் றங்களுக் கெல்லைக்கல்லாக நாட்டினரென்று பலநூலிலுஞ் சொல்லியிருப்பதைப்பற்றி இமைப்பொருப்பனென்று சொன்னதுமொன்றேகவிர வேறல்ல-அப்படிமகமேருவில் தங்கள்கொடியை யெழுதினரென்பதற்குத் திருஷ்டாந்தம்,

---

சலிங்கத்துபரணி கடவுள்வாழ்த்து-௩அ வது கவி,

சேழுந்மேதிகலையாளிவிணைசிலை ... ... *
கெண்டைபென்றினையபல்கொடித் ... *

தாழமேருவிலுயர்த்தசெம்பியர் ... *
தனிப்புலிக்கொடிதழைக்கவே ... ... *

இதின்தாத்பரியம்,

பன்றிக்கொடியும், மேழிக்கொடியும், மான்கொடியும் வீணைக்கொடி சிங்கக்கொடியும், விற்கொடியும், மீனக்கொடியும், சொல்லப்பட்ட விதுமுதலான பலகொடிகளும் தாழ மகம் மேருவிலெழுதப்பட்ட சப்பு கோத்திரத்தாராகிய சோழனுடைய ஒப்பற்றபுலிக்கொடிதழைக்கவென்பதாம்,

இதுபோல்மற்றசோன் - பாண்டியனுடையவிற்கொடி- மீன்கொடி மகம்மேருவி லெழுதப்பட்டதென்று நூல்களிற்சொல்லுமிடந்தோறுங் கண்டுகொள்ளலாம்.

இதுவும்-மேற்படிச் சிலையெழுபது சுரு-வது-கவி,

வளங்குலவுபண்ணுமதக்களிறுண்புலித்துவசம்... *
விளங்குமகமேருமனோவேகரதமும்முரசு... ... *
களங்கறுகங்காநதிவெங்கனற்பரிவாடாமாலை ... *
துளங்கலில்பொற்சிலைபெற்றோர்துதிபெற்றவன்னியரே

இதின்தாத்பரியம்.

வளப்பம்பொருந்திய பண்ணுடென்று சொல்லப்பட்ட சோழதேசம் மதம்பொருந்திய யானையும், ஆண்புலிக்கொடியும், பிரகாசிக்கப்பட்ட மகம்மேருவும், மனோவேகரதமும், ரணமுரசும், குற்றமற்ற கங்காநதியும், வெவ்வியவக்கினிப் பரியும், வாடாமாலையும், அழகிய வில்லும், இதுகளைப்பெற்றவர்கள்மேற்படிவரசசந்ததியாராகியவன்னியர்களென்பதாம்,

இந்தச் சோழசந்ததியாராகிய வன்னியருக்குரிய தசாங்கத்தைச்சொல்லவந்தவர் சோழனுக்குரிய- காவேரி- ஆத்திமாலை- மலைமுதலானது சோழதேசத்திலிருக்க- மகாமேருமலையும், வாடாமாலையும், கங்காநதியும், அவர்சந்ததியாருக்குரியதென் றெப்ப

ழச் சொல்லலாமென்று சிலர் சொல்லுவார்கள்- அதின்.
வது- சோழ ர சந்ததியாருக்கும், மற்றவரசர்களுக்கும்,
பதிஸ்தானங் கெங்காதீரமானபடியாற் றங்களுக்குரியவ
டங்சேதிலிறுத்திவெகுகாலத்துக்குப் பிற்பாடு இந்தப் பூ
து ஏந்த நாட்டைக்கைப்பற்றியபடியாலதைச்சொல்லாமற
தி- சொன்னபடி பூர்வீகசொந்தமானமலை- ஆறு- மலையை
ச்சந்ததியாருக்குச்சொன்னாரேதவிரவேறல்ல,

இனவும் மேற்படிச் சிலையெழுபது

அரசிலச் சிறப்பு ௬௬-வது கவி,

நாடுபலவினுக்கரசுபல்லூழிநாற்கரசுநலஞ்சேர்கச்சி
நீடுவரைகளுக்கரசுமாமேருநெடுங்கரசுநிறைநீர்க்கங்கை.
பீடுபெறுசிலைக்கரசவ்வுருத்கரனவெஞ்சிலையகிலம்பெரிது
ஞ்ஞமனிமுடியரசுக்கரசுவன்னியரசன்றிச்சொலவேறுண்டே

இதின் தாத்பரியம்,

பலநாட்டுக் கரசானது. இசைபொருந்திய நல்ல சோழநாடே - பட்டணங்களுக்கரசு - காஞ்சீபுரியே - கரசு - மகாமேருவே - நதிகளுக்கரசு - கங்கையே வி கரசு - உருத்திரர்கையி லெடுக்கப்பட்ட மகம்மேருவே னபூமியைக் காக்கும்படியாயி ரத்தினக்கிரீடந்தரித்த வ சர் க்ஷத்திரியவமசத்தாராகிய வன்னிபவரசரன்றிச் சொல வேண்டோ வென்பதாம்.

இந்தக்கவியினால் முன்தசாங்கத்திற் சொல்லப்பட் ன வஸ்துக்களெல்லா மிவர்களுக்குரியதென்று குறிப்பிடுகி லாமல் இவர்களுக் கிந்தநாட்டில் ஆதிகாஞ்சி பதியொன்று ன்றும்படியாகவும் அரசருக்கரசொன்று சொன்னபடியா ஸ்ஷ்டிவசத்தாற் பூமியை யாளப்பட்ட மற்றஜாதி சிற்றரசரு தங்கள் சொந்த வம்சத்தாராகிய சேரபாண்டிய சந்ததியாக கும் இந்தச்சோழ ன சந்ததியாரேபேற்பட்டவரொன்று தோன்று

ன்றது-எப்படியென்றால். நியாயமாக யோசிக்குமளவில் ஆதியிரவி யவன்மச்சோழனு லிந்தக்காட்டைத் திருத்தி குடியேற்றி யாக செய்தபடியாலும், சோழனுக்குச்சென்னி யென்கிறப்பேர் வந்திருக் கிறபடியாலும், மற்றவல்லியர்களைவிடச்சோழன்சந்ததியாராகிய வல்லியர்களேமேன்மையுடையவரொன்றுதோன்றுகின்றது.

இதுவும்-மேற்படிச்-சிலையெழுபது ௧௮ வது- கவி,

அவிக்காதரங்கூரிபுனிதர்மகிழ்ந்தருள்வன்னியரையாம்புகழ்ந்தே, செவிக்காரமுதமெனக்கேட்டுச் சிந்தையுவந்துசீர்தூக்கிப், புவிக்கா யிரம்பொன்னிறைநீக்கிப் பொற்றண்டிகை பூடனத்தோடு, கவிக்கா யிரம்பொன் பரிசளித்தான் கருணாகரத்தொண்டைவன்னியனே ...*

இதின்தாத்பரியம்,

அவிர்ப்பாகத்துக் கிச்சிக்கப்பட்ட பரிசுத்தமான தேவர் கள் மகிழ்ந்து கிருபைசெய்யப்பட்ட வல்லியரை நான்புகழ்ந்து பாடச் செவிக்கு அமிர்தத்தைப்போற் கேட்டு மனஞ்சந்தோஷி த்துச்செய்யுளினுருப்பின் புகழையாராய்ந்து பூமிக்கிறைவரியாகி ய ஆயிரம்பொன்னைநீக்கிப் பொன்சிவிகை யாபரணத்தோடுகவிக் காயிரம்பொன்னும் பரிசாககொடுத்தான் கருணாகரத்தொண்ட வன்னியனென்பதாம்.

இந்தக்கவியாற் சோழன்சந்ததியாராகிய வன்னியர்களைக்குறி த்துக் கம்பர்பாடினது சோழதேசத்தி லுறையூரி லரசுசெய்து வந்த கரிகாலச்சோழன் சந்ததியில்வந்த குலோத்துங்கச் சோழன் சொந்தபாத்தியத்துக்குரிய கருணாகரத்தொண்ட சோழனுனவன் காஞ்சிபுரியைச்சேர்ந்த தொண்டநாட்டை யரசுசெய்த காலங்களி ல் இதல்லாம லின்னம் பல வித்வான்களும் மேற்படி கருணாகரத் தொண்ட சோழன்பேரில் மாலை சதகங்கள் - முதலானசி லபிரபந் தங்களைப் பாடினதுந்தவிர வடதேசத்தைச்சேர்ந்த எழுகலிங்கத் தின்பேரி லுறையூரிலிராநின்ற குலோத்துங்கச்சோழனுந் தானும்

படைபெடுத்தபோது தானைசிரவத்துக்குங் காரணகர்த்தனாகவும் மந்திரியாகவுமிருந்து ஜெயித்ததைப்பற்றி ஜெயமங்கலமென்னும் மகாவித்துவானானவர், (பரணிஎன்னுங்) கிரந்தஞ்செய்லியிருக்கிறார். (பரணிஎன்னுங் கிரந்தத்தின் விபரமாவது

உத்தமனத்தில்லரசனாகிய ஓர்வீரனெகிரோறி, யனந்தஞ்சேனாகளையும் ஆயிரம்பானகளையும் - ஏककாலத்திற் கொல்வானாகிய நாயகனாகவைத்து கடவுள்வாழ்த்து - கடைதிறப்பு - பாலைநிலமடியகாடு - காளிகோயில் - தேவியைக்குறித்தும் - பேய்களைக்குறித்தும் - இந்திரஜாலம் - ராஜபாரம்பரியம் - பேய்முறைப்பாடு - ராஜவசகாரம் காளிக்கு கடிகூடியது - போலாக்குறித்து உத்தகவாதனைக்குறித்துச்சொல்லப்பட்டதிந்தப்பரணி மூன்றங்கமும்பாடிப்பேய்களோடுகாளியும் காளியோடு பேய்களும்முறையிடுவதாய்ப்பாடுகிறதுமல்லாமல் ராஜன் வந்தகுலமும் ராஜகுலத்தி லவதரித்த முன்னோர்களுடைய பாரம்பரியமும், வெற்றியும்கீர்த்தியுந்தோன்றும்படி ஈரடிப்பரணி முழிசையாய்ப்பாடுவது-பரணியாம், இந்நூலை ஈரடிதொண்டைமான்சாமுன் செயித்தது கலிங்கதேசமானபடியாலவன்பேரிற்செய்யப்பட்டது (கலிங்கத்துப்பரணி என்றுமேபா) ஆதில் விர்சநூலில அரசசந்ததியாரைகுறித்துச்சொல்லப்பட்ட திருஷ்டாந்தத்துக்குள் சிலலால சிலதிருஷ்டாந்தம் வருமாறு.

பரணி கடவுள்வாழ்த்து-நான்முகன்துதி.

௩ - வது - தாழிசை.

நிலநான்குந்திசைநான்கும் ... ... *
நெடுங்கடல்களொருநான்குங் ... ... *
குலநான்குங்காத்தளிக்குங் ... ... *
குலதீபன்வாழ்கவென்றே ... ... *

இதின்தாத்பரியம்,

நாலுநிலங்களும் - நாலு திசைகளும் - நீண்ட நாலுகடல்களும் - பிரம்ம - க்ஷத்திரிய - வைசிய- சூத்திரர்களென்னும் - நா

ஏழு சாதிகளையுங் காத்திரட்சிக்கப்பட்ட குலங்களுக்கெல்லாந் தீபம்போன்ற(சோழன்) வாழ்கவென்பதாம்.

இந்தக்கவியில்க்ஷத்திரியகுலத்துக்குள் இவனரசான்வைதை பற்றி க்ஷத்திரியகுலத்தைச்சேர்த்து நான்குசாதிகளையுங் காத்தவனென்றும், க்ஷத்திரியகுலத்துக்குள்ளும் மற்றகுலத்துக்கு மேலாமவனைப்பற்றி குலதீபனென்றுஞ் சொல்லுவர்.

இதுவும் மேற்படிப்பரணி கடைதிறப்பு

சாசவது தாழிசை.

காஞ்சியிருக்கக்கலிங்கங்குலைத்த ... ... *
கலவிமடவீர்கழற்சென்னி ... ... *
காஞ்சியிருக்கக்கலிங்கங்குலைத்த ... ... *
களபோர்பாடத்திறமிலோ ... ... *

இதின்தாத்பரியம்,

எண்மனிக்கோர்வை மாலையிருக்க வஞ்சிரங்குலைய கடாவி செய்யப்பட்ட பெண்களே வீரகண்டாமணியைத்தரித்தபாதங்களையுடைய சோழனவன் தனக்குரியகச்சிப்பதியிருக்கக்கலிங்கமென்னுந் தேசத்தையழித்த யுத்தகீர்த்தியைப் பாடுவீர் கதலைவத்தறுத்தமகாளென்பதாம்.

இதுவும்-மேற்படிப்பரணி கடைதிறப்பு-

சாசவது-தாழிசை.

இலங்கையெறிந்தகருணாகரன்ற... ... ... *
னிகல்வெஞ்சிலையின்வலிகேட்பீர் ... *
கலிங்கமெறிந்தகருணாகரன்றன் ... ... *
களப்போர்பாடத்திறமிலோ... ... ... *

இதின் தாத்பரியம்.

இலங்கையென்னும் பட்டணத்தை முற்காலத்தி லழித்த கிருபையையுடைய ராமராஜனது யுத்தத்தின் வில்லின் நிறத்தைக் கேழ்ககப்பட்டவர்களே கலிங்கதேசத்தையழித்த கருணாகரத்தொண்டைச்சோழனதுபோர்க்களத்தைப்பாடக்கபாடத் திறங்கொளென்பதாம்.

இதிற்கவியினால் மற்றவிடங்களிற் சோழனென்றுபொதுவாகச்சொல்லியிருப்பதால் மேற்படிக் கலிங்கதேசத்தின்மேற் படையெடுத்தவன் கருணாகரத்தொண்டனென்றும் - சோழனென்றுங் குறிப்பித்தார்.

இதுவும்-மேற்படிப்பரணி-கூறியது.

உ௧வது தாழிசை.

முன்னாறுங்கல்லாறுந்தென்னனோட ... ...*
முன்னொருநாள்வாளபயன்முனிந்தபோரின் ... *
வெள்ளாறுங்கோட்டாறும்புகையாலூட ... *
வெந்தவனமிந்தவனமொக்கிலொக்கும் ... *

இதின் தாத்பரியம்,

முட்பொருந்திய காட்டின்வழியாகவும், கற்பொருந்தியமலையின்வழியாகவும், பாண்டியர்களோட முற்காலங்களிலொருதிறம் வாளையுடையசோழனனவன்கோபித்தபோரில் வெள்ளாறு-கோட்டாறு முதலானதும் புகைமூடப்பட்டு வெந்தகாட்டைப்போ லிந்தவனமொக்குமென்பதாம்,

இந்தக்கவியினால் மூன்றுவததிகாரம்- ஒன்பதாவது பிரிவிற் றிருமங்கையாழ்வாராற் குறித்துச்சொல்லப்பட்ட விந்தச்சோழன் மூன்னோர்களாகிய சோழபல்லவனுக்கும் பாண்டியனுக்குமாதியில்

நடந்தயுத்தத்தின் செயத்தைக்குறித்து ஷை யாழ்வார் சொன்னது போலிருவரும்மேற்படிப்பாண்டியனைச்செயித்ததாகச் சொல்லுர்

(*)

இதுவும்-மேற்படிப்பரணி இராஜபாரம்பரியம்.

எ-வது-தாழிசை.

அரணிவேள்வியிலகட்படவகண்டவுருவா ... *
யரவணைத்துயிலுமாதிமுதலாகவபயன் ... *
நரணிகாவலளவுஞ்செலமொழிந்துமுனிவன் ... *
ருனெழுந்தருளமாமுனிமொழிந்தபடியே... *

இதில் தாத்பரியம்,

ஆகண்டவுருவாயிருந்துசேஷசயனஞ்செய்யும் ஆதிமூலக்கட வுளானவர் கட்டானவேழ்வியாகிய அக்கினிமூலமாய்வந்துராமனாய் ப்பிறந்ததாள்முதல் சோழசந்ததியார்கள் இந்தப்பூமியை யாளுமள வுமிருந்து பலமுயபால சமுத்திரம்போலாமென்று முனிவர்சொன் னதும்பொருந்தச்சொல்லிப்பாணுரென்பதாம்.

இந்தக்கவியினால் விஷ்ணுவானவர் கலைக்கோட்டுமகாரிஷியாற் செய்த யாகமூலமாய் வந்ததைப்பற்றி வருவித்ததாலிந்தத்தாத்பரி யம்பொருந்துமேதவிராதியாயமாய்ப்புராணநூல்களைப்போல் க்ஷத் திரியர்க ளக்கினிவளர்க்கப்பட்ட வேழ்விமூலமாக வந்திருக்கிறதை ப்பற்றியும், விஷ்ணுவம்சமேயாசசாராய்வருவதைப்பற்றியும் க்ஷத்திரி யருற்பத்தி முதற் சோழன் சந்ததியுள்ளவராயினும் விஷ்ணுவம்ச த்தாலேயே யந்தச்சந்ததி யிருக்குமென்றுஞ் சொல்லவேண்டியது- அதெப்படியென்றால் - வடதேசத்தின்புராண சரித்திரத்திலக்ஷத் திரியருற்பத்திக்கு விஷ்ணுவே யாகஞ்செய்யச் சொல்லி தனதுச க்தை தாலுபிரிவா யனுப்பியிருப்பதாகச் சொல்வதே சாட்சியா யிருக்கின்றது.

இதுவும்-மேற்படிப்பரணி ராஜ்யாரம்பரியம்.

நடை-வஞ்சி-தாழிசை.

எவ்வளவுதிரிபுவனமுளவாய்த்தோன்றுமோ ... *
மெய்வளவுகலமறைகளுளவாய்த்தோன்றுமோ ... *
மலைவளவுதிரிவரையளவுஞ்செங்கோலாகிய ... ... *
வாரணிசெஞ்சொல்வயப்பாத்தளிர் மாறும் ... *

இதன் தாத்பரியம்.

எவ்வளவுகாலம்திரிபுவனங்களுமுளவாய்த்தான்றுமோ எவ்வளவுகாலங்கட்டாகிய வேதங்களுண்டாயிருக்கிறதோ அந்தகாலவளவும்- இமயமலையளவுஞ்செங்கோலாகியவாச்ருசக்கரத்தினதர்மசெலுத்திச்சோழன்காத்திரட்சிக்கிற கிரமமென்பதாம்.

இந்தக்கவியினால் முன்நாலவதுகிரகாரம்- ரெண்டாவதாகிய விபிரணியவர்ம சோழனுக்கு நட்சரானவரித்தட்டுமையயாளுபடியாய்ச் - செங்கோல்-கிரீடம்- துவசமுகலானதும் விகாமித்துநித்தப் பூமியுள்ளவனாயு முனதுவம்சத்தாலா ரட்சிக்கிறானென்று சொன்னதைப்புராணபூர்வகமாயெழுதியிருக்கிறேனல்லவா-அந்தக் கருத்தையேயிந்தக்கவியிற்பூமிவேதமுள்ளளவும்சோழன்செங்கோல் செலுத்திரட்சிக்கிற கிரமமென்பதாம்.

இதுவும்-மேற்படிப்பரணி காளிக்குக் கூளிபாடியது.

௩௨வது தாழிசை.

தன்னூரிற்மலர்த்திரடோளபயன் ... *
றானேவியசேனைதனக்கடையக் ... *
கன்னுகியசோழன்சக்கரமாங் ... *
கருணாகரன்வாரணமேற்கொளவே ... *

இதின் தாத்பரியம்.

குளிர்ச்சியும் வாசனையுமுடைய புட்பமாலையை யணிந்தேரா ளையுடைய குலோத்துங்கச் சோழனு லனுப்பப்பட்ட சேனைகளுக்கு கடைக்கலம் புகவோரிடமாகியும் மேற்படிச்சேனைகளுக்கு நேத்திரத்தைப்போலவும் சோழவம்சத்திற்பிறந்தகருணாகரச்சோழனு னவன் ஆனையின்பேரில் ஏறினனென்பதாம்.

இந்தக்கவியினாற் கலிங்கதேசத்தின்பேரி லுத்தத்துக்குப்போ ன சேனைகளுக்கெல்லாம் இந்தக்கருணாகரச்சோழனே படைபாட்சி யாகப்போனதாகவும்மேற்படிக்குலோத்துங்கச்சோழனுக்குச் சொ ந்தபாத்தியத்தை யுடையதாகவும் குறிப்பித்தார்,

---

இதுவுரி- மேற்படிப்பரணி காளிக்குக்

கூளிகூறியது-ருசவது- தாழிசை.

மறித்தோடியெவ்வரசுஞ்சரியவென்று ... *
வருமணுக்கைப்பல்லவர்கோன் வளவைவேந்த *
னெறித்தோடையிலங்குநடைக்களிற்றின்மேற்கொண் *
டிறைவேட்டபெரும்புலிபோலிகன்மேற்செல்ல *

இதின் தாத்பரியம்.

எவ்வரசர்களும் முதுகுகாட்டி யோடும்படி வென்றுவரும்ப ல்லவற்கு ளரசனான சோழராஜனுனவன் மாலைபிரகாசிக்கும்படி. நடையையுடைய ஆனையின்பேரிலேறி பெரியபுலிபோல யுத்தத்து க்குப்போனு னென்பதாம்.

இந்தக்கவியினுல்மூன்றுமூன்றுவதிகாரம் ஒன்பதாவதுபிரிவில் அரசருக்கேபல்லவனென்கிற பேருரியதென்றும் அந்தப்பல்லவனை ன்கிறபேர் முக்கியம் சோழன்சந்ததியாருக்கே மிகவு முரித்தானதெ ன்று விளங்கும்படிச் சொன்னதுபோ லிந்தக்கவியினாற் பல்லவர் கோன்வளவை வேந்தனென்றுங் குறித்துச்சொன்னார்

இந்தப்பரணியினுலிரணியவர்ம்மச்சோழன்முதலெல்லாச்சோ ழர்களுடைய சந்ததியார்களாகியவன்னியர்களுக்குப் பொதுவாய்

ச்சொல்லசிலையெழுபதைஇந்தப்பரணியிற்சொல்லப்பட்ட கருணாகரனவனெப்புக்கொண்டு பரிசளித்ததேதவிர வேறல்ல- ஆனாற்சிலர் திருவாரூரையரசுசெய்த முசுகுந்தச்சக்கிரவர்த்திச் சோழனுடையசந்ததியில்வந்த கருணாகரச்சோழன் சமுகத்திலிந்தச்சிலையெழுபதென்னுங் கிரந்த மரங்கேற்றல் செய்தாமென்றுசொல்லலாகாது அந்தக்கருணாகரச்சோழன் சந்ததியார் நாளதுவரையிலு மிருந்துவருகிறார்களெனபல்று சொல்லுவார்கள்- ஆதலாற்றிருவாரூரிலிருந்த சோழன்சமுகத்தி லரங்கேற்றியதென்று சொல்வதற்கு எந்தநியாயமுமில்லை - அதெப்படியெனிலோ தொண்டமண்டலத்துக்குத் தலைநகரமாகிய காஞ்சிபுரியையாண்ட கருணாகரச்சோழன்சமுகத்தி லரங்கேற்றியபடியா லந்தக் காஞ்சிபுரியைப் பிரதானமாக வைத்து மேற்படிச்சிலையெழுபதிற்புகழ்ந்திருப்பதுந்தவிர முதற்கடவுளாகியிற் காஞ்சிபுரியில் வீற்றிருக்கும் விகடசக்கர விநாயகரைத்துதித்திருப்பதுமல்லாமற் பச்சைநிறத்தையுடைய விஷ்ணுவும்,பவழநிறத்தையுடைய ருத்திரனும் வாழப்பட்ட காஞ்சிபுரத்துக்குச் சமானமான தலமில்லையென்று புகழ்ந்துசொன்னார். இந்தத்திருஷ்டாந்தத்தினாற் காஞ்சிபுரத்திற் கருணாகரச்சோழன் சமுகத்திலரங்கேற்றியதென்று ருசுவாகின்றது- சிலையெழுபதென்னுங் கிரந்தமானது தெரிந்தவர்கள்பலருமவன்னியர்களல்லது-பள்ளிகளுக்குரியதென்றுஉலகமுழுமையுந்தெரிந்திருக்கிறபடியாலும், இந்தவன்னியர்களாகியபள்ளிகள்பேரில்-மங்கலக்கவி-சாமகவி- முதலானதுமெந்தவித்வான்கள்பாடிப்புகழ்ந்தாலுஞ்சோழன்சந்ததியாரென்றுதோன்றும்படிச் சிலையெழுபதுக் குரியவரொன்றும், தொடுத்தவம்புதோருதவரொன்றும், புலிக்கொடிக் குடையவரொன்றும், இதுபோலனந்தம் ராஜ சந்ததியாரென்று தோன்றும்படியா யரசுக்குரிய தசாங்கங்களு மிவர்களுக் குரியதென்று இதுவரையிலும் புகழ்ந்து அனந்தங்கவிகளிற் பாடியிருக்கிறதல்லாம்ல் இனிமேலும்புகழ்ந்து பாட எதிர்பார்த்திருக்க மேற்படிப்பள்ளிகளாகிய வன்னியர்களை

யந்தச்சந்ததியாரல்லவென்று யார்வாய்திறந்துசொல்லுவார்களோ எனக்குத்தெரியவில்லை - இதுவல்லாமல் முன்குறித்த (பரணியான து) கருணாகரச்சோழன்பேரிற்செய்து அறிந்சொல்லப்பட்ட ராஜ பரம்பரையிற் சூரியவம்சத்தனந்த வரசர்களு மந்தச்சந்ததியில் வந்து சோழதேசத்தையாண்ட வனந்தஞ் சோழர்களு மிவன்மூ ன்னோர்களென்று குறிப்பித்துச் சொன்னதுமல்லாமல் எழுகலிங் கத்தையும் ஜெயித்ததிவனுண்மை புகழ் பெருமை-இதுகளைப்பலகா ரூயச்சொல்லியிருக்கிறதையு முணராமலும், பரணிபாடப்பெற ப்பட்டவர்க ளிப்பேர்ப்பட்டவர்களென்றுந் தெரிந்துகொள்ளா மலரசரல்லாத பலஜாதிகள்பேரிலும் பாடினதாகச் சிறந்தவிவேகி களைப்போற்சிலர்சொல்லிக்கொள்ளுகிறார்கள்-அவர்களைப்படிச்சொ ல்வதுபெரியதப்பேதவிரவேறல்ல அந்தப்பரணியினுலேயகருணாக ரன்பேரிற் சொல்லப்பட்டதென் றறிந்துக்கொள்வதுமல்லாமலிர் னமனந்த மேற்கோளானசாஸ்திர திருஷ்டாந்தங்களினு லறிந்து க்கொள்ளலாம் - அதிலொருநூல்திருஷ்டாந்தம்வருமாறு.

தொண்டைமண்டலசதகம்-௬௨-வதுகவி.

பண்டையொர்நாளையிலோழ்கலிங்கப்பரணிகொண்டு ... *
செண்டையுமேருவிற்றீட்டுவித்தோன்கழற்செப்பியன்செப் ... *
தொண்டைநன்னாடுபுரக்கின்றகோனந்திதோன்றலெங்கள் ... ... *
வண்டையர்கோனங்கருணாகரன்றொண்டைமண்டலமே ... .. *

இதின்தாத்பரியம்.

முற்காலத்திற்கலிங்கதேசத்தைச்செயித்துப் பரணிபாடப்பெ ற்றுமேருவிற் றனதுபுலிக்கொடியை யெழுதிவைத்த வீரவெண் டையந்தரித்த சோழன்மரபில்வந்துதொண்டைநாட்டை யாளப்பட் டபலம்பொருந்திய வரசருக்கரசனாகிய கருணாகரச்(சோழ)னென் பதாம்,

இந்தக்கவியிற் சொல்லடை மேருவிற்றிட்டியெழுதிவைத்தானென்றிருக்க, நாம்பலவிடங்களிலுமயமெழுதிவைத்தானென்றெழுதியிருக்கிறபடியாலும் பிரசித்தங்கொண்டார்களாதலாலதின்விபரம்வருமாறு.

மேன்மை பொருந்திய-ராஜபாரம்பரியம்-கவது-தாழிசை.

செங்கண்மிகுந்த கரிகாலனொருநாளிலிமயச் ... *
கிமயமால்வரைதிரித்தருளிமீளவதனைப் ... *
பண்டுதிண்டிறபடிதிற்கவிதுமேருமுதுகிற் ... *
பாய்புலிக்குறிபொறித்ததுமறிந்தபொழுதே ... *

நிகழ்ந்ததாதிபரியம்,

செங்கண்ணுடையாயுதத்தைக்கொண்டு கரிகாலச்சோழனானவன் உயர்ந்தகிரீடத்தையுடைய விமயமலையைக்கெடுத்து மறுபடியும் கிருபையினாலதனைப் பழையபடிதிற்கச்செய்து அந்த மேருவின்முதுகிற் பாயாதிறத்தனகருதிய புலிக்கொடியை யெழுதினானென்பதாம்.

இந்தக்கவியினால் மகாமேருவைச் சண்டியனாலடித்து முதுகு காட்டும்படிசெய்து அதற்றன்புலிக்கொடியை யெழுதினானென்று சொல்லியிருப்பதை முன்குறித்த கொண்டமண்டலச்சதக கவியிற் கருகிச்சண்டியனாலே யெழுதினானென்று சொன்னதேதவிர வேறல்ல-பாண்டியன்மேருவைத்தனதுசண்டியனாலடித்துத்தனதுமீனக் கொடியைமேருவிலெழுதினதாகத்திருவிளையாடற்புராணத்திற்சொல்லியிருக்கிறதுபோற் சோழனுக்குஞ்சொல்லியிருக்கிறபடியாற் பாண்டியன்செய்ததே சோழன்செய்ததாகச் சொன்னதோ- அல்லது- சோழன்செய்ததற்கு வேறேபிரபலமான சரித்திரமிருக்கின்றதோ எதுவுந்தெரியவில்லை - இதுவுமல்லாமல் இப்போதுசொல்லிய திருஷ்டாந்தங்கள்போக மேற்படிவன்னியரோ யரசசந்ததியாரொன்று பூர்வீகச்சாசனங்களினாற் சில திருஷ்டாந்தங்கள் வருமாறு.

வைத்தீஸ்வரன் கோயில் க்ஷத்திரிய சந்ததியாராகிய பள்ளிகள் - அல்லது-வன்னியர்களுக்குரிய மடத்தினதிலாசாசனத்தின் விபரமாவது.

(*)

புள்ளிருக்கும்வேளூர் - தாண்டவராயபண்டாரமவர்களுப்பண்ணுடானவரு மெழுதிவைத்ததாம்பிரசுதலபபட்டயம் - நெட்டெழுத்து - காஞ்சீபுர சமயங்கணிருஅயிராபதத்தாம்பிள்ளை.

சுபஸ்ரீமன் - மஹாமண்டலேஸ்வரன் - அரியராயவிபாடன்-பாண்டிக்குத்தப்புவருதகளிடன்- மூவராயகண்டன்-தேவராயகண்டன்-கண்டநாடிகொண்டமகாலடாடிகாடாதான் - பதினெட்டுகோஷ்டத்தில் வன்னியராயகண்டன் - அஸ்திரிரு மஹாகரபயங்கரன் - சமரிலமார்த்தாண்டன் - இராஜகம்பீரன் - [illegible] சக்கிரவர்த்திகளில் - அசுவபதி - கெஜபதி - நரபதி - [illegible] கோடிநாராயணன் - பூர்வ - தெக்ஷிண [illegible] - [illegible] தசமுத்திராதிபதி - ஈழமும்-குணபள்ளமுங்கொண்ட [illegible] ட்டையும் - அஸ்வமேட்டையும் - யமமலையலமும் - [illegible] ந்துறைகண்டருளியஇராஜாதிராஜன்-ராசகெம்பீரன் - [illegible] க்குராசமணியிலகு-இராஜபரகேசரி சோழகுலவல்லி - [illegible] ணமுடிகொண்டிவெதிர்த்தரசாளுவன் - ஒட்டியதலபாலன் - ஒட்டியர்மோகந்தவிழான்- சோழமண்டலப் பிரதிஷ்டாபனாசாரியன்-சோழர் மோகந்தவிழான்-பாண்டிய மண்டலப்பதிஷ்டாசனத்தான்-பாண்டியர்மோகந்தவிழான்-கொங்குமண்டலம் குறும்பறுத்து அழியாவீராணமழித்தவிராடன் - கெடிவன்னியபமிண்டன் - ரணமன்னியப்பிரியன் - கோஷ்டத்துவன்னியராய கோலாகலன் - இளவரசுமணவாளன் - கண்டியப்பிரதாபன் - கட்டாரிவல்லவன் - சங்கீதசாஹித்ய வித்யாவிநோதன்-ரணமுகசுத்தவீரன்- நகைமுகச்சந்திரோதயன்-மத்தகஜகேசரி சுத்தபரிபாலன்-மகாகாளிகுளிகணங்கள்கைகூடும் மணவாளமகம்பீரன்- எதிர்த்தோரைசினமடக்கும் வேங்கைவ

ரிப்புலியானோன் - தேன்பாயும்வளநாடன் - கொங்கர்குலாதிப
ன் - நித்தியகல்யாணமேத்தாதிபன் பூலோகதேசாதிபதிகளில் ஞா
யவம்சிலுதிபகாமன் - சிவசமயபரிபாலகன் - பூபூகாதா
ந்தாதிபதிகருணாகரன் - [illegible]டரிபாலகரான [illegible]
[illegible] - மல்லுகருப்பிமன
[illegible] - [illegible] - [illegible]
[illegible] - [illegible] - [illegible]
[illegible] - [illegible] - [illegible]

த்தகிளையாமாய்க்கொண்டி கல்லுவெட்டி- பேரிலைச்சு கிளர்கட்டி வைதுறுத்தாண்டவராபபண்டாரத்தார்குத் தாம்பிரசாதனமாகப் பட்டயம் பணணிக்கொடுத்து நாலுமண்டலம் ஐம்பத்தாறு தேசத்து ஜனங்கொண்டாடச் சொல்லி மகாமடாதிபதிம்மபிச்சை- முட்டியும் - திருவிளக்கும் - திருநந்தவனபணிவிடையும் திருமாலை பூபயமும்- மயேஸ்வரபூசையும் பண்ணிவரச்சொல்லி நம்முடையசந்ததியார் நாலுமண்டலம் - ஐபத்தாறுதேசத்திலுள்ள உறவின் முறையாரெல்லாருக்கும் கீர்த்தியும் பலனுமுண்டாகவேண்டுமென்று வாண்டையார் ஆஞ்சநேயம் - நீலங்கராயர் ஒலைப்படையாட்சி - வாளிகராயர் - சருபபுடையார் - இவர்களனைவோரும் மற்றுமுள்ள பலபட்டாரும் கட்டளையிட்டருளினார் - காணிப்பாட்சி பெருமுடக்கம் - சாதத்துழுவ - ஜெயபவிசாண்ட சோழபுரம் - செண்ணிபாடாரிகையும் - ஏழு மனதருக்கு ஏற்ற பதிமூன்று பூபக்கிரபாரமாருமிக்க பலிங்கியும் வ்வியரும் ஆகிய தாயி - சேலராதி - ஒமரிபுரி சிவ வெறுதி சிமேசிமை- பூவாணி நாடி மூலக்காடிசிமை சிசர்க்கரிகை மபவி டாரனைகு ஒங்கடமட ஸ்ரீகுப ஷியிரிக்கு பாரக்கக்கப் வாரிட து தலைக்கர்- மிக்கு ஒருகவிபாண வெலைய பயிர்வாவிட்டு சார ஒரபணம்- பெரிவிடிக்காரர் - ஒருபல தாழிலையுலாகள் - பத்துப்பணம்- திரிகாக் மடியபுரி ஒ வெபதிகள் ஐந்துபணம் - சாதியிற் குறைவுரிரு செயிதவர் அபராதனை ஒமடத்துக் சேருகிறபடியால் திருநீறு - நீ நாமம் நிடப்பர் பேர்கள் சந்திராதிருரிய ருள்ளாள்வனாக்கும் நடத்தி வருவார்களாகவும் - இந்த மடவாலையதருமத்தை விசாரித்துப்பண்டார மடர்களுக்கு இருந்தநாளையும் படிச்செலவுங்கொடுத்து உபாரமாய்வருகிவர்த்தனை தங்காமற் கொடுத்தபேர்கள் மாதுதாக்களை இரட்சித்து சிவாலயம்-பிரம்மாலயம் - பூதானம்- கோதானம் - கல்லியாதானம் செய்தபலனைப் பெறுவார்கள் - மேற்படி தை மீ தலைச் செவ்வாய்க்கிழமை உதயத்துக்குருத்திராவினைதீர்த்த சுவாமியையும் எதலம்மையையும்- முத்துக்குமாரசுவாமியையும் சேவித்தபலனைப்பெறுவார்கள் தருமவர்த்தனையைக்கொடாதவர்பாவப்பலனைப் பெறுவார்கள்.

மேற்படிச் செப்பேட்டிலெழுதியிருக்கும் இராஜாதிராஜியார்களின் விருது முப்பத்தாறும் வியாக்கியானம் வருமாறு.

பத்திரகாளியம்மனிடத்து பத்துநாளாயிடை - தேவேந்திரனிடத்து மெய்ஞ்ஞானவாயனை - கொல்லறமாலை வாரமாலை - அங்கிலி - ஞானசாஸ்திரவிலாசம் - பகலிடிவீடு - கரிகு - சகராம் - ஏழுகால்பீடம் - மழுபடைதாரணம் - பாதகவாஞ்சி - புலிவெகாடு - வெருடகைகொடி - அன்னகைகொடி - மகரகைகொடி - மச்சக்கொடி - மயிற்கொடி - சிங்கக்கொடி - தவளச்சங்கு - கள்ளாங்குழல் - வளாந்தகிக்கு - ஞாக்குடை - வெள்ளைக்குடை - பட்டவாணகக்கி - சவலைகக்கி - சாமரை - பிரியாட்டி - வெள்ளைப்பாவாடை - கதி - பட்டபா - சமதாரி - விரைதடி - லாந்தர் - கதி - வெடியம் - ஆம்பு - வில்லு - அம்புறாத்தூணி - டம்பா - வெங்கலக்கொம்பு - நகாரா - காகளமென்றுசொல்லப்பட்ட பஞ்சவர்ணதாரை (உ) மயன்வடு - செயபேரி - தடி - முட்டி - வேட்டை - தாம் அவ்விருது ௩உ.

இந்தச்செப்பேடுசாசனத்திற்குறித்துச்சொல்லப்பட்ட பரஞ்சலதேவமகாராயர் - அரிசுதனேவமகாராயர் - கிருஷ்ணதேவமகாராயர் இவர்கள் ராசகுலத்துக்கு மணிவிளக்கென்றும் - சோழசிங்கசித்தாருணனென்றும் - பாண்டியமண்டலபதிமாசமுத்தானென்றும் - அழகியவிராணமழித்த கெடிவலியமிண்டனென்றும் - பொம்மிடித்துவலியராயகோலாகாலனென்றும் - கொங்கர்குலாந்தகனென்றும் - பூலோகதேசாபிதிகளிற் சூரியவம்சகுலதீபகாருண்யனென்றும் - சொல்லிவிருப்பதினாலேயே முன்குறிப்பிட்ட இராயர்மூவர்களும் சூரியகுலத்தாரென்றும் - சோழரென்றும் - பாண்டியரென்றும் சேரரென்றும் - இவர்களெல்லாம் ஒரேகுலமென்றும் இவர்கள் வம்சியர்களென்றும் - அவர்கள்சந்ததியாராகிய ராஜகுடிகளே அந்தப்பிரதானம் - முறைகெடுத்தவர்களென்றும் ருசுவாகிறது

ந்தவிர மேற்படிச் செப்பேட்டி லெழுதியிருக்கிற இவர்களுக்குரி யவிருதுகளைக்குறித்துக் கவனித்தியோசிப்பார்களேயானால் மேற் படிவன்னியர்களே யரச சந்ததியாரெனு சாவந்தரானு பூர்த் தியாயறிந்துகொள்ளலாம்.

இந்தச்சாப்பிரசாதனத்தைக்குறித்து சிலஜாதியார்மாங்கள்ச றுமிக்கிறதற்பனையைப்போலிதுவுங் கற்பனையாயிருக்குமென்று எ ன்னுவாருமுண்டு அப்பமெண்ணப்பட்டவர்களிற் பெரும்பகுதியடத் துக்குப்போய்ச்சங்கள்சரித்திரத்தை ஆராய்ந்து செப்பிக்கொள்ளலாம்

இதுவுமல்லாமற் காஞ்சிபுரத்திலுள்ளும் சிலசாதனங்களிற் சிலவுட்பிரிவிற் சோழராசனுசாரிடமுங் கற்கள்தோறியாக எழு திக்கொடுத்த ஒருசெப்பேடுசாதனமுமுண்டு - அதுமுழுமையு மிதிலெழுதினுலகிமாக விரிபுமாதலாலுங்கருதிச்சுருக்கியி ந்தவிடத்திற்குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏகாதசலிபுகவருஷம் [illegible] மல்- சிவாகனச காப்தம் (ஸாலிவாகனசகாப்தம்) மேலடரபவாத்ரஉகுமேல்-செல்லாநின்ற வர் த்தமானசௌம்ய வருஷம்-பங்குனிமாதம்-யஎவ உத்திரநட்சத்திர த்தில் (அனேகராசராசகேசரிவேந்திர அனேகவீரப்பிரதாப-வரசைன்ய விஞசகாமாதுரயாரைரிய-காப்பிரிய பிரிய- பராக்கிரமசாலியாயிரு க்கிறகலிராஜேந்திரசோழ அரசெய்யாநின்றனில்) ஸ்ரீமல்லைகலாசதூ ய மகாஸ்தலம் காஞ்சி நகரத்திலுள்ளுக்கிருவேகம்பமுடைய நாய சுனுரைப்பூசிக்கும் மாழங்கராக்கவிற் கிம்பாசனுநாரத்தராய்த்திரிவரு வன்னருருவாயிருக்கிற அனையரதவெளத்தரியபட்டமுத்துக்கச்சேஸவ ரகுருசுவாமியாரவர்கள்மடத்துக்குச்சப்புமாமுனிவர்வெழ்வி யக்கி வியிற்பிறந்து ஜீவிக்கராகிவாதாபிரத்திலிருந்துதவாயுள்ளவகிலசத் துருநிவாரணம்பண்ணி வீரசட்டை கட்டி அகவலிக்கொடி புலி க்கொடி சிங்கக்கொடி அனுமக்கொடி பஞ்சவன்னபிரிதுபடைத் த-மதகவிவாயிர - மகுடத்தரித்தவன்னியர்-வீரமார்த்தாண்ட வன்னியர் - வீரப்பிரதாபவன்னியர்வீரதீரவன்னியர்-இந்தவரச

ர்கள் மேற்படிக் காஞ்சிபுரமுதற் - கிழக்கு, அங்கி கோட்டத்துக்கு மேற்கு, பாலக்காட்டுச்சேரிக்குக் - கிழக்கு, தேவப்பிரயாகைக்குத் தெற்கு, ராமநாதபுரத்துக்கு - வடக்கு இதற்குட்பட்ட வன்னிய வரசர்களும்மேற்படி வன்னிய வரசர்களுக்குப்படைத்துணைவர்களாகிய - நத்தமான்- சுருதிமான்- மலையமான் - இந்த மூவர்களும் மற்றவர்- வேடர்- ஏனாதிகளிந்த மூவர்களும்- மீனவர் - அவிரியர்- சுடைக்கட்டியென்னும் வேடர்- இவர்கள்மூவர்களும் ஆக - ஒன்பது பேரும் மற்ற விராஜாங்கத்துக்குரிய குடிகளும், மேற்படி யாசாரியருக்குக் கலியாணமுதலான சுபகாரியங்களுக்குக் கட்டடங் கொடுக்கவேண்டுமென்று அந்தச்சாதனத்தி லெழுதியிருக்கின்றது - இந்தச்சாதனத்தைப் பார்ப்பார்களாலுல் மேற்படிவன்னியர்கள் சோழன் சந்ததியாகிய வரசசந்ததியாரென் றறிந்துக் கொள்ளலாம்-இதுபோ லின்னுமனந்தம் ஸ்தலசாதனங்களிலுலும் இந்தவன்னியர்கள ராஜசந்ததியாரென்று தெரிந்துக்கொள்ளலாம்.

இப்போதுநானிந்தப் புஸ்தகத்திற் காட்டின சிலபுராணதிருஷ்டாந்த அனுபவத்துடன் அரசசந்ததியார் வன்னியர்களல்லது பள்ளிகளென்றுவிளங்கும்படியெழுதியிருக்கிறேனல்லவா- இதைமூடத்தன்மையைக்கைக்கொண்ட படியாதவாலீபர்களும் ஸ்திரீகளுங்கூட வொப்புக்கொள்ளுவார்கள்- அப்பேர்ப்பட்ட திருஷ்டாந்தத்தை நடுவாந்தரத்தி லுயர்ந்தவராக நடித்துக்காட்டின சிலர் வசந்தகாலத்துக் குளசலம்போ லவர்கள் மனமானதொப்புக்கொண்டு மேலுக்குக் கொதித்து வீணான குதற்கம் பேசுவார்களாலுல் நானென்னசெய்யலாம்.

ஆலுலரசசந்ததியாருக்குரிய புராணங்களாலும் திருஷ்டாந்தங்களாலும் நானின்னும் சொல்லப்புகுந்தா லந்தச் சரித்திரமாகிய நூலுக்கு இப்போதெழுதிய இந்தச் சரித்திரம் முகவுரையாகி

ய பாயிரமாக விருக்குமே தவிரவேறல்ல - ஆனால் நானப்படி விரிவாய்ச் சொல்லுகிறதற்கு முன் பாயிரத்திற் குறிக்கப்பட்ட பிரபுக்களி லேவரிலொருவராகிய மஹாராஜராஜஸ்ரீ எப்போதும் நீங்காதகுல வுத்தாரண சிந்தையராகிய - க - ஆண்டியப்ப நாயகரும், மெ யரசசந்ததியில்வந்து சுயாபிமானத்தை யிடைவிடாது கைக்கொண்ட - ம - ா ா ஸ்ரீ - மைலை இராஜகோபாலநாயகரும், எடுத்துக்கொண்ட மூலகைப் பிரயசையைப்போல் மேற்படி யரசசந்ததியார்களி லியாராகிலு மெடுத்துக்கொள்வார்களானால் நானத்தச்சரித்திரத்தை விவரித்தெழுதி வெளிப்படுத்த யெதிர்ப்பார்த்திருக்கிறேன்- அப்படியொருக்கா லின்னமும் விபரமாயெழுதி வெளியிட்டகாலத்திலும் முன்குறிக்கப்பட்டவர்கள் நம்பாமற்போவார்களானால் மேற்படி யரசசந்ததியார் தங்களுக்குரிய பூர்வஸ்வதியை யடைந்தகாலத்தில்மாத்திர நம்புவார்களோ யென்னமோ தெரியவில்லை-ஆனாலுண்மையை யிவர்களநம்பினாலென்ன நம்பாமற்போய்விட்டாலென்ன அதைக்குறித்தெனக்கு நிமித்தியமில்லை.

இதுவுமல்லாம லரசசந்ததியாரைக் குறித்துக்காட்டின திருஷ்டாந்தமுமுமையும் இந்தத் தமிழ்நாட்டிலேயே யிருப்பதால் புராண சரித்திரங்கள்பெரும்பாலும் வடதேசத்தில் நிறைந்திருபதாலிந்தச் சந்ததியாரந்த வடதேசங்களி லிருப்பார்களா இந்தச்சந்ததியாருக்குரிய - கோத்திரமும்பேரும் அவர்களுக்குமிருக்குமாவென்று சிலர்யோசிப்பார்கள் ஆனாலந்தத்தேசங்களிற் பல பாஷைகளிலிருக்கிறசகலசாஸ்திரங்களைவாசித்தறிந்துக்கொள்ளநான் திராணியில்லாதவனா யிருந்தபோதிலும் அரசசந்ததியார்கள் விஸ்தாரமாயிருக்கிறார்களென் றறிந்திருக்கிறேன்.

அதிற்சிலதுவருமாறு - இராசமயேந்திரமென்னும்தலைநகரமும், அதைச்சேர்ந்தமற்றத்தேசங்களில்வசிக்கிறராசசந்ததியார் (இராசபண்டவாரொன்றும், யல்லவரொன்றும்) சொல்லுவதல்லாமல் தங்க

ள்கோத்திரம் சம்புமகாரிஷிகோத்திரம்-பாஸ்கரகோத்திரம்- பசுபதி கோத்திரம் கலக்கமவமசம் சோலாங்ஸ்கிவம்சமென்று சொல்லப்பட்ட இவ்வுதலைமைச்சருக்கு ரியவம்சமும் கோத்திரங்களையெசெலலிலழ்ரைவருகிறார்களமல்லிகார்ச்சுனமுதலானவிடங்களி வசிக்கிறசிலர்ரெட்டிகளென்று வழங்கிவருகிறார்கள் - அவர்கள் சம்புமகாரிஷிகோத்திரமென்றுவழங்கிவருகிறார்கள் பிரதாபருத்திரன் சந்ததியாரும் தற்காலத்திலமல்லிகார்ச்சுன பர்வதத்துக்குச் சமீபத்திலிராநிற்ற ருத்திர புரத்திலவசித்துவருகிறார்கள் அவர்களும் ரெட்டியென்று வைத்துவழங்கிவருகிறார்கள்.

ஈதல்லாம லந்தவிடங்களிலவசிக்கப்பட்ட ராசாக்களென்று பூர்வீகமாய் பேர்வைத்து வழங்கிவருகிற சிலர் சம்புமகாரிஷிகோத்திரத்தாரென்று வழங்கிவருவதுமலலாமல கலியாணகாலத்தில்வன்னிமரத்தைபட்டி வைத்தும் அக்கினியையும் பூசித்துட்பிறகுமங்கிலியந்தரித்து வருகிறார்கள் இவர்களெல்லாம் கோத்தரமலலாமல் வேறு கோத்திரத்தையுடையவர்கள்பந்துக்களை கொண்டுகொடுத்தும் சம்மந்தஞ்செய்து வருகிறார்கள் - ஈதல்லாம லின்னஞ் சில திருஷ்டாந்தஞ்சொல்லுகிறேன அதெப்பிரகாரமெனில் வடதேசத்து விராநின்ற வரசசந்ததிகளெல்லாம் வல்லியரென்றே தெரிந்துகொள்ளலாம் அதுகளின விபரம் (கஅஸன) ம் வருஷம் சூன்மாதம் (௦ கூ௨)பிரசுரஞ்செய்யப்பட்ட திலவர்த்தமானி பத்திரிகையிலபங்காள பத்திரிகையில் பங்காள பாஷையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதையிதினடியிலவிவகரிக்கிறேன்.

கல்க்கத்தா-லைஸன்ஸ்வரி.

(*)

மங்கிரில் லைஸன்ஸ் வரிவசூல் செய்யும் முயற்சிக்கு அபாயம்நேரிட்டது சுதேசவர்த்தகர்கள் கடைகளை யடைத்துக் கொண்டார்கள்- தானியதவசங்க ளகப்படாததால் ஜனங்கள்மிகுந்த வவ

ஸ்தைப்படுவதால் போலீஸ்கமிஷனர் தாமே கடைக்குப்போய்ச் சேவகனைப் பக்கத்திற்பதிவிருக்கச்செய்து கடைத்தெருவிற்கூடிய ஜனங்களுக்கு மனமுருகும்படிப் பிரசங்கஞ்செய்தார் - வர்த்தகராகிய வன்னியரை மாசவாரி ஐந்நூறுரூபாய் வரும்படி யுள்ளோர் வகுப்பிற் சேர்த்ததுபற்றியே யவர்களிவ்வித விடரீதஞ்செய்தார்கள்- பஞ்சாயில் சங்கடமின்றி வரிசேர்க்கப்படுகின்றது,

இந்தப்பத்திரிகையின் சரித்திரத்தால் ராஜசந்ததியாராகிய வன்னியர்கள் மேற்படி பங்காளத்தைச்சேர்ந்த தேசங்களில் விஸ்தாரமாயிருக்கிறார்களென்றுதெரிபவருகின்றது.

இதுவுமல்லாமல்(௧அஎ)ம்-வருஷம்-செப்டம்பர் மீ-௩௨-பி ராசாஞ்செய்யப்பட்ட தினவர்த்தமானி பத்திரிகையில் பங்காளபாஷையிலிருந்து தமிழில்மொழி பெயர்க்கப்பட்டதுவருமாறு,

விவாகோச்சவச்சிலவிபரீதங்கள்.

சென்றமாதம்(௰௨)காசியில் ஸ்ரீதேவநாராயணசிங் ராஜாவிட்டில் பாபு பீலாரில் கூடிய கைச்சார்பான வன்னியர்சேவையில் [illegible] விவாகோச்சவங்களில் வரம்புகடந்து செல்லும் [illegible] கூடியவனையில் குறைக்குமுபாயஞ் செய்யப்பட்டது - சபையார் தீர்க்காலோசனைபண்ணி முக்கியமாய் மூன்று நிர்ணயங்கள் சித்தஞ்செய்தார்கள் - முதலாவது, தனவிக்க குடும்பங்களில மணமகள் வீட்டார் (௧௨௫) ரூபாய்க்கும் மத்தியமஸ்திதியிலிருக்குங் குடும்பங்களில் (௫௫) ரூபாய்க்கும் அதமஸ்திதியுடையோர் குடும்பங்களில் (௫௪) ரூபாய்க்கும் அதிகஞ் சிலவு செய்யப்படாது - மணமகன் வீட்டார்சிலவு வறையறைமுறையே ரூபாய் (௧௫௫) எஅ (௫௫) இரண்டாவது பாணவேடிக்கை-கச்சேரி-முதலிய- அதிகபணச் செலவுள்ள விநோதங்கள் அனாவசியமாதலால் அவைகளைக் கட்டாயமாய்த்தவிர்க்கவேணும்-மூன்றாவது வறிஞராகிய மாதா பிதாதங்கள் தங்கள் புத்திரர்களுக்குச்சீதனங்கொடுக்க வகையின்றிவருந்துதல்

சுற்றத்தார்கள் தலைக்கு இவ்வளவென்று பங்குவிகிதம் போட்டுத் தொகைசேர்த்துக் கொடுத்து வுதவவேண்டும் - மேற்சொல்லியவு பாயங்களைப்பிறர்காரியத்திற்சிந்தைவைத்திருக்கும்- பாபு-பிரிலால் என்னும் தர்மதுரைசெய்ததைக்குறித்து யாவரும் அவரை வியக்க த்தகும்.

இந்தச்சரித்திரத்தால் காசி-முதலான வங்காளங்களிலிருக்கி ற் வன்னியர்கள அரசசற்றதியாரெனனும - அவர்கள் ரசபுத்திரரொ ல்றுயாவருக்குந்தெரியவிரலாம்,

இறுவுர் மேற்படி (கஎஎல) வருஷம் செப்டம்பர் மா ம்- பிரசுரஞ்செய்யப்பட்ட திலவர்த்தமானி பத்திரி கையில் பங்காளபாஷையிலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.

இவையும் - முன்பத்திரிகையைக் குறித்த

விவாகச்சிலவின் சுருக்கம்,

வடகரை பாஷையிற் பிரசுரமாகும் பத்திரிகை யொன்றில் விவாகச்சிலவைத்தொட்டெளிப்பட்ட சிலவிஷயங்களை நமது யி ஷிடர்க ளறியப்பெயர்த்தச்சிடுகிறோம்.

விவாகசசிலவைப்பற்றி பூகிக்கப்பட்ட சீர்திருத்தம் முக்கி யமாய்க்காயாத்தியருக்குள் நிலைப்படுமெனத்தோன்றுகின்றது - வி ஜயநகரத்தரசர் கூத்திரிய குலத்தாருக் கிவ்விஷயத்தினருமை பெருமையையும்-ஆவசியகத்தையுணர்த்திப் புத்திவருவிக்கத்தம்மா லமையும் பிரயத்தினஞ்செய்யக் கருதுவதாகக் குறிப்பித்தார்-திர விய நிர்வாகிகளல்லாத குடும்பத்தார்களும் விவாகோச்சவங்களி ல வரவர்கைப்பொருளளவிற் தமிஞ்சிதிரவியவிரயஞ்செய்து கடன்ப

[illegible]ரித்திரதிசையிலிருந்து வருகிறார்கள் - இம்மதிகேட்டைத் தவிர்க்குமுபாயமும் - எத்தலமாஞ் செய்த வாரணாசி மகாராஜா விஜயநகரத் தரசர் ஸ்ரீ ராஜதேவநாராயணசிங் முலஷி பேர்லால் இந்நூல்வரையும் யாவரும் பாராட்டிப் புகழ்ந்துகொண்டாடத்தகும் - மேற்சொல்லிய நூல்வரில முதியபிரபுக்க ளிருவரும் பெருந்தனமுள்ளகுடும்பங்களி லிவாகமகோச்சவங்களில் நிலவிடக்குறித்துச் சொல்லக-வாம்பு (௧௪ ரூபாய் விவாகச்சடங்குகளில் நெடிதிடக்கடவிய நட்சத்திரநாளிகள்-முதலானவர்களுக்குப் பிராம்பலாக நாள் கழிக்கும் பிராமணருக்கும்- லக்ஷசகெடியாசகளுஞ்செய்வாருக்கும் பாழிலி லறக்கும்நாரவிய கைதேசத்துக்குறிலையான பயன் வினவிய [illegible] [illegible] [illegible]

தட்சணபாகமாகிய (டெக்சான்) பாகத்திலும் வடயித்தியாவிலுமிருக்கும் சாசனத்திற்சொல்லியிருக்கிறபடி கிருஷ்ணராமர் நாட்கண்டுபிடிக்கப்பட்ட சாதாரணமான நாமர் பொருந்திய ரசபுத்திரகுலத்திற் சேர்ந்தவர்களாக விருந்தார்களென்று காணப்படுகின்றது - சலிக்கிய மென்கிறபட்டத்தையுடைய முப்பத்தாறுராசபரம்பரையிற் வந்திருக்கிறபட்டயத்தில் அவர்கள் பேர்வந்திருப்பதைப்பற்றி வெள்ளைமேற்படியரசர்கள் வம்சத்திற் சேர்ந்தவர்களோ யில்லையோ - ஆனால் (கர்னல் டாட்) என்பார் அவர்களை (சோலங்கிஸ்) என்பவர்களோடாவது (ஜூலாதிபி) லிருக்கிற (அனல்வாரா) பட்டணத்தையாண்டார்களோடாவது சொல்லுகிறார் மேற்படி சோலங்கிராசவம்சமும் அக்கினிவம்சத்தின் நாலுவிதபிரிவில் ஒருபிரிவாகென்று சொல்லுகிறார் ஆனால் சலிக்கியராசவம்சமும் மேற்படி சோலங்கிராசவம்சத்தில் சேர்ந்தவர்களாயிருந்தும் தாங்கள் சந்திரகுலவரசரென்றும் சொல்லிக்கொள்ளுகிறார்கள் - ஆனால் (கர்னல்-டாட்) முதலியவர்கள் அவர்கள் அக்கினிகுலத்தைச்சார்ந்தவர்களென்றே சொல்லுகிறார்களென்றே சொல்கிறார்.

இந்தச்சரித்திரங்களைச் சிரத்தூக்கிப்பார்க்குமிடத்தில் விசயநகரத்தரசன் சந்ததிச்சூர்யகுலமென்றும்- சலிக்கிய வம்சத்தாராசியசந்திரகுலமென்றும்- சொல்லுமல்லாமல் நாலிந்தப்புத்தகத்தில் ௩-வது அதிகாரம் ௩வது-பிரிவு (சான்கிளார்கு-மார்ஷிமென்) என்பவராற் சொல்லியதை நானுங்குறிப்பிட்டிருக்கிறேனல்லவா - அதுபோலக்கிளிமூலமாயுற்பத்தியானரசபுத்திரனென்று சொல்லப்பட்டநாலுவன்னிடரிலொருபிரிவாகச்சொல்லுகிறபடியாலும் ஈஸ்வரனுக்கு நிகரபோராகிய சம்புகோத்திரத்துக்குப் பதிலாய்ப் பகட்டுகோத்திரமென்றுமெங்குவதினாலும் நாலிந்தப்புத்தகத்தில் ௩வது- அதிகாரம் ௪வது பிரிவில் மூன்றுகுலத்தாரும் ஒரேவம்சமென்று சொன்னதுபோல அந்நிகுலத்தில்வந்த ராசபுத்திரர்களுள்ளே ஒருபிரிவார்சந்திரவம்சமென்றும், அல்லது சலிக்கியவம்சமென்றும், ஒருபிரிவார்சூர்யவம்சமென்றும் மெங்கிவருகிறார்கள்-அதுபோலவே விசயநகரத்தரசரும் அக்நிவம்சத்திற்சேர்ந்த ராசபுத்திரர்களொருபிரிவாயிருந்து சூர்யவம்சமென்று சொல்லிக்கொள்ளுகிறார்கள் - ஆனாலவரும்

வாரணவாசியான காசிராசன்முதலானவனந்தவரசர்களும் க்ஷத்திரியராகிய வன்னியர்களேதவிர வேறல்ல. இதல்லாம லின்னுமனந்தம் பங்கால் பேபர்களால் மேற்படி யிடங்களில் ராஜசந்ததியாராகிய வன்னியர்க ளனந்தமாக விருக்கிறார்களென்றுருசுவாகின்றது- வேண்டியவர்கள் விசாரித்த ற்றெரிந்துகொள்ளலாம்.

ஆனாலிந்தப் புத்தகத்தில் க்ஷத்திரியர்களென்று சொல்லப்பட்ட வரசசந்ததியாருக்கு அனந்தம் பட்டப் பேர் வந்திருக்கின்றதென்றும் - அதிற்பிரதானமானது - வன்னியர் - பல்லவர் வில்லவர்- அல்லது - சாமந்தர்- படையாசிகள் - பள்ளிகளென்றும்- அவர்களே சூரியகுலம் - சந்திரகுலமென்று சொல்லப்பட்ட இரண்டு பிரிவாகவும்- அல்லது - அக்கினிகுலம் - சூரியகுலம் - சந்திரகுலமென்றுசொல்லப்பட்ட மூன்று பிரிவாகவும்- இந்தியாமுழுமையும் மரசுசெய்தவனென்றும் - இந்தியாவிற் றமிழ்நாட்டிற் - சேர சோழ- பாண்டியர்களென்று போவகித்து அனாதிகாலமாய் அரசு செய்து வந்தவர்களென்றும்- அந்தச் சந்ததியார்கள் தத்காலத்தில் மூன்குறிக்கப்பட்ட பேர்களுடையவர்களாயிருந்து வருகிறார்களென்றும்- புராணசாஸ்திர பூர்வீகமாகவும்- சாசனப் பத்திரிகையனுபவ திருஷ்டாந்தமாகவுஞ் சுருக்கியமுதிவெளியிட்டிருப்பதைப்பற்றியும்- இந்தநாட்டில்மேற்படிச்சந்ததியாருக்குப் பள்ளியென்கிறபேரே பெரும்பாலும் வழங்கிவருவதாலும் பொறாமையையெக்காலமுங்கைக்கொண்டசில அவிவிவேகிள் ஆதி க்ஷத்திரிய சந்ததி யிவர்ளெப்பயாவார்கள் - ஆனாலிவர்கள் சந்ததியி லிருந்த மூன்றோர்களாகிய சிலர்கள் இந்ததமிழ் நாட்டி லரசுசெய்திருப்பார்களேதவிர ஆதிகாலங்களில் வடதேசமுதலான வனந்தவிடங்களி லரசை ஸ்தாபித்த க்ஷத்திரியராகிய வரசசந்ததியார்க ளல்லவென்றும்- நான்பள்ளியென்கிறபேரே மூன்றுவதுதிகாரம் - ஏழாவது பிரிவிற் கடவுளுக்குரியதென்றும் - அந்தப்பேரை யரசர்கள் தங்களுக்குமேலான சிறப்புப் பேராய் வைத்து வழங்கி வந்தார்களென்றும் - அதைப்பற்றியே யவர்கள் சந்ததியார்களு மந்தப் பெயரைப் பிரதானமாய் வைத்து வழங்கி வந்தார்களென்று

நாலாவ ததிகாரத்தில் - முதலாவது பிரிவி லந்தப்பெயரைத் தத் காலத்திலுமரசர்கள் வைத்து வழங்கிவருகிறார்க ளென்றெழுதின திருஷ்டாந்தங்களெல்லாமவமதித்து இந்தப் பள்ளிகளாபூர்வீக வர சசந்ததியார்களென் றேளிதங்கள் செய்வார்கள்-

அப்படியேளிதஞ்செய்யபபட்டமுழு மூடசிகாமணிகளுக்கு ஆ திபாரசசந்ததியார்பள்ளிகள்தவிரவேறேயொருஜாதியாரல்லவென்று ம் - ,ரசருக்துரிய வன்ந்தம்பேர்களி லாதியிற் பிரதானமாய் வ ழங்கிவந்தது- பள்ளியென்கிற பேரேயென்றும், இந்தநாட்டிலு ம் வடதேசங்களிலும்-நூலாலும்-சாட்சியினாலும்-அனுபவத்தினாலும் ருபிக்க வனந்தம் நியாயமான திருஷ்டாந்தமிருக்கின்றது-அப்பே ரிடப்பட்ட திருஷ்டாந்தமாக நூற்களைக்கொண் டெழுதவந்தா லது வேயொருபெரிய புத்தகமாகமுடியும்- அல்லவென்றப்படி யெழுதி னாலும் அவிவிவேகிக்குச்(சாஸ்திரம்பாரமென்றுசொன்ன பழமொ ழிகயப்போல்)சாஸ்திரங்களைச் செவ்வையாய் விசாரித்துப் பாராமல் குதற்கம்பேசுவார்கள் - ஆதலால் நானின்னமு மெழுதவேண்டி ய நூல் திருஷ்டாந்த வனுபவங்களை நிறுத்தி இந்தக்கண்டம் - இந் தத்தேசம் - இந்தஜாதி- இந்தமதம்- எதினுஞ் சம்மந்தப்படாத ஐ ரோப்பியா துரைகளெழுதினவனந்தங் கிரந்தங்களில் ஒருவ ரொரு கிரந்தத்திலெழுதின சரித்திரத்தை இதனடியிற் சுருக்கி யெழுதுகி றேன் - அந்தச் சரித்திரத்தினாற் பள்ளிகளே யாதி க்ஷத்திரிய ராகிய வரசசந்ததியாரென்று தெரிந்துக்கொள்ளலாம் - அதின் விபரம் வருமாறு (ரொவரொன்-டி-மாரிஸ்) துரையவர்கள் (க-கூரு)ம்-வருஷத்திற்பிரசித்தப்படுத்தின இந்தியாதேசசரித்திரத் தில் முதலாது வாலத்தில்-எழுபத்திரண்டாவது பக்கத்திற் சொல் லுகிறதாவது (கஎஎரு) ம்-வருஷத்தில் இந்துக்களுக்கு நியாயமான யேற்பாடுசெய்வதற்காகவும்நியாயமாயிவர்களைப் பரிபாலிக்கிறதா

வு மாலோசனை செய்வதற்குப் பங்காளத்து(கவர்னர் ஜெனரல் அவர்கள்) பண்டிதர்களை யழைப்பித்து ஆலோசனை செய்கிறபோது அவர்கள் மனிதப்பிறவிக ளாரம்பத்திற் பஞ்சபூதங்களுற்பத்தியானபிற்பாடு - பிரம்மாவென்றொரு சொரூபி சகலத்தையுஞ் சிருஷ்டிப்பதற் குண்டானபடியால் தனது வாயிலிருந்து பிராமணர்களையுந் தனது புயத்திலிருந்து க்ஷத்திரியர்களையும் துடையிலிருந்து வைசியர்களையும் - பாதத்திலிருந்து சூத்திரர்களையு முண்டுபண்ணினார்களென்று சொல்லுகிறார்களென்றும்-(எங்) வது [illegible] ற்சொல்லுகிறதென்னவெல்லாம்- பிராமணர் வாழ்ப்பதற் [illegible] பதபங்களைச்செய்வதற்கும்- இதரர்களுக்குப்போதிப்பதற் [illegible] த்திரியர்கள் பிரம்மா புயத்திலிருந்து பிறந்தபடியால் பிராமணருக்கு விவேகத்தைக்கொடுத்ததுபோலிவர்களுக்குப்பலத்தைக்கொடுத்து வில்தொடுக்கவும் யுத்தஞ்செய்யவும் உலகத்தை யாளுற்றதற்கும் வைசியர்கள் துடையிலிருந்து வுற்பத்திசெய்து பிராமணத்தைக்காப்பாற்றவேண்டிய வஸ்துக்களைச் சித்தஞ் செய்வதற்காக விவசாயம் வர்த்தகஞ்செய்வதற்கும்- சூத்திரர்களைச் சரிவழியங்களையுஞ் செய்வதற்காகப்பாதத்திலிருந்து வுண்டாகின தாகவுஞ் சொல்லுகின்றதென்று மெழுதியிருக்கிறபடியால் (மிதிற்) பங்காளசாஸ்திரிகள் அந்தத்தேசத்திலிருக்கிறவேதபுராணங்களைப்போல் க்ஷத்திரியர்களுக்கு விற்றொடுக்கவும்- யுத்தஞ்செய்யவும்- உலகத்தையாளவும் பலத்தைக்கொடுத்தாரென்றுசொல்வதற்குத்திருஷ்டாந்தம்- இந்தத்தமிழ்நாட்டி லரசருக்குள் முதன்மையான சேரனுக்கு வில்லவனென்றும் - இந்நாட்டி லிருக்கு மரச சந்ததியாருக்கு வில்லைப்பற்றிப் பாடப்பட்ட எழுபதுபாட்டென் றர்த்தத்தைத் தரப்பட்ட சிலையெழுபதென்னுங் கிரந்தத்தில் வில்லைத்தொடுத்து செயம்பெறப்பட்டதையும் உலகத்தைப் பரிபாலனஞ் செய்வதையுஞ் சொல்

[illegible] பிவர்கள் பூர்வ வரச சந்ததியாரொன்று ருசுவா

(ஸ௩) வது பக்கத்திற் சொல்லியிருக்கின்றதாவது (ஏஷியாடிக் ரீசர்செஸ்) என்னுங்கிரந்தம் இரண்டாவது வாலத்தில்- சூரிய-சந்திர- வம்சத்தாரைக்குறித்துச் சொல்லியிருக்குதென்றும் - (ச௩) வது-பக்கத்தில் (கல்டியா) தேசத்துப்பிரதம வரசனுடைய பேர் (ஆலோரஸ) என்பதாயிருக்கிறதென்றும் - அந்தநாமத்தைப் பதக்கிரகஞ்செய்தால் (எல) தெய்வமென்றும்-(ஆர்) நெருப்பென்றுமாகும் இவ்விரண்டுசெப்தத்தைப் பார்க்கிறபோது அக்கினியினுடையதெய்வமாயிருந்தானென்று காணப்படுகின்றது - இதையோ சித்துமளவில் (ஏருபதியா) தேசத்தில் (ஆர்றயிட்) என்பவனைத்தெய்வமாகவணங்கிவந்தார்களோ யவன் (சூரிய) வம்சத்துக்கு மூலபுருஷனாயிருந்தான் (எருபதியா) தேசத்து (மினிஸ்) என்பவன் ஏழாவது மறு இவனுக்கே (வைஸ்சுத) வென்னும் பேருண்டாச்சுது- ஆரம்பிரதமமனுவானவர் பிரியமாயிருந்தபடியால்சுயம்புவென்று பிரஸ்தாபப்பட்டவரா யிருந்தானென்று சொல்லியிருக்கின்றது இதினாலென்ன ருஷிடாந்த பிராயத்தினால் க்ஷத்திரிய வம்சத்துக்கு மூலம் அக்கினியென்பவன்- அதுவே சூரியவம்சமென்றும் - க்ஷத்திரியவம்சத்து முதலாவதுருக்சுயம்புவென்று பேர்வந்திருப்பதைப் பற்றி யந்தவசந்தியோடு ஆரவுவரையிற் றொடர்மாகச் சம்புகோத்திரத்தாரென்று வழங்கிவருகிறதாகத் தெரியவருகின்றது, -

(ச௪) வது பக்கத்தில் இதற்குமுன்பாக (கால்டியன்- அல்லோரஸ்) என்பவனுக்கும் (எருபதியா) தேசத்தின் (ஆர்றயிட்) என்னும் பிரதமதெய்வத்துக்கும்- சூரியனுக்கும்- சமப்படுத்திப் பார்த்திருக்கிறோம்- அதின்பிரகாரமேதான் (ஈஜிப்ஷியன்-வல்கன்) என்னும் இந்துதேசத்திற் சொல்லப்படுகிற (அக்நி) என்பவன் இடியையுண்டுபண்ணினவன் இதேப்பிரகாரம் இந்துக்களுடைய புராணங்களிலக்கினியென்பவன் அக்கினியாஸ்திரங்களை யுற்பத்தி செய்தவனென்று சொல்லப்படுகிற அவன்ரூபத்தைச்சித்திரித்திருக்கப்பட்ட படத்தில் நாலுகையையுடையவனாயும் - ஆட்டுக்கிடாவை வாகனமாகவுடை

யவனாயும்- அவன் சிரசைச்சுற்றிச் சுவாலைபிரகாசித்துக் கொண்டிருக்குதென்றுசொல்லப்பட்டிருக்கின்றதென்றும்-(சஉக)வது-பக்கத்தில்(போகார்ட்) என்பவர் செய்தகிரந்தத்திற் சொல்லுகிறபிரகாரம் (கிறைசார்) என்னும்வார்த்தை யக்கினியையுர்பத்திச்செய்ததாக அர்த்தமாகுமென்றும்-(சஉரு) வது- பக்கத்தில் (லீனஸ்) என்பவருடைய சந்ததியிற் சொல்லியிருக்கின்றதினால் அவன்றுதித்ததெய்வம் மூன்று குணமுள்ளதா யிருந்ததென்று தெரிந்துக்கொள்ளலாம்.

அதாவது (பாஸ்)பிரகாசம்(அர்)நெருப்பு'பிளாஸ்)சுவாலைதுகளாகிய சூரியனைத் துதித்துவந்தாரொன்றுசொல்லப்படுகின்றதென்று யெழுதியிருக்கின்ற சரித்திரங்களினாலிந்தப் புத்தகத்தில்- மூன், மூன்றுவதிகாரம்-நாலாவது- பிரிவிற் சோமசூரிய வக்கினியென்று சொல்லப்பட்ட மூன்றுகுலமுமொன்றென்றும் - மூன்றுகுலத்துக்கும் மூலமான மூன்றுசுடர்களுமொன்றென்றும் மூன்று சுடருக்கு மூலமக்கினியென்றும்- நானெழுதினதற்குத் திருஷ்டாந்தமாகவக்கினியே க்ஷத்திரியருக்கு ஆதிமூலபுருஷனாகவும் - அவனே மூன்று குணமுள்ள சூரியனாகவுஞ் சொல்லுகிறபடியா லந்த வக்கினியினுடைய குணங்களைப்பற்றி யக்கினிகுலமென்றும் - சூரியகுலமென்றும்- சந்திரகுலமென்றும்- அவர்களுக்கே வமனியாகளென்றும் வழங்குவது சரியானநியாயமாயிருக்கின்றது,

ஈதல்லாமல் மேற்படிப்புத்தகம் இரண்டாவது வாலத்தில்-(சஎ)பக்கத்தில் இந்தியா தேசத்திலிருந்தோ பாரசீகத்திலிருந்தோ நாலுவிதமான ஜாதியார் (சர்மா) அல்லது (எருபதியா) தேசத்திற் குடியேறினார்கள்- இவர்களிற் பிரதானமானவர்கள் மிகவும்பலவந்தர்களா யிருந்த பள்ளிகளென்பவர்கள் இவர்களே (எருடதியா) தேசத்துவரசர்களாயிருந்தார்கள் (ருரு)வது-பக்கத்திற் சூரியவம்சத்தில் முதலாவது மூன்றரசர்கள்பேதமில்லாம லந்தநாமத்தையுடையவர்களாயிருந்தார்களென்றும் - (எகூ) வது-பக்கத்தில் இந்தியாதேசத்திற் கடவுள் பரசுராமனென்னும்ஆறுவ தவதாரஞ்செய்து க்ஷத்திரியர்களை சம்மரித்தபோது (எருபதியா) தேசத்தைப்

பள்ளிகளென்று சொல்லப்பட்ட வரசர்க ளாண்டார்களென்றும் (கஅ) வது பக்கத்தில் ஜமதக்கினியுடைய குமாரனான பரசுராமனாற் றகப்பனைக் கொலைசெய்த அரசனுக்குச் சகாயமாக (எரூப தியா) தேசத்து வரசர்களாகிய பள்ளிகள் வந்தார்களென்றும் சொல்லுகிற சரித்திரத்தினு லித்தப்பள்ளிகள் ஆதிகாலமுத லரசாண்டார்களென்றும் - இவர்கள் சூரிய சலத்தானென்றும் - தங்கள் குலத்தானுகிய கார்த்தவீரியார்ச்சுனனுக்குச்சகாயஞ்செய்தானென்றும் - திருஷ்டாந்தப்படுகின்றது.

இரண்டாவது வாலம்-மூன்றுவதுபிரிவு இரண்டாவதத்தியாயம்-கஅ வது பக்கத்தில்- (கர்ணல்-போலீய)ருடைய வைராக்கியத்தினுலும் - பாகியத்தினுலும் - இந்துக்களுக்குரிய நாலுவேதங்களையும் - நாற்பத்திரண்டு பெரிய புத்தகங்களாக வெழுதி [லண்டன் பிரிடிஷ் மியூஜியமாகிய] இங்கிலாண்ட் தேசத்திலிருக்கிற புத்தகசாலையில் வைத்தார் - இந்தாநலு வேதமும் நாற்பத்திரண்டு கிரந்தங்களாயெப்படியாச்சுதென்றுல் ஒவ்வொருவிஷயத்தைப்பற்றியொவ்வொருகிரந்தமிருக்கலாம்- அதெப்படியென்றுல்- முதலாவது தெய்வத்தைத் துதிக்கிற பாட்டுகளைக் குறித்தும்- இரண்டாவது அரச - ரல்லது சக்கிரவர்த்திகள் பரிபாலனஞ்செய்ய வேண்டியதைக்குறித்தும்- மூன்றுவது சோதிடத்தைக்குறித்தும் - நான்காவது கோணங்களைக்குறித்தும்- ஐந்தாவது- வயித்தியத்தைக்குறித்தும்-ஆறுவது வாதப்பேய்களைக்குறித்தும்- மேற்கண்ட பிரிவுகளாயிருக்கிற யிந்தவேதங்களை நாமிவ்வளவு யெளிதாற் றெரிந்துகொண்டிருப்பதாலந்தவேதங்கள் காஷிமீரிலும் - காசியிலுமிருக்கிற பிராமணரிடத்திற் சுகமாய் நித்திரைப்போகுதென்றும் [எரூபத்] தேசத்திற் கோப்பியமான கிரந்தங்களைக்[கிரீக்]பாஷையிற் [சங்கநாத] னென்பவனு லொருவேதர் மொழிபெயர்க்கப்பட்டது-அதற்குத்திருஷ்டாந்தம் [பிபிலி-ஆதிகாகிரிகா]கிரந்தத்தில்-முதலாவது - வாலம்[எரு]வது-பக்கத்தில்- மேற்படி மொழிபெயர்க்கப்பட்டது ருசுவாகின்றது- ஆனுலது வேதமோ புராணமோ- அல்லது-வேதத்தினுடைய பொருளோ-அல்லது - இந்தியாதேசத்திற்பிரபல்யமாயிருக்கிறதேவகிரந்தங்களிற் சொல்லியிருக்கிற மதத்தையும் சாஸ்திரத்தையுங் குறித்து

ம்- ஆதிபேடங்களும் கிரந்த கர்த்தாக்களாலு மெழுதப்பட்ட கிரந்தங்கள் சாசனத்திலெழுதியதென்று தெரிந்துக்கொண்டேன்.

புராணத்திலிந்தக் கிரந்தங்களை இந்தியா தேசத்திலிருந்து (எகுபத்) தேசத்துக்குத் துறத்தப்பட்ட பூர்வீகஸ்தியாசக்கிரவர்த்திகளாகிய குற்றமற்ற நிஷ்கபடிகளாகிய பள்ளிகளாற் கொண்டு போகப்பட்டது ஒவ்வொரு விவ்வளவுவிஸ்தாரமானதாங்க ளிவித்தகண்டத்தை விட்டுவிட்டுப் புறதேசத்துக்குப் போனதைக் குறித்து இந்தியா சரித்திரத்தில் முக்கியமான ஓர் பெரிய பாகமா யிருக்கின்றதென்றும் - (கசஈ) வது - பக்கத்தில் (வராகதீபம்) அல்லது ஐரோப்பா கண்டத்தைக் குறித்த சரித்திரங்க ளந்தியத்தில் ஒத்துவரப்போகிறபடியா லிந்த விடத்தில் விஸ்தாரமாய்ச் சொல்லவேண்டிய வவசியமா யிருக்கின்றதென்றும்- அப்படிச் சொல்லும்போது (உல்பர்ட்டு) துரையவர்களாற் சொல்லப்பட்ட கிரந்தத்தின் வார்த்தைகளை யிவடத்திற்சொல்லுகிறேன் - ஏனென்றால் அதைச்சுருக்கமாச்சொல்லுகிறதற்கு அசாத்தியமாயிருக்கிறது-

அதைவாசிக்கிறபோது எஷ்பா கண்டத்திலும் ஐரோப்பா கண்டத்திலுமிந்தப் பள்ளிகள் செய்த ஜெயா ஜெயகரியங்களிதின் வின்றெரியப்படும்- [உல்பர்ட்டு] துரையவர்கள் சொல்லுகிறதென்னவேன்றால் விந்தியபர்வதத்தின்மேல் சிம்யாதனத்தையுடைய துஷ்டிருத்தியமும் அவபக்தியுமுள்ள நாரகியல்லது சடமகிருதபாலஷியில் தார்ஷியாவென்னு மிராட்சசனுடைய கடுமானவக்ரமங்களாலே நல்லநடத்தையுடைய சத்குணமான வம்சத்தார்களாகிய பள்ளிகளிந்தியா தேசத்தை விட்டுவிட்டு முன்குறித்த-எகுபத்தேசத்தில் நயில் என்கிறநதியோரத்திற்போய்ச் சேர்ந்தார்களென்றும்- உக்ரகுமாரனான இருசு - அல்லது பிங்காக்ஷ்லப்பவன் விந்தியபர்வதத்திலிருந்து உற்பத்தியான நரவிர்தியாவென்னு நதியின்சமீபத்தில் காசிகருத்தென்மேற்குத் தலத்தி லாசுசெய்து வந்தான் . அவனந்த விந்தியபர்வதங்களுக்குத் தெற்கே வாசஞ்செய்துவந்த தலத்துக்குப் பள்ளியென்கிறபேருண்டாச்சுது - இப்போ பள்ளியென்கிற வார்த்தைக்குத்தாத்பரிய மென்னவென்றால்- ஒருபரிபட்டணமும் அதைச்சேர்ந்த மாகாணங்களாம்.

பாலாவென்பது ஆட்டைக்காப்பாற்றுகிறவனென்றெண்ணப்படும் (ஆனாலிந்தக்கிரந்தகர்த்தா பாலாவென்பதற்கு அர்த்தம்-ஆட்டைக்காப்பாற்றுகிறவனென் றெழுதியிருப்பதை யோசிக்குமளவில்லை வளவும்பொருந்தவில்லை ஏனென்றால்-பாலாவென்பதற்கு அர்த்தம்-காப்பாற்றுகிறவன் அல்லது- இரட்சிக்கிறவனென்றுதாத்பரியப்படுமேதவிரவேறல்ல) ஆதலால்சர்வத்தையும்காப்பாற்றுகிற அரசனென்றேயர்த்தமாருமேதவிர ஆட்டைமாத்திரங் காப்பாற்றுகிறவனென்றர்த்தமாகமாட்டாது - இப்படிவிர மேற்படி இருசுவென்பவன் பலவந்தனாயும் யுத்தசாலியான வரசனாயிருந்தாலும் மிகவும் தேவபக்தியுள்ளவனாயிருந்தான் - இவ்வுசகோதரனை முன் சொல்லப்பட்ட தாரிகூபாவென்பவன் விந்திய பர்வதத்தில்போரில் இராசரீகஞ் செய்தவன் - இவன் அவயவத்தையுடையவனாயும்-ஒரு ராகுணமுள்ளவனாயுமிருந்து தன் ஜடிஜனங்கள்செய்யு மக்ரமங்களை யங்கீகரித்திருந்தான்- ஆனாலிவ்வுசகோதரனாகிய மேற்சொல்லிய நல்லவரசனக்காலத்திலந்த விந்தியபர்வதத்தின்மேலேறி அப்புறமிருங்கிக்காசிக்குயாத்திரைச் செய்பவர்களுக்கு வேண்டியதைக்கொடுத்துச்சகாயஞ்செய்து அவர்களைக்காப்பாற்றினான் - இப்படிநன்மைசெய்தபடியா லந்தத் துஷ்டசகோதரனுக்குக் கோபம்வந்து இருசுவென்பவன் மேற்படையெடுத்து மேற்படி இருசுவென்பவன்தன்னுடைய விராச்சியத்தைவிட்டுவிட்டுப்போய்விடும்படியுத்தஞ்செய்தான்.

ஆனால் மஹாதேவர் ஓடிப்போகிற வரசனுக்கும் அவனோடு போன விசுவாசம்நிறைந்த பள்ளிகளுக்கும் சகாயஞ்செய்து அவர்களைச் சங்கதீபத்தில் காளி அல்லது நயில் என்னும் நதியோரத்துக்கிட்டுக்கொண்டு போனாரென்றும் - அந்தக்கிரந்தத்திற் சொல்லியிருக்கின்றது- அந்தத்தலத்தி லவர்கள்- சார்மிகா- அல்லது - சீனைஸ் என்பவர்களைக்கண்டு அவர்களோடுகுடித்தனஞ் செய்துவந்தார்கள் இவர்க ளந்தத்தேசத்திற் புண்யபதி- அல்லது- புண்ணியதலம் என்றுஒருதேவஸ்தானமு மொருபட்டணமுங்கட்டினார்கள்.

இவ்விரண்டுவார்த்தையின் தாத்பரியம்- பரிசுத்தமானதல்லமென்றும்(கசச)வது -பக்கத்தில் - மூன்சொன்னதலத்துக்குயாத்திரைப்போனவர்கள்பரிசுத்தமாவார்களென்றும் நாளதுவரையிலந்தக்காளியென்கிற தலம் மந்திரபர்வதத்தின் கீழிருக்கிறதாயிந்துக்கள்நம்புகிறார்கள்- புராணத்தி லந்தத்தலத்தைச் சிவந்த பூமியென்றுசொல்லப்படுகின்றது.

அதுவுமல்லாமல்(அந்த)மலைகளின்மேலந்தப்பள்ளிகளும் அவருடையபக்தியையுடைய வரசனும் நியாயமானசந்தோஷித்தையனுபவித்துக்கொண்டுஇமையபர்வதச் சிகரத்தில்காந்தர்வாளைப்போலிப்போதும் வாசஞ்செய்துக்கொண்டிருக்கிறார்களென்றும் எண்ணப்படுகின்றது-அவர்கள் பாக்கியவந்தர்களாயும்- பரிசுத்தமுடையவர்களாயும்-சந்தோஷித்தையுடையவர்களாயுமிருக்கிறார்கள்.

